





# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:225 | 01-03-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

01.03.2026 மாசி 17
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.28

திதி:
இன்று இரவு 7.33 வரை
திரயோதசி பின்பு சதுர்த்தசி.

நட்சத்திரம்:
இன்று காலை 8.53 வரை
பூசம் பின்பு ஆயில்யம்.

யோகம் :
இன்று மாலை
2.54 வரை சோபனம்
பின்பு அதிகண்டம்.

கரணம் :
இன்று காலை 8.18 வரை
கௌலவம் இரவு 7.33 வரை
தைதுலம் பின்பு கரசை

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும்
சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று காலை 8.53 வரை
மூலம் பின்பு பூராடம்.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 3.30 – 4.30.

இராகு காலம்
மாலை 4.30 – 6.00.

எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

இன்று பிரதோஷம் நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்கா திடீர் தாக்குதல்





**தெஹ்ரான், மார்ச் 1:** ஈரானுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நிலவி வருகிறது. இஸ்ரேல், அமெரிக்காவை ஈரான் எதிரியாக கருதிகிறது. இஸ்ரேலும், அமெரிக்காவும் அழிக்கப்பட வேண்டும் என்ற முழக்கத்தை ஈரான் தொடர்ந்து கூறி வருகிறது. மேலும், இஸ்ரேலுக்கு அண்டை நாடான லெபனானில் ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவுக்கும், ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும், காசா முனையில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கும் ஈரான் ஆதரவு அளித்து வருகிறது.

இந்த ஆயுதக்குழுக்கள் இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன. அதேவேளை, இந்த ஆயுதக்குழுக்கள் மீது இஸ்ரேலும் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேவேளை, ஈரான் அணுசக்தி மையங்கள், அணு ஆராய்ச்சி நிலையங்கள் என பல்வேறு அணுசக்தி தொடர்பான கட்டமைப்புகள் உள்ளன.

ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா ஹமேனி தலைமையிலான அரசு அணு ஆயுதங்களை தயாரிக்க பயன்படும் யுரேனியத்தை செறிவூட்டியுள்ளது. செறிவூட்டப்பட்ட யுரேனியத்தால் அணு ஆயுதங்களை தயாரிக்க முடியும். ஆனால், அணு சக்தியை மின்சாரம் போன்ற ஆக்கப்பூர்வமான, மக்கள் நலம் சார்ந்த திட்டங்களுக்கு மட்டுமே பயன்படுத்துவோம் என்றும் அணு ஆயுதம் தயாரிக்கமாட்டோம் என்றும் ஈரான் கூறிவருகிறது.

ஒருவேளை, ஈரான் அணு ஆயுதத்தை தயாரித்துவிட்டால் அது தங்கள் நாட்டின் மீது பயன்படுத்தும் என்று இஸ்ரேல் நினைக்கிறது. மேலும், ஈரான் அணு ஆயுதத்தை தயாரித்தால் தனது நட்பு நாடான இஸ்ரேல் மட்டுமின்றி தங்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்று அமெரிக்கா கருதுகிறது. இதனால், ஈரானுடன் அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொள்ள அமெரிக்கா முயற்சித்தது.

இது தொடர்பாக ஈரான் - அமெரிக்கா இடையே பேச்சுவார்த்தை பலகட்டங்களாக பேச்சுவார்த்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டதாக ஈரான் தரப்பு தெரிவித்த நிலையில் பேச்சுவார்த்தையில் முன்னேற்றமில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் சமீபத்தில் தெரிவித்தார். பேச்சுவார்த்தை ஒருபுறம் நடந்த நிலையில் மறுபுறம் அரபிக்கடல் பகுதியில் அமெரிக்கா போர்கப்பல்கள், விமானம்தாங்கி போர்கப்பல்கள் என படைகளை குவித்தது.

இந்நிலையில், ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்கா இணைந்து இன்று திடீர் தாக்குதல் நடத்தியது. ஈரான் அணு ஆயுதத்தை பெறுவதை தடுக்கவும், ஈரானின் ஏவுகணை தயாரிப்பை தடுக்கவும் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. தங்கள் நாட்டின் இருப்புக்கு ஆபத்து ஏற்படும் அதில் இருந்து தற்காத்துக்கொள்ள ஈரான் மீது முன்கூட்டியே தாக்குதல் நடத்துவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஈரான் தலைநகர் தெஹ்ரான், இஸ்பாகான், குவாம், கர்மன்ஷா, கராஜ் ஆகிய 5 நகரங்களை குறிவைத்து அமெரிக்காவும், இஸ்ரேலும் இந்த தாக்குதல் நடத்தியுள்ளது. ஈரான் அணு சக்தி மையங்கள், ராணுவ தளங்கள், உளவுத்துறை, பாதுகாப்பு கட்டமைப்புகளை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்பு குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை. அதேவேளை, தாக்குதலில் இருந்து ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா கமேனி, ஈரான் அதிபர் மசூத் பெசஸ்கியான் தப்பியுள்ளதாகவும், இருவரும் பாதுகாப்பாக உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் மீது ஈரான் பதிலடி தாக்குதல் நடத்தியுள்ளது. ஈரானில் இருந்து இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகள், டிரோன்கள் ஏவப்பட்டுள்ளன. இந்த ஏவுகணைகள், டிரோன்களை இஸ்ரேல் வான்பாதுகாப்பு அமைப்பு தடுத்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க ஆதரவு நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. அமெரிக்க படைத்தளங்கள் மீதும் தாக்குதலை தொடங்கியுள்ளது.

அதன்படி, ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், கத்தார், ஜோர்டான் போன்ற நாடுகள் மீது ஈரான் டிரோன், ஏவுகணை தாக்குதலை நடத்தி வருகிறது. இந்த நாடுகளில் அமெரிக்க படைத்தளங்கள் உள்பட அமெரிக்க ராணுவ கட்டமைப்புகள் உள்ளன.

அதேவேளை, ஈரானில் ஆட்சி மாற்றமே இலக்கு என கூறியுள்ள அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அந்நாட்டின் மீதான தாக்குதல் தொடர்ந்து நடைபெறும் என்று கூறியுள்ளது.

இதன் மூலம் ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் தொடர்ந்து தாக்குதல் நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக அமெரிக்க ஆதரவு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருவதால் மத்திய கிழக்கில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது

## கமேனி கொல்லப்பட்டாரா?



அணுசக்தி போட்டியின் காரணமாக ஈரான் மீது இஸ்ரேல் - அமெரிக்கா இன்று காலை முதல் ஏவுகணைகள் மூலம் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது.

தலைநகர் தெஹ்ரான் மற்றும் பிற பகுதிகளில் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன.

அலி கமேனி கொல்லபட்டதாக குறிப் பாக உச்ச தலைவர் அய துல்லா அலி கமெனியின் வீடு, தலைமையகம், அதிபர் மாளிகை மற்றும் ஈரான் உளவுத்துறை கட்டிடம் ஆகியவை தாக்குதலுக்கு உள்ளாகின. இதில் அந்த கட்டிடங்கள் கடும் சேதம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. மேலும் ஈரானின் அணுசக்தி கட்டமைப்புகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கிறது. அமெரிக்கா - இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஈரான் அமெரிக்க தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது. இதற்கிடையே இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அலி கமேனி கொல்லபட்டதாக இஸ்ரேல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஈரான் வெளியுறவு அமைச்சர் ஆனால், இதனை ஈரான் வெளியுறவு அமைச்சர் அயதுல்லா மறுத்துள்ளார். இஸ்ரேலின் சேனல் 12 வெளியிட்ட செய்தியில், 86 வயதான கமேனி கொல்லப்பட்டதற்கான அறிகுறிகள் அதிகரித்து இருப்பதாக கூறியது. இதைபின்பற்றி மற்ற செய்தி நிறுவனங்களும் செய்தி வெளியிட்டன. எனினும், தகவல் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது என்ற எச்சரிக்கையுடன் இதனை வெளியிட்டன. ஆனால், இதனை மறுத்த ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அர்கச்சி, எனக்கு தெரிந்தவரை கமேனி இன்னும் உயிருடன் தான் இருக்கிறர்" என்று கூறினார்.

## தமிழ்நாட்டில் 17 ஐபிஎஸ் அதிகாரிகள் இடமாற்றம்




**சென்னை, மார்ச் 1:** தமிழ்நாட்டில் 17 ஐபிஎஸ் அதிகாரிகள் உள்பட காவல் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலர் தீரஜ் குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பில், டேவிட்சன் தேவாசீர்வாதம், சென்னை லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும்சென்னை ஆயுதப்படை டிஜிபி பொறுப்பையும் கூடுதலாக கவனித்துக் கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆவடி காவல் ஆணையரகத்தின் கூடுதல் ஆணையர் பவானீஸ்வரி,சென்னை டிஜிபி அலுவலகத்துக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தாம்பரம் காவல் ஆணையரக சட்டம் ஒழுங்கு இணை ஆணையராக ஜெயந்தி ஐபிஎஸ்ஸும், டிஜிபி அலுவலகத்தின் நவீனமயமாக்கல் பிரிவு ஐ.ஜி.யாக ரயில்வே ஐஜி பாபுவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேசமயம் காத்திருப்போர் பட்டியலில் இருந்த ஜெயராமன், சென்னை ஊர்க்காவல் படை ஏடிஜிபியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## வளைகுடா நாடுகளின் தமிழர்களுக்கு உதவ கட்டுப்பாட்டு அறை: முதல்வர் அறிவிப்பு



**மதுரை, மார்ச் 1:** வளைகுடா நாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்காக தமிழக அரசு சார்பில், தில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் கட்டுப்பாடு அறை திறக்கப்பட்டுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வளைகுடா நாடுகளில் வசிக்கும் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன். அங்குள்ள தமிழர்களின் நிலையை உடனுக்குடன் அறிந்து அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்காக தமிழக அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறைக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன்.

மேலும், புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் கட்டுப்பாடு அறை அமைத்து நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

போர்ப் பதற்றம் காரணமாக வளைகுடா நாடுகளில் உள்ள தமிழர்கள் அல்லது தமிழ்நாட்டில் உள்ள அவர்களது குடும்பத்தினர் ஏதேனும் அவசர உதவி தேவைப்பட்டால் புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறையைத் தொடர்பு கொள்ளலாம். புதுதில்லி கட்டுப்பாட்டு அறை உதவி எண்கள் 011-24193300, 92895 16712.

## ஜெயலலிதா, எம்ஜிஆர் ஆட்சி மீண்டும் தமிழகத்தில் வரும்



**மதுரை, மார்ச் 1:** மதுரை விமான நிலையத்தில் பியூஸ் கோயல் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசும்போது, பிரதமர் மோடி நாளை மதுரை வருகிறார், மதுரையில் நடைபெறும் விழாவில் வந்து திருப்பரங்குன்றம் கோயிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்கிறார். திருப்பரங்குன்றம் கார்த்திகை தீபம் ஏற்ற திமுக அரசு பாரபட்சமாக நடக்கிறது.

திருப்பரங்குன்றம் மலை மீது தீபம் ஏற்றாதது அவமானம். திமுக அரசு தமிழக மக்களின் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் இறையாண்மையும் கெடுத்துவிட்டது. ஜெயலலிதா, எம்ஜிஆர் ஆட்சி மீண்டும் தமிழகத்தில் வரும். எடப்பாடி பழனிசாமிதான் தமிழகத்தில் தேஜ கூட்டணியை தலைமை தாங்குகிறார். தொகுதிப் பங்கீட்டை இறுதி செய்த பின்பு கண்டிப்பாக சொல்வோம் என்றார். ஈரான் போர் குறித்த கேள்விக்கு, இதுபற்றி வெளியுறவு துறை அமைச்சர் தான் பதில் சொல்ல முடியும், என்னால் கூற முடியாது எனத் தெரிவித்து புறப்பட்டுச் சென்றார்.

## மார்ச் 2-ஆம் தேதி பிளஸ் 2 பொதுத் தேர்வு! ஏற்பாடுகள் தயார்!!

**சென்னை, மார்ச் 1:** தமிழகத்தில் அரசுப் பாடத்திட்டத்தின் கீழ் பயின்று வரும் பிளஸ் 2 மாணவர்களுக்கான பொதுத் தேர்வு மார்ச் 2ஆம் தேதி தொடங்கவிருக்கும் நிலையில் தமிழக பள்ளிக்கல்வித் துறை சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தேர்வு மையங்களில் அரசு வழிகாட்டி நெறிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்தும் தயார் நிலையில் உள்ளன என்று தமிழக பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது.

வருடம் தோறும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்கள் தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை சார்பில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான அரசு பொதுத்தேர்வு நடைபெறுவது வழக்கம்.அவ்வகையில் இந்த ஆண்டிற்கான பொதுத் தேர்வுகள் திங்கள்கிழமை மார்ச் 2ஆம் தேதி, 12 ஆம் வகுப்புக்கு துவங்க உள்ள நிலையில் அதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்தும் பள்ளி கல்வித்துறையால், மாவட்ட பள்ளி கல்வித்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்வுகளை கண்காணிக்க பறக்கும் படையினரும் முதன்மை கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் அனைத்து பள்ளிகளிலும் தயார் நிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.








# திருக்குறள் குறள்-545

இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு



நீதி முறைப்படி செங்கோல் செலுத்தும் அரசனுடைய நாட்டில் பருவ மழையும் நிறைந்த விளைவும் ஒருசேர ஏற்படுவனவாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



பணத்தால் வாங்கக்கூடிய விசயங்களுக்கு மட்டும் பணத்தை செலவிடுங்கள்...

பணத்தால் வாங்க முடியாத விஷயங்களுக்கு நேரத்தை செலவிடுங்கள்

**உஷா முத்துராமன்**

## நம் வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஜென்ம நட்சத்திரத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடு



**பொள்ளாச்சி , மார்ச் 01:** ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மாசி மாதம் வெள்ளிக்கிழமை முன்னிட்டு, அம்மனின் ஜென்ம நட்சத்திரமான நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, பெண்கள் அனைவரும் பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் , மகா தீபாராதனையும் நடைபெற்றது. உற்சவருக்கு வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து மாலை ஊஞ்சல் உற்சவமும் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## கண்டன ஆர்ப்பாட்டம்



நேற்று தமிழகத்திற்கு வருகை தரும் பாசிச பிஜேபி அரசு மோடியை கண்டித்து வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் மாவட்ட தலைவர் மதாரம்மா கனி பாரூக் அவர்கள் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் திட்டமிடப்பட்டிருந்த நிலை யில் தற்போது மாவட்டத் தலைவரே வீட்டு காவலில் காவல்துறையினர் வைத்திருக்கிறார்கள். அவருக்கு ஆதரவு தரவும் வகையில் காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள் வீட்டு முன்பு ஒன்று கூடினார்கள்.

## கோரிக்கை மனு




தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் பல தமிழ்ச் சங்கங்கள் பொருளாதார ரீதியில் நலிவடைந்திருப்பதால் அந்தச் சங்கங்களை காத்திட தமிழ்நாடு அரசு தமிழ்ச் சங்கங்களுக்கு ஆண்டுதோறும் நிதி உதவி செய்திட வேண்டும் என்கின்ற கோரிக்கையை திராவிட முன்னேற்ற கழக தேர்தல் அறிக்கையில் வெளியிட வேண்டும் என 28.02.2026 அன்று பாளையங்கோட்டையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். எம். அப்துல்லா அவர்களிடம் பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பாகவும் தமிழ்நாடு தமிழ்ச் சங்கங்களின் கூட்டியக்கம் சார்பாகவும் அதன் அமைப்பாளர் கவிஞர் பேரா கோரிக்கை மனு வழங்கினார்.

# செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் 21 வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு



**செய்யாறு, மார்ச் 01:** செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் 21 வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம் , தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் 21 வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் க. ஜெயகாந்தன் தலைமை தாங்கினார். திருக்குறள் பயிற்சியாளர் கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமார் முன்னிலை வகித்து வரவேற்றார்.

நேற்றைய பயிற்சியில் 23 மாணவிகள், 7 மாணவர்கள், இரண்டு பயிற்சியாளர்கள், ஒரு சிறப்பு அழைப்பாளர் ,இரண்டு பெரியவர்கள் உள்ளிட்ட 35 பேர் கலந்து கொண்டனர். முடிவில் புலவர் ந. கனக சபை நன்றி கூறினார்.

# அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் மதுரை கிழக்கு வட்ட கிளை செயற்குழு கூட்டம்



**மதுரை, மார்ச் 01:** வட்டக்கிளை செயற்குழு கூட்டம் 28 .2. 2026 சனிக்கிழமை ஒத்தக்கடை சி .ஐ. டி.யு .அலுவலகத்தில் நடைபெற்றது. தலைவர் என் . வெள்ளைக்கக்கன் தலைமையேற்றார். மாநிலச் செயலாளர் டாக்டர் கிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டு சங்க நடவடிக்கையில் குறித்து சிறப்பான உரையை நிகழ்த்தினார்.

வட்டக் கிளை செயலாளர் தோழர் ஆர். சேகர், பொருளாளர் தோழர் மோகன், துணைத் தலைவர் திருமதி வழிவிட்டம்மாள், இணைச் செயலாளர் தோழர் தங்கச்சாமி, செயற்குழு உறுப்பினர் தோழர் எஸ். பி. பாலகிருஷ்ணன் (தலைமை ஆசிரியர்) (ஓய்வு) மற்றும் தோழர்கள் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 1.**

7.3. 2026 இல் நடைபெறும் சர்வதேச மகளிர் தின கருத்தரங்கில் வட்டக்கிளை சார்பாக 20 பெண் தோழர்களை கலந்து கொள்ள வைப்பது,

**தீர்மானம் 2.**

சங்க வளர்ச்சி நிதி மார்ச் 31க்குள் வசூல் செய்து மாவட்ட இலக்கை உடன் செலுத்துவது, என தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மான 3.**

வரும் மார்ச் மாதத்துக்குள் ஓய்வூதியர் இதழ் சந்தா 25 ஓராண்டு இதழ் சந்தாக்களையும், பத்தாண்டு சந்தாவும் பெற்று செலுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்ட இறுதியில் வட்ட கிளை செயலாளர் தோழர் சேகர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. நன்றி தோழர்களே.

# சீர்காழி சட்ட மன்ற தொகுதி காங்கிரஸ் கட்சியின் பாக முகவர்கள் கூட்டம்



**சீர்காழி , மார்ச் 01:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் கட்சி யின் பாக முகவர்கள் ஆலோசனைக்கூட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையம் எம்.ஏம்.எல். மஹாலில் நடைப்பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சீர்காழி நகர காங்கிரஸ் தலைவர் சித.லெட்சுமணன் வரவேற்புரையாற்றினார். மயிலாடுதுறை மாவட்ட காங்கிரஸ் தலைவர் வி.ஆர். எஸ்.பானுசேகர் தலைமை வகித்தார்.

மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் ஆர். சுதா, மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ். ராஜகுமார், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பொது செயலாளர் கே.பி.எஸ். எம்.கனிவண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். புதிதாக காங்கிரஸ் மாவட்ட தலைவராக பொறுப்பேற்று இருக்கும் வி.ஆர்.எஸ்.பானுசேகருக்கு பாராளுமன்ற உறுப்பினர் சுதா பொன்னாடை அணிவித்து பாராட்டினார்.

# நம் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஜென்ம நட்சத்திரத்தை முன்னிட்டு அன்னதானம்





**சென்னை, மார்ச் 01:** திருவள்ளூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் அம்மனின் ஜென்ம நட்சத்திரம் புனர்பூசம் நட்சத்திரத்தை முன்னிட்டு காலை ஹோமம்,அபிஷேகம், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், மற்றும் ஏகாதசி முன்னிட்டு சீதா, ராமர்,லஷ்மனர் திருமஞ்சனம் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய மகளிர் விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம் செய்தார்கள். பிரசாதம், நெய் வைத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. அர்ச்சனையும், மங்களஹாரத்தி, தீர்த்தம், பிரசாதம் வழங்கப்பட்டது. அன்னதானம் 300 நபர்களுக்கு மேல் எலுமிச்சை சாதம் அனைவருக்கும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# மாசிப் பெருவிழா




**விழுப்புரம், மார்ச் 01:** விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சக்கராபரணி ஆற்றங்கரையின் அருகில் உள்ள கோதண்டராம ஆலயத்தில் வருகின்ற திங்கட்கிழமை அன்று மாசி மகம் பெருவிழாவினை முன்னிட்டு வெகுவிமர்சையாக நடைபெற உள்ளது அதனைத் தொடர்ந்து மாசிப் மகப்பெருவிழாவில் திருவத்திமலை வெங்கடாஜலபதி திருக்கோவில் சார்பில் கலந்துகொண்டு பத்தாம் ஆண்டு அபிஷேக ஆராதனை மற்றும் அன்னதானம் நடைபெறயுள்ளது. **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**




# 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு துண்டு பிரசுரங்களை வழங்கும் நிகழ்ச்சி

**திருவண்ணாமலை,மார்ச் 01:** திருவண்ணாமலை மாவட்டம் போளூர் ஒன்றியத்தைச் சேர்ந்த குப்பம் ஊராட்சியில் ரேணுகாபுரம், எம்.ஜி.ஆர். நகர், பாறை கொட்டா, சக்தி நகர், அண்ணா நகர், கொல்லை மேடு ஆகிய பகுதிகளில் போளூர் சட்டமன்ற உறுப்பினர் அக்ரி.S.S .கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வீடு வீடாக நேரடியாக சென்று 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் முதல் வாக்குறுதி அடங்கிய துண்டு பிரசுரங்களை பொது மக்களுக்கு வழங்கினார். உடன் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**



# யாரையும் நம்ப வேண்டாம் என போலீஸ் எச்சரிக்கை



**ஜோகுலாம்பா, மார்ச் 01:** தெலுங்கானா மாநிலம் ஜோகுலாம்பா மாவட்டம், கட்வால் அருகே உள்ள கிராமத்தை சேர்ந்தவர் 14 வயது சிறுமி. இவர் கட்வாலில் உள்ள பள்ளியில் 9-ம் வகுப்பு படித்து வருகிறார்.

நேற்று முன்தினம் காலை கிராமத்தில் உள்ள பஸ் நிறுத்தத்தில் பள்ளிக்கு செல்வதற்காக பஸ்சுக்காக காத்திருந்தார்.

அப்போது அதே கிராமத்தை சேர்ந்த 2 வாலிபர்கள் பைக்கில் வந்தனர். மாணவியிடம் பைக்கில் அழைத்துச் சென்று பள்ளியில் பத்திரமாக விடுவதாக தெரிவித்தனர். மாணவியும் இதனை உண்மை என நம்பி அவர்களுடன் பைக்கில் சென்றார்.

சிறிது தூரம் சென்ற போது வாலிபர்கள் வேறு வழியாக பைக்கை திருப்பி வெறிச்சோடிய பகுதிக்கு ஓட்டிச் சென்றனர். இருவரும் சேர்ந்து மாணவியை வலுக்கட்டாயமாக பாலியல் வன்கொடுமை செய்தனர்.

பின்னர் சிறுமியை அங்கேயே விட்டுவிட்டு தப்பிச் சென்றனர். வீட்டிற்கு வந்த மாணவி தனக்கு நடந்த கொடூரம் குறித்து பெற்றோரிடம் தெரிவித்தார்.

மாணவியின் பெற்றோர் காட்வால் போலீசில் புகார் செய்தனர். போலீசார் வழக்கு பதிவு செய்து 2 வாலிபர்களையும் கைது செய்து ஜெயிலில் அடைத்தனர்.

பள்ளிக்கு செல்லும் மாணவிகள் யாரையும் நம்பி செல்லக்கூடாது என போலீசார் எச்சரிக்கை விடுத்தனர்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### திமுகவில் ஓ. பன்னீர்செல்வத்துக்கு உரிய மரியாதை கிடைக்கும் - எஸ்.வி.சேகர்



சென்னையில் நடிகர் எஸ்.வி.சேகர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:-

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் துணை முதல்-அமைச்சராகவும், ஒருங்கிணைப்பாளராகவும் ஓ.பன்னீர்செல்வம் இருந்தார். அதன்பின்னர் கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சினையால் அதிரடியாக அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டார். வைத்திலிங்கம், மனோஜ்பாண்டியன், அய்யப்பன் உள்ளிட்ட எம்.எல்.ஏ.க்களும் ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு அளித்தனர். தமிழ்நாட்டில் மூன்று முறை முதல்-அமைச்சராக இருந்த என்னுடைய நண்பர் ஓ.பி.எஸ் திமுகவில் இணைந்துள்ளார். திமுகவில் தான் அவருக்கு உரிய மரியாதை கிடைக்கும். மீண்டும் வரும் சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்று திமுக ஏழாவது முறையாக ஆட்சி அமைக்கும். மு.க.ஸ்டாலின் முதல்-அமைச்சராக பதவியேற்பார் . அந்த அமைச்சரவையில் ஓபிஎஸ் நல்ல இடத்தை பெறுவார். ஓபிஎஸ் திமுகவில் இணைந்துள்ளது திமுகவிற்கு பலமா என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு, கண்டிப்பாக பலமாகத்தான் அமையும். தென்மாவட்டங்களில் எடப்பாடி பழனிசாமிக்கு ஓட்டு வங்கி பெரிதாக இன்றும் இல்லை. ஏனென்றால் அவர் கொங்கு பகுதியை சேர்ந்தவர். அதிமுகவில் இருந்து ஒரே சமயத்தில் சசிகலா, டிடிவி தினகரன், ஓபிஎஸ் ஆகிய மூவரும் வெளியேற்றப்பட்டனர். இவர்களை அதிமுகவில் இருந்து நீக்கியதற்கு தென் மாவட்டங்களில் அவர்கள் சமூகம் சார்ந்த மக்களிடையே பெரும் எதிர்ப்பு கிளம்பியது. இன்று அந்த எதிர்ப்பு ஓட்டு மொத்தமாக திமுகவிற்கு வாக்குகளாக மாறிவிட்டது. இவ்வாறு அவர் பேசினார்.

### தவெக தலைவர் விஜய்க்கு அரசியல் புரிதல் இல்லை - வைகைசெல்வன்



திருவள்ளூரில் அதிமுக முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன் கட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். பின்பு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:-

தவெக தலைவர் விஜய் அவர்கள் தவெக மற்றும் திமுக இடையே தான் போட்டி என்று சொல்லிவருகிறார் என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு நடிகர் விஜய் அறியாமலும், புரியாமலும் பேசிவருகிறார். அரசியல் புரிதல் என்பது அவ்ருக்கு கொஞ்சம் கூட இல்லை. அதிமுக ஏழு முறை ஆட்சியில் இருந்த மிகப்பெரிய கட்சி, பிரதான எதிர்கட்சியாக இன்று இருக்கிறது. அதிமுகவை ஒரு போதும் புறந்தள்ளி விடமுடியாது, புரட்சி தலைவர் எம்ஜிஆர், புரட்சிதலைவி ஜெயலலிதா, பேறிஞர் அண்ணா இவர்களின் படத்தை மட்டும் போட்டு கொண்டால் போதுமா? இவர்கள் எங்கள் கட்சியை தொடங்கியவர்கள், எங்கள் இயக்கத்தை வளர்த்தவர்கள். அண்ணா எங்கள் கட்சி கோட்பாட்டில், கட்சி பெயரில், கட்சி கொடியில் இருக்கிறார். புரட்சி தலைவர் எம்ஜிஆர்-ஆல் உருவாக்கபட்ட இயக்கம் அதிமுக என்று பேசினார்.

### சட்டமன்ற தேர்தலில் போட்டியா..? - ஓ.பன்னீர்செல்வத்தின் மகன் ரவீந்திரநாத் பதில்



அதிமுக முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அவரது மகன் ரவீந்திரநாத்தும் திமுகவில் இணைந்துள்ளனர். முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் அவர்கள் இருவரும் நேற்று தி.மு.க.வில் ஐக்கியமாகினர். அவர்களுடைய இந்த முடிவை அ.தி.மு.க.வினர் விமர்சனம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் தி.மு.க.வில் சேர்ந்த ஓ.பன்னீர்செல்வத்தின் மகன் ரவீந்திரநாத் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவரிடம், 'அ.தி.மு.க. உங்களை நிராகரித்து வைத்திருந்ததே?. தேனி அ.தி.மு.க.வின் கோட்டையாக இருக்கிறதே?, நீங்கள் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுவீர்களா? என்று கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர், 'முடிந்து போன கதையை பற்றி பேச வேண்டாம். தேனி அ.தி.மு.க.வின் கோட்டையாக நாங்கள் அங்கு இருக்கும் வரை இருந்தது. நாங்கள் அ.தி.மு.க.வில் இருந்து வந்துவிட் டோம். இனி அவர்களுக்கு அங்கு ஓட்டைதான். மு.க.ஸ்டாலின் போட்டியிட வாய்ப்பு வழங்கினால் போட்டியிடுவேன். வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக் கிறது' என்றார்.

## தேமுதிக கொடுத்த தொகுதிப் பட்டியல்...

நீண்ட இழுபறிக்குப் பிறகு ஒருவழியாக திமுக கூட்டணியில் ஐக்கியமாகி இருக்கிறது தேமுதிக. இதைத் தொடர்ந்து, தொகுதிகளைக் கைப்பற்றுவதில் கூட்டணிக் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள கடும் போட்டியால் அனல் தகிக்கிறது அறிவாலயம்.

இருபது ஆண்டு கால அரசியல் பகையை மறந்து, 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள முதன்முறையாக திமுகவுடன் கைகோத்திருக்கிறது தேமுதிக. அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்த பிரேமலதா, கூட்டணியை முறைப்படி உறுதி செய்தார்.



இந்தச் சூழலில்தான், எந்தெந்த தொகுதிகளில் போட்டியிட தேமுதிக விருப்பம் கொண்டுள்ளது என திமுக தலைமை கேட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக, தங்களுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ள தொகுதிகளின் பட்டியலை பிரேமலதா வழங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நகர்வின் பின்னணி குறித்துப் பேசும் தேமுதிக சீனியர் தலைவர்கள் சிலர், "கூட்டணி பேச்சுவார்த்தையின்போது 12 தொகுதிகள் வேண்டும் என பிரேமலதா பிடிவாதம் காட்டினார். அதற்கு ஸ்டாலின், 'தற்போதைய நிலவரப்படி 6+1 தொகுதிகள் மட்டுமே ஒதுக்க முடியும். கூட்டணிக் கட்சிகள் யாராவது வெளியேறினால் 8 தொகுதிகள் வரை கிடைக்க வாய்ப்புள்ளது.

நாங்கள் உங்களுக்கு வெறும் சீட் கொடுக்கவில்லை; வெற்றியையும் சேர்த்து எம்.எல்.ஏ-க்களையே கொடுக்கிறோம். எவ்வளவு சவால்கள் வந்தாலும் உங்கள் வெற்றி உறுதி' என நம்பிக்கை அளித்தார். மேலும், 'உங்களுக்கு விருப்பமான தொகுதிகளின் பட்டியலைக் கொடுங்கள், நாங்கள் ஆய்வு செய்துவிட்டு இறுதி முடிவைச் சொல்கிறோம்' எனத் தெரிவித்தார்.

இதையடுத்து பிரேமலதா வழங்கிய பட்டியலில், தனது சகோதரர் சுதீஷுக்கு ராஜ்யசபா சீட் வேண்டும் எனக் கேட்டுள்ளார். மேலும், தனக்கு ரிஷிவந்தியம் அல்லது விருத்தாச்சலம்; விஜய பிரபாகரனுக்கு விருதுநகர் அல்லது சாத்தூர்; எல். வெங்கடேசனுக்கு விழுப்புரம் அல்லது விக்கிரவாண்டி; பார்த்தசாரதிக்கு விருகம்பாக்கம்; அனகை முருகேசனுக்கு பல்லாவரம்; இளங்கோவனுக்கு பாப்பிரெட்டிப்பட்டி; அழகாபுரம் மோகன்ராஜுக்கு சேலம் தெற்கு என உத்தேசப் பட்டியலைக் கொடுத்துள்ளார்.

இது குறித்து திமுக மற்றும் மற்ற கூட்டணிக் கட்சிகளுடன் ஆலோசித்துவிட்டுப் பதில் சொல்வதாக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்" என்றனர் தேமுதிக சீனியர் தலைவர்கள்.

மறுபுறம், தேமுதிக கூட்டணிக்குள் வருவதற்கு முன்பே அந்தத் தொகுதிகளைக் குறிவைத்து காய் நகர்த்தி வந்த திமுக நிர்வாகிகள் பெரும் அதிர்ச்சியில் உள்ளனர்.

## தொகுதி பங்கீடு: பேச்சுவார்த்தை நடத்த மார்ச் 2-ஆம் தேதி விசிகவுக்கு அழைப்பு

தமிழகத்தில் நடைபெற உள்ள 17-வது சட்டசபை தேர்தலில், தி.மு.க. கூட்டணியில் கடந்த 2021-ம் ஆண்டு இடம்பெற்றிருந்த கட்சிகள் அனைத்தும் அப்படியே இடம்பெற்றுள்ளன. புதிதாக மக்கள் நீதி மய்யமும், தே.மு.தி.க.வும் இணைந்துள்ளன.

திமுக தனது கூட்டணி கட்சிகளுடன் நடத்தி வரும் தொகுதி பங்கீட்டு பேச்சு வார்த்தை மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகிறது.



இந்தநிலையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தி.மு.க. தரப்பில் டி.ஆர்.பாலு தலைமையில் முதன்மைச்செயலாளர் கே.என்.நேரு. துணை பொதுச்செயலாளர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையில் கொண்ட குழு, கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. முதற்கட்ட பேச்சுவார்த்தையில், மனிதநேய மக்கள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் கட்சி, மதிமுக ஆகிய கட்சிகள் பங்கேற்றன. முதற்கட்ட பேச்சுவார்த்தையில் இந்த கட்சிகளுடன் எத்தனை தொகுதிகள் என்று இன்னும் எட்டப்படாத நிலையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியுடன் தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தை நடத்த மார்ச் 2 ஆம் தேதி திமுக அழைப்பு விடுத்துள்ளது.

திமுகவிடமிருந்து தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தைக்கு இன்னும் அழைப்பு வரவில்லை என விசிக தலைவர் திருமாவளவன் சில தினங்களுக்கு முன் கருத்து தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

## திமுக - காங்கிரஸ் கூட்டணி இணக்கமாக உள்ளது - விஜய் வசந்த்



கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் எம்பி தனது தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் பாகோட்டில் இணைப்பு பாலம், பல்நோக்குக்கட்டிடம் கட்ட ரூ.20 லட்சம் மற்றும் ரூ.10லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இன்று அடிக்கல் நாட்டினார். இந்த திட்டம் மக்கள் பயன்பாட்டிற்கு மூன்று மாதத்திற்குள் வந்துவிடும் என்றார்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த விஜய் வசந்த் கூறியதாவது:-

2026 சட்டப்பேரவை தேர்தல் கள நிலவரம் கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பாக உள்ளது. அனைவரும் தேர்தல் பணியில் சிறப்பாக ஈடுபட்டு வருகிறார்கள் என்றார்.

அடுத்தாக தவெகவுடன் கூட்டணி அமைக்க காங்கிரஸ் தயாராக இருப்பதாக கிரிஷ் சோடங்கர் கூறியுள்ளாரே? என்று நிருபர்கள் கேட்டனர். அதற்கு பதில் அளித்த விஜய் வசந்த், அவரது சொந்த கருத்தை அவர் சொல்லியிருக்கிறார். கூட்டணி குறித்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தான் முடிவு எடுக்கும். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி அவர்கள் இணைந்து கூட்டணி குறித்து முடிவு எடுப்பார்கள். திமுகவுடன் கூட்டணி இணக்கமாக தான் இருக்கிறது நேற்றைய முன்தினம் கூட தமிழக முதல்-அமைச்சர் முக. ஸ்டாலின் கன்னியாகுமரி வந்து இரண்டு நாட்கள் தங்கியிருந்து பல நலத்திட்டங்களை செய்திருக்கிறார்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஓ. பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்தது துரதிர்ஷ்டவசமானது- சசிகலா

முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்தது குறித்து வி.கே.சசிகலா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அ.தி.மு.க. ஆட்சியில் 3 முறை முதல்-அமைச்சராக இருந்தவர் ஓ.பன்னீர்செல்வம். ஜெயலலிதாவின் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருந்தவர். ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் அ.தி.மு.க. பல சிக்கல்களை சந்தித்தது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் துணை முதல்-அமைச்சராகவும், அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளராகவும் இருந்தார். அதன்பின்னர் கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சினையால் அதிரடியாக அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டார். வைத்திலிங்கம், மனோஜ்பாண்டியன், அய்யப்பன் உள்ளிட்ட எம்.எல்.ஏ.க்களும் ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவு அளித்தனர்.

இதனையடுத்து அ.தி.மு.க.வை மீட்கசட்ட நடவடிக்கை எடுத்தார். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ராமநாதபுரம் தொகுதியில் பா.ஜனதா ஆதரவுடன் சுயேச்சையாக களமிறங்கினார். ஓரளவு வாக்குகளை பெற்றிருந்தாலும் அவர் தோல்வி அடைந்தார்.

தமிழக முன்னாள் முதலமைச்சரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடியும், சட்டமன்ற உறுப்பினருமான திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களின் இந்த முடிவு மிகவும் துரதிர்ஷடவசமானது. தமிழகத்திலிருந்து அகற்றப்படவேண்டிய ஒரு தீய சக்தியாக திமுக விளங்கும் நிலையில் தாய் கழகம் என்று நினைத்து கொண்டு திமுகவில் தங்களை இணைத்துக்கொள்வது ஒரு தவறான முடிவாகத்தான் அமைந்துள்ளது.

ஆனால் இந்த நிலைமைகளுக்கெல்லாம் காரணம் ஒன்றே ஒன்றுதான். அவர் வேறு யாருமில்லை. தான் மட்டும்தான் அதிமுக என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு தனக்கு தானே தலைவராக அறிவித்துக் கொண்டவர்கள், தன்னை சுற்றியுள்ளவர்களையும் ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள், திமுகவினரின் முழு கட்டுப்பாட்டில் இருந்து கொண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள அனைவரையும் வெளியேற்றி விட்டு புரட்சித்தலைவர் மற்றும் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கொள்கைகளுக்கு விரோதமாக தொடர்ந்து செயல்பட்டுவரும் துரோகிகளின் அழிவுகாலம் நெருங்கிவிட்டது. இந்நிலையில் வரும் சட்டமன்ற தேர்தலில் எனது தலைமையில் புரட்சித்தலைவரின் ரத்தத்தின் ரத்தங்களும், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிவந்த சிங்கங்களும் எதிரிகளையும் துரோகிகளையும் வீழ்த்துவது உறுதி என்று தெரிவித்துள்ளார்.

## 25... 35... தொகுதியா? காங்கிரஸ் கட்சிக்கு எத்தனை தொகுதிகள்? பேச்சுவார்த்தை தொடங்கியது

சட்டமன்ற தேர்தலையொட்டி தி.மு.க.வுடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடத்துவதற்காக 3 மாதங்களுக்கு முன்பே காங்கிரஸ் கட்சி சார்பில் தமிழக மேலிட பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தலைமையில் அகில இந்திய செயலாளர்கள் சூரஜ் ஹெக்டே, நிவேதித் அல்வா, தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை, சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் ராஜேஷ்குமார் ஆகிய 5 பேர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது.

இந்த குழுவின் தலைவர் கிரிஷ் சோடங்கர், ஆட்சியில் அதிகாரம் வேண்டும். கடந்த சட்டமன்ற தேர்தலை விட கூடுதல் இடங்களை காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்க வேண்டும் என்று தனது நிலைப்பாட்டை தெரிவித்தார். அவருடைய இந்த கருத்தை வழிமொழியும் விதமாக காங்கிரஸ் கட்சியை சேர்ந்த மாணிக்கம் தாகூர் எம்.பி. உள்ளிட்ட நிர்வாகிகள் கருத்துகளை வெளிப்படுத்தினார்கள்.

தமிழ்நாட்டுக்கு கூட்டணி ஆட்சி சரிவராது என்ற தி.மு.க.வின் நிலைப்பாட்டை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டமாக தெரிவித்தார். இதைத்தொடர்ந்து ஆட்சி அதிகாரம் கோரிக்கையை காங்கிரஸ் கைவிட்டது. ஆனால் காங்கிரஸ் கட்சிக்கு கடந்த தேர்தலை விட கூடுதல் இடங்களை பெற்றுவிட வேண்டும் என்பதில் கிரிஷ் சோடங்கர் விடாபிடியாக உள்ளார்.



தி.மு.க.வுடன் நேரடி தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கப்படவில்லை என்றாலும் மறைமுக பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இதில் காங்கிரஸ் கட்சிக்கு குறைந்தபட்சம் 35 தொகுதிகளும், 2 மாநிலங்களவை எம்.பி. பதவியும் வழங்க வேண்டும் என்று கிரிஷ் சோடங்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர், சமீபத்தில் கனிமொழி எம்.பி.யை சந்தித்த போதும், இந்த கோரிக்கையை வலியுறுத்தினார். இதுதொடர்பாக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது.

கடந்த சட்டமன்ற தேர்தலை போன்று காங்கிரஸ் கட்சிக்கு 25 தொகுதிகளும், ஒரு மாநிலங்களவை எம்.பி.யும் கொடுக்கலாம். இதற்கு காங்கிரஸ் தரப்பில் இசைவு தெரிவித்தால் உடனடியாக தொகுதி பங்கீடு ஒப்பந்தம் மேற்கொண்டு விடலாம் என்று கூறியதாக தெரிகிறது. ஆனால் கிரிஷ் சோடங்கர், 35 தொகுதிகள் வேண்டும் என்பதில் தொடர்ந்து பிடிவாதமாக இருப்பதுதான் தி.மு.க. - காங்கிரஸ் தொகுதி பங்கீடு இழுபறிக்கு காரணம் என்று கூறப்படுகிறது. இந்த பேச்சுவார்த்தை இன்றுடன் எளிதாக முடியுமா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

அதே நேரத்தில் தமிழகத்தில் காலியாக உள்ள 6 மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று முன்தினம் தொடங்கி உள்ளது. வேட்புமனு தாக்கல் செய்ய மார்ச் 5-ந் தேதி கடைசி நாள். எனவே, அதற்குள் தி.மு.க. - காங்கிரஸ் பேச்சுவார்த்தை சுமுக முடிவு எட்டப்பட்டு காங்கிரஸ் கட்சிக்கு ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி வழங்கப்படும் என்று தெரிகிறது.

அண்ணா அறிவாலயத்தில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கியுள்ள நிலையில், பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படுமா? காங்கிரஸ் எதிர்பார்க்கும் தொகுதிகள் கிடைக்குமா? என்பது அரசியல் வட்டாரத்தில் உன்னிப்பாக கவனம் பெற்றுள்ளது.

## கச்சத்தீவு ஆலய திருவிழா தொடக்கம்: தமிழகத்தில் இருந்து 4 ஆயிரம் பேர் பயணம்

**ராமேசுவரம், மார்ச் 1:**

ராமேசுவரத்தில் இருந்து 12 கடல் மைல் தொலைவிலும் இலங்கை நெடுந்தீவில் இருந்து 16 கடல் மைல் தொலைவிலும் நடுக்கடலில் கச்சத்தீவு அமைந்துள்ளது. இந்த தீவில் உள்ள புனித அந்தோணியார் ஆலய திருவிழா ஆண்டுதோறும் விமரிசையாக நடைபெறும். இந்த விழாவில் தமிழகம் மற்றும் இலங்கை மக்கள் கலந்து கொள்வது வழக்கம். இந்த ஆண்டுக்கான கச்சத்தீவு அந்தோணியார் ஆலய திருவிழா இன்று மாலையில் கொடியேற்றத்துடன் தொடங்கி 2 நாட்கள் நடக்கிறது. ஆலயத்தின் முன்புள்ள கொடி மரத்தில் அந்தோணியாரின் உருவம் பொறித்த கொடியை நெடுந்தீவு பங்குத்தந்தை பத்திநாதன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து ஆலயத்தில் திருவிழா திருப்பலி நடைபெற்று சிலுவைப்பாதை திருப்பலியும் நடக்கிறது. இரவு 8 மணிக்கு அந்தோணியாரின் சொரூபம் வைக்கப்பட்ட சப்பரத்தை இலங்கை கடற்படையினர் தோளில் சுமந்தபடி ஆலயத்தை சுற்றி வலம் வருவர். விழாவில் 2-ம் நாளான நாளை மறுநாள், காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலி யாழ்ப்பாணம் மறை மாவட்ட பிஷப் தலைமையில் நடைபெறும். தமிழ், சிங்கள மொழிகளில் இது நடத்தப்படும்.

கச்சத்தீவு ஆலய திருவிழாவிற்கு ராமேசுவரம் துறைமுகத்தில் இருந்து செல்ல 3,033 ஆண்கள், 726 பெண்கள் மற்றும் 150 குழந்தைகள் உட்பட மொத்தம் 3,996 பேர் பதிவு செய்துள்ளனர். அவர்கள் 118 படகுகள் மூலம் ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து புறப்பட்டனர். இந்த பயணத்தை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## முட்டப்பதியில் அய்யா வைகுண்டரின் 194-வது அவதார தின விழா: 4-ந்தேதி நடக்கிறது

**கன்னியாகுமரி, மார்ச் 1:**

அய்யா வைகுண்டரின் பஞ்சபதிகளில் மூலப்பதியாக முட்டப்பதியில் உள்ள அய்யா வைகுண்டசாமி பதி விளங்குகிறது. கன்னியாகுமரியில் இருந்து வடக்கே 2 கிலோ மீட்டர் தொலைவில் கிழக்கு கடற்கரையில் வங்கக்கடலோரம் இந்த முட்டப்பதி அமைந்து உள்ளது.

இங்கு அய்யா வைகுண்டசாமியின் 194 -வது அவதார தினவிழா வருகிற 4-ந்தேதி நடக்கிறது. இதையொட்டி அன்று அதிகாலை 4 மணிக்கு அய்யாவுக்கு பணிவிடையும் உகப்படிப்பும் நடக்கிறது.

அதன்பின்னர் பால் அன்னம், பூந்தி, லட்டு, பொங்கல், பழம், பாயாசம், சர்க்கரை பொங்கல், இனிப்பு போன்ற தான தர்மங்கள் வழங்குதல் நடக்கிறது.

மதியம் 12 மணி முதல் மணிமுதல் மாலை 5 மணி வரை அன்னதானம் வழங்கப்படுகிறது. மாலை 6 மணிக்கு அய்யாவுக்கு பணிவிடையும் உகப்படிப்பும் நடக்கிறது.

# பழனி முருகன் கோவிலில் உண்டியல் காணிக்கை ரூ.5.27 கோடி

**பழனி, மார்ச் 1:**



அறுபடை வீடுகளில் 3-ம் படைவீடான பழனி முருகன் கோவில் உலக பிரசித்தி பெற்றது. இங்கு வரும் பக்தர்கள் தரிசனம் முடித்த பின்பு, அங்குள்ள உண்டியல்களில் பணம், தங்கம், வெள்ளி பொருட்களை காணிக்கையாக செலுத்துகின்றனர்.

கோவிலில் மாதந்தோறும் உண்டியல்கள் திறக்கப்பட்டு அதில் கிடைக்கும் பணம், பொருட்கள் எண்ணி அளவிடப்படுகிறது. அதன்படி, இந்த மாதத்திற்கான உண்டியல் காணிக்கை எண்ணும் பணி நேற்று முன்தினம் தொடங்கி 2 நாட்கள் நடந்தது. முதல் நாளில் ரூ.3 கோடியே 47 லட்சத்து 77 ஆயிரத்து 367 கிடைத்தது. இதுதவிர 440 கிராம் தங்கம், 10 கிலோ 593 கிராம் வெள்ளி பொருட்களும், 1,067 வெளிநாட்டு கரன்சி நோட்டுகளும் கிடைத்தது.

இந்த நிலையில் நேற்று 2-வது நாளாக உண்டியல் காணிக்கை எண்ணப்பட்டது. இதில் ரூ.1 கோடியே 79 லட்சத்து 39 ஆயிரத்து 387-ம், தங்கம் 125 கிராம், வெள்ளி 14 கிலோ 672 கிராம், வெளிநாட்டு கரன்சி நோட்டுகள் 257-ம் கிடைத்தது. இதன்மூலம் 2 நாட்கள் நடந்த உண்டியல் காணிக்கை எண்ணும் பணியில் மொத்தம் ரூ.5 கோடியே 27 லட்சத்து 16 ஆயிரத்து 752 கிடைத்தது. தங்கம் 565 கிராம், வெள்ளி 25 கிலோ 265 கிராம், வெளிநாட்டு கரன்சி நோட்டுகள் 1,324-ம் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

# மாசி பிரம்மோற்சவ விழா: திருத்தணி முருகன் கோவிலில் தேரோட்டம் - திரளான பக்தர்கள் தரிசனம்

**திருத்தணி, மார்ச் 1:**



திருத்தணி சுப்பிரமணிய சாமி கோவிலில் மாசி பிரம்மோற்சவ விழா கடந்த 21-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

விழாவின் 7-வது நாளான நேற்று தேரோட்டம் நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட தேரில் உற்சவர் முருகப்பெருமான் வள்ளி-தெய்வானையுடன் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

பின்னர் கோவில் இணை கமிஷனர் ரமணி, அறங்காவலர்கள் மற்றும் பக்தர்கள் தேரை வடம்பிடித்து இழுத்தனர். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். முருகன்-வள்ளி திருக்கல்யாணம் நாளை நடக்கிறது. நடிகர் ரஜினிகாந்தின் மூத்த மகளும், இயக்குனருமான ஐஸ்வர்யா ரஜினிகாந்த் திருத்தணி முருகன் கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்தார்.

# ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவில் தெப்ப உற்சவம்.. 'ரங்கா, ரங்கா' முழக்கத்துடன் பக்தர்கள் தரிசனம்

**ஸ்ரீரங்கம், மார்ச் 1:**



ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோவிலில் மாசி தெப்பத் திருவிழா விமரிசையாக நடைபெற்று வருகிறது. இதையொட்டி தினமும் நம்பெருமாள் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். விழாவின் 7-ம் நாளான நேற்று முன்தினம் இரவு நம்பெருமாள் உபய நாச்சியாருடன் எழுந்தருளி நெல்லளவு கண்டருளினார்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தெப்ப உற்சவம் நேற்று இரவு நடைபெற்றது. இதையொட்டி நம்பெருமாள் பிற்பகல் 3 மணிக்கு மூலஸ்தானத்தில் இருந்து உபயநாச்சியார்களுடன் புறப்பட்டு தெப்பக்குளம் ஆஸ்தான மண்டபத்தில் எழுந்தருளினார்.

இரவு 7.15 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு தெப்பத்தில் எழுந்தருளி வலம் வந்தார். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு 'ரங்கா ரங்கா' என்று பக்தி முழக்கம் எழுப்பியபடி பகவானை தரிசனம் செய்தனர்.

தெப்ப உற்சவத்திற்குப் பின்னர் மைய மண்டபத்தில் எழுந்தருளிய நம்பெருமாள் இரவு 11.15 மணிக்கு மூலஸ்தானம் சென்றடைந்தார். வருகிற 27-ந் தேதி பந்தக்காட்சியுடன் விழா நிறைவடைகிறது.




## கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் வருஷாபிஷேக விழா: மார்ச் 4-ந்தேதி நடக்கிறது



**கன்னியாகுமரி, மார்ச் 1:**

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் கடந்த 2013-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ந்தேதி கும்பாபிஷேகம் நடந்தது. கும்பாபிஷேகம் நடந்து 12 ஆண்டுகள் நிறைவுபெற்ற நிலையில், இந்த ஆண்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும். ஆனால் அதற்கான கும்பாபிஷேக திருப்பணிகள் தொடங்கப்படாததால் வருஷாபிஷேக விழா வருகிற 4-ந் தேதி நடக்கிறது.

கும்பாபிஷேக நட்சத்திரத்தை கணக்கில் கொண்டு துவிதியை திதியும் உத்திரம் நட்சத்திரம் கூடிய தினமான மார்ச் 4-ந்தேதி இந்த ஆண்டுக்கான வருஷாபிஷேகத்தை நடத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது.

அதன்படி வருகிற 4-ந்தேதி அதிகாலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு நிர்மால்ய பூஜையும் விஸ்வரூப தரிசனமும் நடக்கிறது. பின்னர் கணபதி ஹோமமும் நவகலச பூஜையும் நடக்கிறது. அதைத்தொடர்ந்து காலை 10 மணிக்கு அம்மனுக்கு எண்ணெய், பால், பன்னீர், தயிர், இளநீர், பன்னீர், களபம், சந்தனம், குங்குமம், மஞ்சள்பொடி, மாப்பொடி, பஞ்சாமிர்தம், தேன் உள்பட 16 வகையான திரவியங்களால் அபிஷேகம் (சோடச அபிஷேகம்) நடக்கிறது. அதன்பிறகு கலசாபிஷேகம் நடக்கிறது. கலசாபிஷேகத்தை கோவில் மேல்சாந்திகள் நடத்துகிறார்கள். பின்னர் உச்சி கால பூஜையும் உச்சிகால தீபாராதனையும் நடக்கிறது அதனைத்தொடர்ந்து மதியம் அன்னதானம் நடக்கிறது. வருஷாபிஷேகத்தையொட்டி வைரக்கிரீடம் மற்றும் வைரக்கல் மூக்குத்தி அணிந்து, சந்தனகாப்பு அலங்காரத்துடன் அம்மன் பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார்.

மாலையில் சாயரட்சை தீபாராதனை, இரவு அம்மன் வெள்ளி பல்லக்கில் எழுந்தருளி கோவிலின் உள்பிரகார புறப்பாடு, அதைத்தொடர்ந்து வெள்ளி சிம்மாசனத்தில் அம்மனுக்கு தாலாட்டு நிகழ்ச்சி, அத்தாழ பூஜை மற்றும் ஏகாந்த தீபாராதனை நடக்கிறது.

# டேட்டா சென்டர்களைக் குளிர்விக்க சுமார் 610 கோடி கேலன் நன்னீர்...இப்படியே போனால் தண்ணீர் பஞ்சம்?


இன்றைய காலகட்டத்தில் காலையில் எழுந்ததும் ஒரு மெயில் டைப் செய்வது முதல், விதவிதமான படங்களை உருவாக்குவது வரை எல்லாவற்றுக்கும் நாம் AI டூல்களைத் தான் அதிக அளவில் நம்பியிருக்கிறோம். மிகவும் சுலபமாக நமது வேலைகளை முடித்துக் கொடுக்கும் இந்த தொழில்நுட்பத்திற்குப் பின்னால் ஒரு மிகப்பெரிய சுற்றுச்சூழல் ஆபத்து மறைந்திருக்கிறது.

நாம் கூகுளிலோ, மற்ற ஏஐ தளங்களிலோ கொடுக்கும் ஒவ்வொரு கமாண்டுக்கும் பல லிட்டர் தண்ணீர் செலவாகிறது என்பது உங்களுக்கு தெரியுமா?

### குளிர்விக்கும் சிஸ்டம்!

நமது வீட்டில் உள்ள சாதாரண லேப்டாப்பில் தொடர்ந்து இரண்டு மணி நேரம் வேலை செய்தாலே அது சூடாகிவிடும். அப்படியென்றால் உலகத்தில் உள்ள கோடிக்கணக்கான மக்களின் கட்டளைகளை ஏற்றுச் செயல்படும் ஏஐ சர்வர்கள் எவ்வளவு சூடாகும் என்பதைச் சற்று கற்பனை செய்து பாருங்கள். இப்படி எந்நேரமும் நெருப்பைக் கக்குவது போல வேலை செய்யும் அந்த ராட்சச பிராசஸர்கள் உருகிவிடாமல் இருக்க, அவற்றை எப்போதும் குளிர்ச்சியாக வைத்திருக்க வேண்டும்.

இதற்காகவே பிரத்யேகமான 'கூலிங் டவர்கள்' அமைக்கப்பட்டு, சூடான இயந்திரங்களின் மேற்பரப்பில் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. கூகுள் நிறுவனத்தின் 2024 சுற்றுச்சூழல் அறிக்கை சமீபத்தில் ஒரு பகீர் தகவலை வெளியிட்டது. அதாவது,



2023 ஆம் ஆண்டில் மட்டும் அந்த நிறுவனத்தின் டேட்டா சென்டர்களைக் குளிர்விக்க சுமார் 610 கோடி கேலன் நன்னீர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது அதற்கு முந்தைய வருடத்தைவிட பதினேழு சதவீதம் அதிகம் என்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### நன்னீர் எதற்கு?

கம்ப்யூட்டரை குளிர்விக்க எதற்கு நல்ல தண்ணீரை வீணாக்க வேண்டும், சாக்கடை நீர் அல்லது மறுசுழற்சி செய்யப்பட்ட தண்ணீரைப் பயன்படுத்தலாமே என்று பலரும் நினைக்கலாம். ஆனால், அங்கேதான் ஒரு பெரிய சிக்கல் இருக்கிறது. மறுசுழற்சி செய்யப்பட்ட தண்ணீரில் கால்சியம் மற்றும் மெக்னீசியம் போன்ற தாது உப்புகள் அதிகமாக இருக்கும். இந்த நீரைப் பயன்படுத்தினால், பல கோடி ரூபாய் மதிப்புள்ள வெப்பப் பரிமாற்றி இயந்திரங்களில் உப்புப் படிந்து அவை சீக்கிரமாகவே பழுதாகிவிடும்.

அதனால்தான் நிறுவனங்கள் எந்தவித சமரசமும் இன்றி, மனிதர்கள் குடிப்பதற்குப் பயன்படுத்தும் சுத்தமான நன்னீரையே இந்த வேலைக்கும் பயன்படுத்துகின்றன. இதில் கொடுமை என்னவென்றால், இயந்திரங்களை குளிர்விக்க ஊற்றப்படும் தண்ணீரில் 80 சதவீதம் அப்படியே ஆவியாகி காற்றில் கலந்துவிடுகிறது. அந்த நீரை மீண்டும் நீர் சுழற்சிக்குள் கொண்டுவரவே முடியாது.

### தண்ணீர் பஞ்சம்!

இந்த ஏஐ வளர்ச்சி இப்படியே போனால் எதிர்காலம் என்னவாகும் என்ற அச்சம் இப்போது பரவலாக எழுந்துள்ளது. புகழ்பெற்ற நிதி நிறுவனமான மோர்கன் ஸ்டான்லி வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 2028 ஆம் ஆண்டிற்குள் இந்த ஏஐ டேட்டா சென்டர்களின் தண்ணீர் தேவை பதினோரு மடங்கு அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.



ஒரு சராசரி டேட்டா சென்டர் என்பது, சுமார் ஐம்பதாயிரம் மக்கள் தங்களது தினசரி தேவைக்குப் பயன்படுத்தும் தண்ணீரை அசுர வேகத்தில் குடித்துவிடுகிறது. ஏற்கனவே உலகின் பல பகுதிகளில் மக்கள் குடிக்கக் கூட தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படும் நிலையில், இது மேலும் மிகப்பெரிய தண்ணீர் பஞ்சத்தை உருவாக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

# வளையல்காரர்

ஊரிலிருந்து வந்த என் அக்காள் மீனா, என் கை வெறும் கையாக இருக்கிறதே என்று வருத்தப்பட்டு "இந்தாடாடி இத போட்டுக்க. இத கூட வாங்கிப் போட முடியலையா? என்ன ஊருடி இது" என்று சலித்துக்கொண்டு, கையிலிருந்த வலையல்களில் ஒரு சிலதை கழட்டி எனக்கு அணிவித்தாள்.

"ஐயோ வேண்டாங்கா. அவர் திட்டுவார். அப்படி ஒன்னும் இல்லக்கா, ஓடி ஆடிக் கழனி காடுன்னு வேல செய்யறதால கண்ணாடி வளையல் உடைஞ்சு போவுதுக்கா. இப்ப இன்னைக்கு வந்துருவாரு வளையல்காரர். வாரத்துல ஒரு முறை கண்டிப்பா வருவார்க்கா... அவர் வந்தா போட்டுக்கிறேன்" என்று மறுப்பு தெரிவித்து பேசிக்கொண்டிருந்தபோதே, தன் தங்கை சொன்னது போலவே வயதான, வெள்ளைத் தாடி முளைத்த, வழுக்கை தலையோடு, குள்ளமான ஒரு மனிதர் தோள்பட்டையில் பெரிய பெட்டியைச் சுமந்துகொண்டு சந்து வழியே நடந்து வந்தார். எப்பொழுது வந்தாலும் உரிமையோடு மாட்டுக் கொட்டகைக்குள் நுழைந்து உட்கார்ந்தவுடன்"ம்மா கொஞ்சம் குடிக்க பச்ச தண்ணி கொண்டாம்மா... ப்பா.என்ன வெய்யிலு, தாகமா இருக்கு" என்று உரிமையோடு கேட்பார்.

"கூழ் குடிக்கிறிங்களா..." என அன்போடு கேட்ட என் அத்தைக்கு "கொண்டாம்மா.... வெளவெளன்னு வருது என்று கூறிக்கொண்டே பெட்டியைத் திறந்து, வகை வகையான வளையல்களை எடுத்து வைத்ததும், வளையல்காரர் வந்திருக்கின்றார் என்ற செய்தியை அக்கம்பக்கம் உள்ளவர்களுக்குத் தெரிந்ததும், அனைத்து பெண்களும் ஒன்றுகூடிவிட்டனர். அவரோடு பெண்கள் சுத்தி உட்கார்ந்துகொண்டு கலகலப்பாகப் பேசிச்சிரிப்பார்கள். அந்தப் பேச்சில் விரசமோ ஆபாசமோ எதுவுமே இருக்காது. அனைத்தும் குடும்பம் சம்பந்தமாகவே இருக்கும். பேசிக்கொண்டே, வந்திருந்த பெண்களில், விருப்பப்பட்டவர்களுக்கு வளையல்களை வகை வகையாய் அவரவர்களின் கைக்குத் தகுந்தார்போல் எடுத்து, கைப்பிடித்து, முட்டியில் படாமல் இலகுவாக நகர்த்தி, வலி தெரியாமல் கைகொள்ள வளையல்கலை போட்டுவிடுவார்.

அப்படி போடும்போது ஆரம்பத்தில் ஒரு விதமான வலியோடு தனது முகத்தைத் திருப்பிக் கொள்பவர்கள், வளையலைப் போட்டு முடித்தவுடன், மகிழ்ச்சியான முகத்தோடு இரு கைகளைத் தூக்கி, ஒரு ஓசை எழுப்பிச் சிரிக்கும்பொழுது, அவரும் சிரிப்பார். இப்படி மகிழ்ச்சியின் எல்லைக்குள் அந்த வளையக்காரர் எங்கள் வீட்டில் அடிக்கடி வந்து போவார்.

ஒன்றாகக் கூடி வளையல் போட்டு மகிழ்ந்த



அத்தனை பேரும், ஏதோ தன் உறவுக்காரரோடு உட்கார்ந்து பேசுகின்ற மனநிலையை அடைவார்கள். சிறிது நேரம் கழித்து, வளையல்காரரே "சரிம்மா... நேரமாகுது, பொழுதுக்குள்ள வீடுபோய் சேரனும், கொண்டாங்க..." என்று அவர்கள் போட்டுக்கொண்ட வளையல்களுக்கான பணத்தைக் கேட்டதும்,

"நீ வெலைய சொல்லு" என்று மலரு சட்டெனச் சொன்னதும் "உனக்குத் தெரியாதாமா, வெலவாசிக் கூடிப்போச்சு, முன்னமாதிரி கெடயாது" என்று வளையள்களை அடுக்கிப் பெட்டிக்குள் வைத்தவாரு பதில் சொல்வார்.

"உணக்குதான் வெலவாசி ஏரிப்போச்சு, எங்களுக்கு அதே கூலிதான். கையில இருக்கிறத கொடுக்குறன் வாங்கிக்க. இங்கே உக்காந்திரு, வீட்டுக்குப் போயிட்டு காசு எடுத்துட்டு வந்துடறேன்"என்று சொல்லி வளையல் சத்தத்தோடு எழுந்தாள் பொற்கொடி.

சாந்தி மட்டும் தயக்கத்தோடு "வலையல்காரே, இப்ப கையில காசு இல்ல. அடுத்தமுற வரும்போது தரேன். கலவெட்டுன காசு இன்னும் வரல. நாளைக்கு கொடுத்துடுவாங்க.அடுத்த வாரம் வந்தா தந்திடுறேன்" என்று பேசிக் கடன் வைத்தாள்.

கொடுத்ததை வாங்கிக்கொண்டு, சாந்தியின் கடனை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டு வளையல் பெட்டியைத் தோள்பட்டையில் மட்டிக்கொண்டு, சாய்ந்தபடி சுமையோடு நடந்தார் வளையள்காரர்.



- கயப்பக்கம்
இரா.இரமேஷ்

# தனித்துவம்

கோவையில் பணி நிமித்தமாக வசிக்கக்கூடிய பலராமன், தன் மனைவி மற்றும் குழந்தைகளோடு தன் கிராமத்திற்கு வந்திருந்தான், எப்போதாவது வாய்ப்பு கிடைக்கும்போது வந்து ஓரிரு நாட்கள் தங்கி விட்டு சென்றுவிடுவான், அப்படிதான் இப்போதும் வந்துள்ளான், பகலெல்லாம் பீச்,பார்க்குன்னு சுத்திட்டு வந்தவர்கள், இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு உறங்கச் செல்லும்போது, குழந்தைகள் பாட்டியிடம் படுக்க வேண்டுமென அடம்பிடித்து, பாட்டி படுத்திருந்த பாயில் படுத்துக்கொண்டு "பாட்டி,பாட்டி, கதைச்சொல்லு என்றார்கள்,



பாட்டியும் பாவம் புள்ளைங்க இரண்டு நாளில் போய்டுமுன்னு , என்ன கதை சொல்லலாமுன்னு யோசித்தாள், அதற்குள் புள்ளைங்க நச்சரிக்க, பாட்டி கதைச்சொல்ல ஆரமித்தாள்,

"ஒரு ஊர்ல ஒரு வீரன் சூரன் இருந்தான், உம் போடுங்கடி"

"நீ சொல்லிக்கிட்டே இரு, நாங்க கேட்கிறோம்"

"என்ன சொன்னேன்,,,, ஆங்,,, ஒரு ஊர்ல ஒரு வீரன் சூரன் இருந்தான், அவன் அவனுக்கு கல்யாணம் பன்ன பொண்ணு பார்க்க ஏழு கடல் தாண்டி, ஏழு மலைத்தாண்டி,,,

"பாட்டி, கதையில பொய் சொல்லலாம், பொய் மட்டுமே கதையா சொல்லாதே,,, எந்த உலகத்தில ஏழு கடல் இருக்கு பாட்டி, சீரியல் பார்த்து கெட்டுப்போய்ட்ட பாட்டி,,,,"

"அடே,,,இவளுக வேற,,, சரி வேற கதைச் சொல்றேன் கேளுங்க"

"இப்பவாவது நிஜக்கதைச் சொல்லு"

"சரி சொல்றேன் ஒரு காலத்தில் ஒரு பாலைவனத்தில், இரண்டு செடிகள் இருந்தது, ஒரு ரோஜா இன்னொன்னு கற்றாழை, ரோஜா அழகான சிவப்பு பூப் பூத்து அழகா இருந்தது, எல்லாரும் அதை நின்னு வேடிக்கை பார்த்தாங்க, ரசிச்சாங்க , இது அந்த ரோஜாவுக்கு கௌரவமாக இருந்தது, என்னை எல்லாரும் ரசிக்கிறாங்க, இந்த தோட்டத்தில் எனக்கு நிகர் யாருமில்லை என கொக்கரித்தது, பக்கத்தில் யாரும் ரசிக்காமல் பூவும் இல்லாமல், காற்றுக்கு நடனமாடாமலும் இருந்த கற்றாழையை கேலியாக பார்த்தது ரோஜா இதையெல்லாம் பார்த்துக்கொண்டு அமைதியாகவே இருந்தது கற்றாழை,

சில மாதங்களுக்குப் பிறகு கோடைக்காலம் வந்தவுடன், நீர் நிலைகள் வறண்டு, தாவரங்களுக்கு தண்ணீரில்லை, நீரில்லாமல் ரோஜா அதன் அழகை இழக்கத் தொடங்கியது, கற்றாழை அப்போதும் அமைதியாகவே இருந்தது , அப்போது ரோஜா தான் செய்த தவறுகளை உணர்ந்து, தண்ணீர் கிடைக்கவில்லை, வெய்யிலும் வாட்டுது, நீ எப்படி அப்படியே இருக்கே, எனக்கு கொஞ்சம் தண்ணீர் கொடுயென்று கற்றாழையிடம் கெஞ்சியது ,

கற்றாழையும் ரோஜா பாவமென உதவிசெய்ய முன் வந்து , கோடைக்காலம் முடியும் வரைக்கும்,தண்ணீர் கொடுத்து உதவியது, நான்தான் பெரிய அழகுன்னு நெனச்சி அகம்பாவம் கொண்டேன், அதை பொருட்படுத்தாமல் என்னை காப்பாற்றியதற்கு நன்றியென்றது ரோஜா"



"பாட்டி கதை சூப்பரா இருக்கு, இன்னை இதுப் போதும் நாளைக்கு வேற கதை சொல்லு, நாங்க தூங்குறோம்"

"தூங்குங்க,,, தூங்குங்க,,, இந்த கதையில நீங்க என்ன புரிஞ்சிக் கிட்டீங்க சொல்லுங்க"

"அதுவா யாரையும் அவர்களின் தோற்றத்தை வைத்து தரக்குறைவாக நினைக்கக்கூடாது, ஒவ்வொருத்தருக்கும் ஒரு தனித்துவம் உண்டு இதை தான் இந்தக் கதைச் சொல்லுது பாட்டி"

"அதானே பார்த்தேன், இந்தக்காலத்து புள்ளைங்க புத்திசாலிகள்தான்,கற்பூரம் மாதரி புரிஞ்சிக்கிறாங்க"ன்னு பேத்திகளை அணைத்தப்படி பாட்டியும் கண்ணை மூடினாள்.

-நாகை
ஆசைத்தம்பி
கோவை

# காலம் மறந்த பொக்கிஷங்கள் !!

.A.S.GOVINDA RAJAN

## தாய விளையாட்டு...!!

**எத்தனை பேர் விளையாடலாம்?**

இரண்டு முதல் நான்கு பேர் வரை விளையாடலாம்.

**விளையாட தேவையானது :**

நான்முக தாயக்கட்டை

ஆறு சோழிகள் அல்லது ஒரு பக்கம் தேய்த்த புளியங்கொட்டைகள் வைத்தும் விளையாடுவார்கள். எப்படி விளையாடுவது?

தாயம் என்பது ஆட்டத்தை ஆரம்பிக்க சொல்லக்கூடிய வார்த்தை. இந்த சொல் ஆட்டத்தில் ஒன்றை குறிக்கும்.

இந்த விளையாட்டை பெரும்பாலும் நான்முக தாயக்கட்டையை வைத்துதான் விளையாடுவார்கள்.

நான்முக தாயக்கட்டையின் மூன்று பக்கங்களில் (1), (2) மற்றும் (3) புள்ளிகள் இருக்கும். ஒரு பக்கத்தில் புள்ளி ஏதும் இருக்காது (0).

இரு நான்முக தாயக்கட்டைகளை உருட்ட வேண்டும். இரு தாயக்கட்டைகளின் விழும் எண்களை கூட்டுனால் 1, 2, 3, 4, 5, 6, 12 (0,0) ஆகிய எண்கள் வரும்.

இதில் வரும் 1, 5, 6, 12 எண்களை சிறப்பாகக் கருதி மற்றொருமுறை தாயக்கட்டையை உருட்டுவது வழக்கம். இவ்வெண்கள் அடுத்தடுத்து மாறி மாறி விழுந்து கொண்டிருந்தால் அதை விருத்தம் என அழைப்பதுண்டு.

இரண்டு முதல் நான்கு ஆட்டக்காரர்கள் ஆட்டத்தை துவக்கவேண்டும். ஒவ்வொரு ஆட்டக்காரரும் தனித்தனியான காய் வகைகளை தேர்வு செய்து கொள்ள வேண்டும். காய்கள் உருவத்திலோ அல்லது நிறத்திலோ வேறுபட்டு இருக்க வேண்டும்.

ஆட்டக்காரர்கள் ஒவ்வொருவரும் ஆறு காய்களைக் மனைப் பகுதியில் வைத்து ஆட்டத்தை தொடங்க வேண்டும். தாயம் இட்டபின்னேதான் மனையிலிருந்து காய்களை முதற்கட்டத்தில் வைக்க வேண்டும். ஒரு கட்டத்தில் ஒரு ஆட்டக்காரரின் காய்களே இருக்க முடியும்.

அதேகட்டத்தில் வேறு ஆட்டக்காரரின் காய்கள் நுழைந்தால் முதலிருந்த காய்கள் வெட்டப்பட்டு மனைக்கு திருப்பி அனுப்பப்படும்.


சில கட்டங்களின் குறுக்கே இரு கோடுகள் இருக்கும். இவை சிறப்புக் கட்டங்கள். இக்கட்டங்களில் பல ஆட்டக்காரர்களின் காய்களும் சேர்ந்து இருக்க முடியும்.

1, 5, 6 அல்லது 12 ஆகிய எண்களுக்கு மறு ஆட்டம் உண்டு. பிறர் காய்களை வெட்டினாலும் மறு ஆட்டம் உண்டு, தாயக்கட்டையை உருட்டலாம்.

ஒரு முறை காய்கள் சுற்றி வந்த பின் திரும்பவும் மனைக்குள் செல்லவேண்டும். ஆனால் வேறு ஆட்டக்காரரின் காய்களை ஏற்கனவே வெட்டவில்லையென்றால் மனைக்குள் செல்ல முடியாது.

அப்படி மனைக்குள் செல்ல முடியாத காய்கள் கடைசி கட்டத்திலேயே தங்கிவிடும். சிலர் விதிமுறையை மாற்றி காய்களை சுற்றி சுற்றி வரவைப்பதும் உண்டு.


காய்கள் மனைப் பகுதியில் உள்ள கட்டத்துக்குள் ஏறிய பின் மீண்டும் மனைக்குள் புகுந்தால் அக்காய்களை பழம் என கருதி ஆட்டத்தில் இருந்து விலக்கி வைக்க வேண்டும்.



# அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில்...!!

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஐவர் மலை என்னும் ஊரில் அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோயில் அமைந்துள்ளது. திண்டுக்கல்லில் இருந்து சுமார் 77 கி.மீ தொலைவில் ஐவர் மலை என்னும் ஊர் உள்ளது. ஐவர் மலையில் இருந்து நடந்து செல்லும் தொலைவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

குழந்தை வேலப்பர் தோகை விரித்த மயிலின் கழுத்தை இடக்கையில் அணைத்தவாறும், வலக்கையை இடுப்பில் ஊன்றிய படியும், பாதத்தருகே சர்ப்பம் படம் எடுத்த நிலையிலும் அமைந்திருப்பது சிறப்பாகும். இந்த அமைப்புள்ள முருகனை 'மயூரப்பிரியன்" என்பர்.





இத்தோற்றத்தை அபிஷேகத்தின் போது மட்டும் தான் காண இயலும். அலங்காரத்தில் இத்தோற்றம் மறைந்து விடும். இக்கோயிலில் உள்ள முருகனின் திருவுருவம் வேறு எந்த கோயிலிலும் காணப்படாத திருவுருவமாகும். இத்திருக்கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது.

கோயில் வெளிப்பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள நவகிரக மண்டபத்தில், நவகிரகங்கள் வட்ட வடிவில் அமைந்துள்ளது.

இக்கோயிலின் உட்பிரகாரத்தில் வடமேற்கு பகுதியில் கிழக்கு நோக்கியபடி விநாயகப்பெருமானும், தெற்கு நோக்கியபடி ஐம்பொன்னாலான நடராஜரும், சிவகாமி தாயாரும் அருள்பாலிக்கின்றனர். சிறிய கருவறையில் குழந்தை வேலப்பர் எழுந்தருளியுள்ளார். அர்த்த மண்டபத்தில் மயில் வாகனம் அமைந்துள்ளது.

இம்மலையில் திரௌபதி அம்மன் சன்னதி மற்றும் இடும்பன் சன்னதியும் அமைந்துள்ளது. முருகன் கோயிலின் எதிரே உள்ள வள்ளலார் ஜோதி மண்டபத்தை அடுத்து ஒரு சுனை உள்ளது. அதற்கருகில் உள்ள மிகப்பெரிய பாறையின் உச்சியில் உச்சி பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இம்மலையின் மிக உயரமான பகுதி இதுவேயாகும். இக்கோயிலுக்கு செல்ல பாறை மீது படிகளை செதுக்கி உருவாக்கியுள்ளனர். இம்மலையின் அடிவாரத்தில் ஒரு சிறிய ஏரி உள்ளது. அதன் அருகே பெரிய ஆலமரத்தடியில் பாதவிநாயகர் சன்னதி அமைந்துள்ளது. தைப்பூசம், கார்த்திகை தீபம், மகாசிவராத்திரி, அமாவாசை, பௌர்ணமி, கிருத்திகை ஆகியவை இக்கோயிலில் மிக விமர்சையாக கொண்டாடப்படுகிறது. விநாயகர் சதுர்த்தி இக்கோயிலில் முக்கிய திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. அனைத்து விதமான வேண்டுதல்களும் நிறைவேற இத்தல இறைவனை பிரார்த்தனை செய்கின்றனர். இக்கோயிலில் வேண்டுதல்கள் நிறைவேறியவுடன் இத்தல மூலவருக்கு அபிஷேக ஆராதனைகள் செய்தும், வஸ்திரம் சாற்றியும் நேர்த்திக்கடனை செலுத்துகின்றனர்.

**A s Govinda rajan**
KODAMBAKKAM, CHENNAI

## தினம் ஒரு தலைவர்கள்

# இப்சூர் ரகுமான் சியோகார்வி வரலாறு





இப்சூர் ரகுமான் சியோகார்வி 1900 - 1962 ஆகஸ்ட் 2) ஓர் இந்திய இஸ்லாமிய அறிஞர் மற்றும் இந்திய சுதந்திர இயக்கத்தின் செயல்பாட்டாளர் ஆவார். இவர் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக 25 ஆண்டுகள் (1922-1947) போராடினார். இதற்காக எட்டு ஆண்டுகள் தனது வாழ்வை சிறையில் கழித்தார். இவர் இந்தியாவைப் பிரிப்பதை கடுமையாக எதிர்த்தார். மேலும் 1952 முதல் 1962 வரை அம்ரோஹா (மக்களவைத் தொகுதி) யிலிருந்து இந்திய தேசிய காங்கிரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றினார்.

பிறப்பு மற்றும் கல்வி

ரஹ்மான் 1900 ஆம் ஆண்டு பிறந்தார் (1318 இஸ்லாமிய ஆண்டு). இவரது குடும்பம் பிஜ்னோர் மாவட்டத்தில் உள்ள சியோகராவை சேர்ந்த ஜமீன்தார் குடும்பமாகும். சியோகரா ஒரு நகரமாகும். இது உத்தரப் பிரதேசம் மாநிலம் பிஜ்னூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இவரது தந்தை ஹாஜி சம்சுதீன் போபால் மாநிலத்திலும் பின்னர் பிகானேர் மாநிலத்திலும் உதவி பொறியாளராக வேலை செய்தார். ரஹ்மான் ஆரம்பத்தில் வீட்டுப் பள்ளியில் கல்வி பயின்றார். பின்னர் முரதாபாத்தில் உள்ள மதரஸா சாஹியில் சேர்ந்தார்.

ரஹ்மான் தனது நிறைவு பாடமான தார்ஸ்-இ-நிஜாமியை மதரஸா ஃபைஸ்-இ-ஆம் யில் முடித்தார். அங்கு அப்துல் கபூர் சியோஹார்வி, அஹ்மத் சிஷ்டி மற்றும் சையித் அப்தாப் அலி ஆகியோரின் கீழ் இவர் படித்தார். பின்னர் 1922 ஆம் ஆண்டில், தாருல் உலூம் தேவ்பந்திற்கு குடிபெயர்ந்தார். அங்கு அன்வர் ஷா காஷ்மீரியின் கீழ் ஹதீத்தில் நிபுணத்துவம் பெற்றார் மற்றும் 1923 இல் (1342 இஸ்லாமிய ஆண்டு) பட்டம் பெற்றார்.

இலக்கியப் படைப்புகள்

அக்லக் அவுர் ஃபல்சா ஃபா-இ-அக்லக்
ஆசாதி: புன்யாடி இன்சானி ஹக்
பாலாக்-இ-முபீன்
ஹுகுமத் கா தீனி தசவ்வூர்
ஃபார்ட் அவுர் இஜ்திமாயத்
இஸ்லாம் கா இக்தேசி நிஜாம்
கசாஸ் அல்-குர்ஆன்
குர்ஆனி உசூல்-இ-மாஷியாத்
ரசூல்-இ-கரீம்
சீரத்-இ-நப்வி கி ஸாருரத் வா அஹ்மியாத்
வக்த் கி காத்ர்-ஓ-கெய்மத்

இறப்பு

சியோஹார்வி புற்றுநோயால் 1962 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 அன்று இறந்தார். இவரது இறுதி ஊர்வலத்திற்கு தாருல் உலூம் தேவ்பந்தின் முதல்வர் காரி முஹம்மது தயிப் தலைமை தாங்கினார். முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, அமைச்சர்கள் மற்றும் இந்திய நாடாளுமன்றத்தின் பல உறுப்பினர்கள் உடலுக்கு அஞ்சலி செலுத்த வந்தனர். மேலும் இவரது இறுதி ஊர்வலத்திற்கு இரண்டு இலட்ச மக்கள் கூட்டம் கூட்டமாக கலந்துக்கொண்டனர். இவரது அடக்க தளம் புது தில்லியின் முன்ஹதியனில் அமைந்துள்ளது, அங்கு தான் ஷா வலியுல்லாஹ் தெஹ்லவியும் அடக்கம் செய்யப்பட்டுள்ளார். இவரது நினைவாக ஜித்தாவில் இவரது பெயரில் அகாடமி நிறுவப்பட்டுள்ளது.

# D56 குறித்து அப்டேட் கொடுத்த இயக்குநர் மாரிசெல்வராஜ்



நடிகர் தனுஷ் போர் தொழில் இயக்குநர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் நடித்து முடித்துள்ள படம் 'கர'. இப்படம் வருகிற ஏப்ரல் மாதம் வெளியாகும் என தயாரிப்பாளர் ஐசரி கணேஷ் தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து நடிகர் தனுஷ் தனது 56-வது படத்தில் நடிக்க உள்ளார். இப்படத்தை மாரிசெல்வராஜ் இயக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து இப்படத்தின் அப்டேட் எதுவும் வெளியாகாமல் இருந்தது.

இந்த நிலையில், தனுஷின் 56-வது படத்தின் படப்பிடிப்பு செப்டம்பரில் தொடங்கும் என இயக்குனர் மாரி செல்வராஜ் அறிவித்துள்ளார். வரலாறு மற்றும் அரசியல் சார்ந்த இப்படம் தனது சினிமா பயணத்தில் மிகப்பெரிய படமாக அமையும் என அவர் கூறியுள்ளார்.



கார்த்தியின் மெட்ராஸ் படத்தில் நடித்து பிரபலம் ஆனவர் கேத்ரின் தெரஸா. அவர் அதன் பின் விஷால் உடன் கதகளி, ஆர்யா உடன் கடம்பன், விஷ்ணு விஷாலின் கதாநாயகன், சுந்தர்.சியின் கலகலப்பு 2 போன்ற படங்களில் அவர் நடித்தார். தற்போது ஹீரோயின் வாய்ப்பு இல்லை என்றாலும் சின்ன ரோல்களிலும் கேத்ரின் தெரசா நடித்து வருகிறார். அவர் ட்ரெண்டி உடையில் போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் புகைப்படங்களை பாருங்க.

# 'முஸ்தபா முஸ்தபா' டிரெய்லர்!




தமிழ் சினிமாவில் பல படங்களில் காமெடி கதாபாத்திரங்களில் நடித்து தனக்கென தனி ரசிகர் பட்டாளத்தை கொண்டவர் நடிகர் சதீஷ். இவர் தற்போது சுரேஷ் ரவியுடன் இணைந்து 'முஸ்தபா முஸ்தபா' என்ற படத்தில் நடித்துள்ளார்.

இப்படத்தை தி மாபோகோஸ் நிறுவனம் சார்பில் பிரதீப் மகாதேவன் தயாரித்துள்ளார். பிரவீன் சரவணன் இயக்கியுள்ள இப்படத்தில் மோனிகா சின்னகோட்லா, மானசா சவுத்ரி, கருணாகரன், புகழ், பாவெல் நவகீதன், ஐஸ்வர்யா தத்தா, லிவிங்ஸ்டன், சாம்ஸ் உட்பட பலர் நடித்துள்ளனர்.

படத்திற்கு எம்.எஸ்.ஜோன்ஸ் ரூபர்ட் இசையமைத்துள்ளார். ஏற்கனவே இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் பாடல்கள் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தன. படம் மார்ச்.6ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்நிலையில் இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது.

# பாடல்களின் உண்மையான வெற்றி இதுதான்... பாடகி ஸ்ரேயா கோஷல்



இந்திய அளவில் முன்னணி பாடகியாக திகழும் ஸ்ரேயா கோஷல், தேசிய விருதுகள் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை குவித்துள்ளார். தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம் என பல மொழிகளில் ஆயிரக்கணக்கான பாடல்கள் பாடி சாதனை படைத்துள்ளார்.

இந்த நிலையில் ஸ்ரேயா கோஷல் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய கருத்துக்கள் கவனம் ஈர்த்துள்ளன.

அவர் பேசும்போது. "ஒரு பாடலின் உண்மையான வெற்றி என்பது ரசிகர்கள் தரும் லைக்குகளில் கிடையாது. ஒரு கச்சேரியில் அந்த பாடல் ஒலிக்கும்போது, ரசிகர்களும் சேர்ந்து பாடுவது தான். ரசிகர்களின் உதடுகள் அந்த பாடலை உச்சரிப்பது தான். இதுதான் இசை கலைஞர்களுக்கு கிடைக்கும் மிகப்பெரிய விருதும், அங்கீகாரமும் ஆகும்.

லைக்குகளை யாரும் எப்போது வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் ரசிகர்களின் மனநிலையை வெல்வதுதான் அந்த பாடலின் உண்மையான வெற்றி. ஒருவர் என்ன மனநிலையில் இருந்தாலும், அவரது மனதை அந்த பாடல் துளைத்து, ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அதுதான் அந்த பாடலின் உண்மையான வெற்றி" என்று குறிப்பிட்டார்.



மலையாள நடிகையான அபர்ணா பாலமுரளி தமிழில் 8 தோட்டாக்கள் படத்தின் மூலம் அறிமுகமானார். இதன்பின் சர்வம் தாளமயம் படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார். ஆனால், சூரரைப் போற்று திரைப்படம்தான் இவருக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று தந்தது. இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை அபர்ணா பாலமுரளி, தற்போது மஞ்சள் நிற சேலையில் எடுத்துக்கொண்ட அழகிய போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். இந்த போட்டோஷூட் தற்போது ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகிறது.

# ஐஸ்வர்யா ரஜினிகாந்தின் புதிய படத்தின் டைட்டில் வெளியீடு!




3, வை ராஜா வை, லால் சலாம் படங்களை இயக்கியவர் இயக்குநர் ஐஸ்வர்யா ரஜினிகாந்த். இந்நிலையில் தற்போது பன்மொழி திரைப்படம் ஒன்றை இயக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

கண்ணன் ரவி குரூப்ஸ் நிறுவனத்தின் 9வது படமான இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். இந்நிலையில் இப்படத்தின் டைட்டில் டீசர் வெளியாகி வெளியாகிறது. படத்திற்கு டெக்ஸ்லா என பெயரிடப்பட்டுள்ளது. தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி ஆகிய 5 மொழிகளில் டைட்டில் டீசர் வெளியிடப்பட்டுள்ளது. தமிழில் அனிரூத் ரவிச்சந்தர் டீசரை வெளியிட்டுள்ளார்.

இந்த டீசர் தற்போது ரசிகர்களிடையே கவனம் ஈர்த்துவருகிறது.

# நடிகர் சதீஷின் ‘முஸ்தபா முஸ்தபா’ படத்தின் அப்டேட்



தமிழ் சினிமாவில் பல படங்களில் காமெடி கதாபாத்திரங்களில் நடித்து தனக்கென ரசிகர்கள் பட்டாளத்தை கொண்டவர் நடிகர் சதீஷ். இவர் தற்போது சுரேஷ் ரவியுடன் இணைந்து ‘முஸ்தபா முஸ்தபா’ என்ற படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை தி மாபோகோஸ் நிறுவனம் சார்பில் பிரதீப் மகாதேவன் தயாரித்துள்ளார்.

பிரவீன் சரவணன் இயக்கியுள்ள இப்படத்தில் மோனிகா சின்னகோட்லா, மானசா சவுத்ரி, கருணாகரன், புகழ், பாவெல் நவகீதன், ஐஸ்வர்யா தத்தா, லிவிங்ஸ்டன், சாம்ஸ் உட்பட பலர் நடித்துள்ளனர். டார்க் காமெடி கதைக்களத்தில் உருவாகியுள்ள ‘முஸ்தபா முஸ்தபா’ படத்திற்கு எம்.எஸ்.ஜோன்ஸ் ரூபர்ட் இசையமைத்துள்ளார். ஏற்கனவே இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் பாடல்கள் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தன.

இந்த நிலையில், ‘முஸ்தபா முஸ்தபா’ படத்தின் வெளியீட்டு தேதியை படக்குழுவினர் அறிவித்துள்ளனர். படக்குழு வெளியிட்டுள்ள போஸ்டரில் இப்படம் வருகிற 6-ந்தேதி திரையரங்குகளில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




நடிகை ஸ்ரீலீலா தற்போது இளசுகளை அதிகம் கவர்ந்த ஹீரோயினாக மாறி இருக்கிறார். அவர் ஒரு பாடலுக்கு ஆடினால் அது மிகப்பெரிய ஹிட் ஆகிறது.

ஸ்ரீலீலா மேலும் நிகழ்ச்சிகள் அல்லது விழாக்களில் கலந்துகொள்ளும்போது மிகவும் கவர்ச்சியான லுக்கில் வரும் போட்டோக்களும் இணையத்தில் வைரல் ஆகின்றன.

தற்போது அவர் ஷார்ட் உடையில் ட்ரெண்டியாக இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்களை பாருங்க.

# விஜய் சேதுபதியின் ‘காட்டான்’ டீசர் வெளியானது!



ஆண்டவன் கட்டளை’ மற்றும் ‘கடைசி விவசாயி’ படங்களுக்குப் பிறகு விஜய் சேதுபதி மற்றும் மணிகண்டன் கூட்டணியில் புதிதாக உருவாகியுள்ள தமிழ் வெப் சீரிஸ் ‘முத்து என்கிற காட்டான்’.

விஜய் சேதுபதி தனது சொந்த தயாரிப்பு நிறுவனமான ‘விஜய் சேதுபதி புரொடக்ஷன்ஸ்’ மூலம் இதைத் தயாரித்துள்ளார். விஜய் சேதுபதியுடன் மிலிந்த் சோமன், சுதேவ் நாயர், வடிவேல் முருகன் மற்றும் பிக் பாஸ் புகழ் வி.ஜே. பார்வதி ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

இந்நிலையில் இதன் டீசர் வெளியாகி உள்ளது. விஜய் சேதுபதியின் துண்டிக்கப்பட்ட தலையை வைத்து கதை நகர்வதுபோல் டீசரில் காட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் இரட்டை வேடங்களில் நடித்துள்ளரா எனத் தோன்றுகிறது. வெப் சீரிஸ் மார்ச் 27ஆம் தேதி ஜியோ ஹாட்ஸ்டாரில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தவிர தியாகராஜன் குமாரராஜாவுடன் மீண்டும் இணைந்து பாக்கெட் நாவல் படத்தில் நடித்துவருகிறார் விஜய்சேதுபதி. இந்த படத்தில் மாளவிகா மோகனன், கிஷோர் மற்றும் ராஜ் பி ஷெட்டி ஆகியோர் நடிக்கின்றனர்.

# உடல்நிலையில் முன்னேற்றம் ‘டிஸ்சார்ஜ்’ ஆனார் டைரக்டர் பாரதிராஜா



தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குனரான பாரதிராஜா, நுரையீரல் தொற்று காரணமாக சென்னை அமைந்தகரையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் கடந்த மாதம் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. அதேவேளை அவரது உடல்நிலை குறித்த வதந்திகளும் அவ்வப்போது பரவி வந்தது. இதற்கிடையில் அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து மருத்துவமனையில் இருந்து அவர் வீடு திரும்பினார்.

பாரதிராஜா ‘டிஸ்சார்ஜ்’ ஆன தகவல் திரையுலகினரையும், ரசிகர்களையும் மகிழ்ச்சி அடைய செய்துள்ளது.

# நடிகைகளின் போலி ஆபாச படங்கள்: கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் -அனுபமா பரமேஸ்வரன்



தென்னிந்திய சினிமாவில் வளர்ந்து வரும் நடி கையாக கவர்ந்து வருகிறார், அனுபமா பரமேஸ் வரன். சமீபத்தில் துருவ் விக்ரமுடன் இணைந்து அவர் நடித்த ‘பைசன்’ படத்திலும் அவரது நடிப்பு பேசப்பட்டது. இதற்கிடையில் நடிகைகளின் போலி ஆபாச படங்கள் வெளியாவது குறித்து அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

“சமூக வலைதளங்களில் நடிகைகளின் போலி ஆபாச படங்களை திட்டமிட்டே வெளியிடுகிறார்கள். இதுபோன்ற விஷம ஆசாமிகளை களையெடுக்க வேண்டும். அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற கூடாது. இதுபோன்ற கேடுகெட்ட சிந்தனையாளர்கள் தண்டிக்கப்பட்டால் தான், இந்த கேவலமான விஷயங்கள் ஒழிக்கப்படும்” என்று ஆவேசம் தெரிவித்துள்ளார்.



நடிகை மமிதா பைஜூ தற்போது இளசுகளை அதிகம் கவர்ந்து வரும் நடிகைகளில் ஒருவராக இருக்கிறார். அவர் நடித்த dude படம் விமர்சனங்களை தாண்டி நல்ல வசூலை குவித்தது.

அடுத்து ஜனநாயகன் படத்தில் விஜய் மகளாக மமிதா பைஜூ நடித்து இருக்கிறார்.

தற்போது மமிதா மிகவும் அழகாக சேலையில் போஸ் கொடுத்து இருக்கும் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார்.






## மழலை

உன் தேவை நான் அறிவேன்
உன் கோபமும் தான்
அறிவேன் உனக்கான
ஒவ்வொன்றும் செய்வதிலே
என் மகிழ்ச்சி வேண்டாமே
வீண் கோபம் எனை
பார்க்கும் ஒரு நொடியில்
உன் மழலைச்சொல்
கேட்டவுடன்
கேட்டதற்கும்
மேலாக
தந்திடுவேன்–
முத்தங்கள்
அன்புடனே
ஆசையுடனே



**ஓம் குமார் P N**

## வெறுங்கை என்பது....!

அறுசீர் மண்டிலம்.

ஒன்றுமில்லை என்றே
சொல்லாதே உன்னிரண்டுக்
கைகள் இருக்கையிலே
நன்றாக உழைத்தால்
முன்னேறி நாலுபேரைக்
காத்தே மகிழ்ந்திடலாம்!
அன்றாடம் உழைத்தால்
எந்நாளும் அன்னத்தைப்
பிறர்க்கும் வழங்கலாமே
அன்போடு உழைக்கப்
பத்துவிரல் அழகாக இருக்கு
உன்னிடத்தில்!

வெறுங்கைஎன் கையே
என்றிடாதே வீறுடனே
உழைத்து முன்னேறு
உறுதுயரை நீக்கி
உயர்ந்திடவே உன்விரல்கள்
பத்தும் உதவிடுமே!
சிறுதுன்பம் எனினும்
தாங்கிடலாம் சீர்மையோடு
உழைத்தால் ஓங்கிடலாம்
சுறுசுறுப்பை உழைப்பில்
காட்டிவந்தால் சொல்கின்ற.
வசதி ஏற்றிடலாம்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## சிதறல்கள்.....

மரத்தை கொல்லாது //
தனக்கென வீடு
அமைக்கிறது //
மரங்கொத்தி பறவை //
---------------------
வருத்தப் படுகிறது //
வாடிய மலரைப் பார்த்து //
தாங்கிய காம்பு //
---------------------
நாளும் பட்டினி //
சாமியார் வேடம் போட்டான்//
ஒழிந்தது வறுமை //
---------------------
வருடம் முடிந்தது //
குப்பைத் தொட்டியில்
குடியேறுகிறது //சாமி படம் //
---------------------
குளத்தோர ஆலமரம் //
விழுதுகளில் ஊஞ்சலாடும்
சிறுவர்கள் //
நடுவராக பிள்ளையார் //
---------------------
சுவரில்லாத சித்திரங்கள் //
அடர்ந்த இருட்டில் கிறுக்கிச்
செல்கின்றன //
மின்மினி பூச்சிகள் //
---------------------
அரசமரத்து நிழல் //
ஓய்வு எடுத்துக்
கொண்டிருக்கிறது //
சுமைதாங்கிக் கல் //
---------------------
விடைத் தெரியாது //
விழிக்கும் மாணவர்களைப்
பார்த்து // வினாத்தாள்கள்
சிரிக்கின்றன //
---------------------
மக்களாட்சி தேர் //
வடம் பிடித்து
இழுக்கிறார்கள்//
வாக்களிக்கும்
வாக்காளர்கள் //
---------------------
குடும்பத்தின் சுமை //
மெல்ல மெல்ல உயர்கிறது //
குழந்தைகளின் படிப்பு //

**பா.செந்தில்குமார்,கோவை**

## நல்வினை காலம்

அன்பே அறத்தின்
அடிப்படையாம்!
பிறருக்கு உதவும் நற்பண்பு
என்றும் நமக்கே பெரு
மகிழ்ச்சி தரும் !

செய்நன்றி மறவாது
செம்மையாய் வாழ்ந்தால்
வையகம் உன்னைப்
போற்றிடும் !

நல்வினை என்பது நாம்
செய்யும் அறச் செயல்களின்
தொகுப்பு !

பிறருக்கு உதவும் அன்பு
உள்ளம் கொண்டால் பெருமை
தேடி உன்னை வந்தடையும் !

துன்பம் நீக்கி இன்ப
விதைத்தால் தர்மம் உன்னை
என்றும் காக்கும் !

நல்ல உள்ளம் விதைக்கும்
விதை நாளை கனியாய்
கையில் சேரும் !

அன்பு காட்டி நீ செய்யும்
நல்வினை ஆயிரம் காலம்
உன்னை காக்கும் !

பிறர் கண்ணீர் துடைக்கும்
கரங்கள் பேரின்ப வாழ்வு
பெறும் !

தர்மம் தலைகாக்கும் என்பார்
பெரியோர் நல்வினை
வாழ்வை ஒளியாய்
மாற்றும் !

விண்ணில் மேகம்
மழையாய் பொழிந்தால்
மண்ணில் பசுமை
மலர்வது போல !

நீ உன் கரத்தால் செய்யும்
நல்வினை நிச்சயம் உனக்கு
ஒரு நிழலாய் அமையும் !

தானம் தருவது பொருளை
மட்டும் அல்ல தயவாய் பேசும்
சொல்லும் அறமே !

பசியால் வாடுவோருக்கு
உணவிடு !

அன்பை விதைப்போம்
நன்மையை அறுப்போம்!

புன்னகை பூக்கும் பாதையில்
என்றும் புண்ணியம் உந்தன்
துணை நிற்கும் !

நிறைவாய் வாழும்
நெஞ்சினில் என்றும் நேர்மை
ஒளி வீசிடுமே!

பிறர்க்கென வாழும்
பெருந்தகை வாழ்வில்
பேரின்பம் தானாய்!
வந்திடுமே !

நல்ல எண்ணம் கொண்ட
உள்ளமே அந்த ஈசான் வாழும்
ஆலயமே !

வல்லமை பெருக வழிகாட்டும்
உன் நல்வினை உன்னை கை
தூக்கும் !

இன்சொல்பேசி அறம்
வளர்த்தால் துன்பம் விலகி
வழி பிறக்கும் !



அன்பை விதைக்கும்
மனிதருக்கே இங்கு
அமைதி என்பது
கிட்டிடுமே!

**பெ.திருமுகம்**
மணமேல்குடி

## ஒற்றுமை ஓங்கட்டும்

ஏற்கனவே சொல்லியப்படி எல்லா விலங்குகளும் காட்டின் கடைசியிலுள்ள அந்த மலையின் நடுவிலுள்ள குகையில் ஆரவாரமில்லாமல் ஒன்று கூடினார்கள், அவர்களுடைய அஜன்டா சிங்கத்தை தலைமை பொறுப்பிலிருந்து விரட்ட வேண்டும் என்பதுதான்,

எல்லாரும் வந்தாச்சா, அந்த ஓநாய் கூட்டமெல்லாம் எங்கேப் போனார்கள், அவர்களை போய் அழைத்து வாருங்கள், என கூட்டத்தின் தலைவர் யானை கூறியதும், நான் போறேன் என்றுச் சொன்னார் குரங்கர் இதைக்கேட்டு கோபமான யானையர் நீர் போனால் சரியாகாது, விரைவாக அழைத்து வர வேண்டும், அதற்கு நம்ம முயலார்தான் சரியாக இருப்பாரென முயலாரை அனுப்பி ஓநாய் கூட்டத்தை அழைத்து வர கட்டளையிட்டார், முயலாரும் மகிழ்ச்சியோடு விரைந்தார்,

முயலார் ஓநாய் கூட்டத்தை விரைந்து அழைத்து வந்தார், வந்தவுடன் ஓநாய் தலைவர் அய்யா, எல்லோரையும் ஒன்றுத்திரட்டி கூட்டிவர சிறிது காலதாமதமாகிவிட்டது என மன்னிப்பு கோரினார், மன்னிப்பெல்லாம் வேண்டாம், இப்போ நான் பேசப்போறதை கவனமாக கேளுங்க, எக்காரணத்தைக் கொண்டும் அந்த கட்டுராஜாவுக்கு தெரியக்கூடாது, ஆமா,,, சொல்லிப்பூட்டேன் என பேசத் தொடங்கினார்,

நண்பர்களே, என் அழைப்பை ஏற்று இங்கு வந்திருக்கும் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த வணக்கம், இங்கே எதற்காக கூடி இருக்கிறோம் என எல்லோருக்கும் தெரியும், இருந்தாலும் இங்கே நான் பதிவுச்செய்ய விரும்புகிறேன், நமது பாட்டன்,முப்பாட்டன் காலத்திலிருந்து நமது தலை முறையிலும், நமது வாரிசுகள் தலை முறையிலும் தொடர்ந்து அந்த சிங்கராஜா இந்த காட்டுக்கு ராஜாவாக இருந்து நமது விலங்கு நண்பர்களை அடித்து உண்ணுவதை ஏற்க முடியாது, நம்மைப்போல அவனும் உழைத்துதான் உண்ண வேண்டும், அதே சமயம் அவர் மட்டும் எதற்கு தொடர்ந்து ராஜாவாக இருக்க வேண்டும், நாட்டுக்குள் நடைப்பெறும் தேர்தலைப்போல நாமும் ஒரு தேர்தல் முறையை கொண்டு வர வேண்டும், அதற்கு நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும், நமக்குள் ஒற்றுமை இல்லையென்றால் அவன் அரசாட்சி தொடர்ந்து நடைப்பெறும், அதற்கு நாம் ஒருக்காலும் இடம் தரக்கூடாது என்றது,

இதைக்கேட்ட நரியார் அதற்காக அந்த ராஜாவை எதிர்த்து நம்மால் ஜெயிக்க முடியுமா, அவன் பலசாலி, நாம் விதியே என வாழ்ந்துவிட்டுதான் போக வேண்டும் என்றது, இதைக்கேட்ட மான் எள்ளி நகையாடியது, விதிகிதி அப்படி ஒன்னுமில்லை, நாம் எல்லோரும் நம்பிக்கையோடு ஒன்றிணைந்தால் காட்டுக்கு ராஜாவாக நம்மில் ஒருவரே வர முடியும், வாழ்வது ஒருமுறை, கோழையாக இருந்து சாவதைவிட, அவனோடு போராடி வீரனாக மடிவோம், வரலாறாவது சொல்லட்டுமே என்றதும்,

"நாம் இறைத்தேடிப் போகும்போது அந்த ராஜா அடித்து கொன்னுவிடுறானே, அவனிடமிருந்து எப்படி நாம் சமாளித்து வருவது,,?" என்றார் நரியார்,

"அடே முட்டாள் நரியாரே,,,, அதைதான் இவ்வளவு நேரமாக சொல்கிறேன், நாம் தனித்தனியாக இருப்பதால்தான் அவனுக்கு இறையாகிப் போகிறோம், இனி நாம் இறைத்தேடப் போகும்போது எல்லோரும் சேர்ந்தே போவோம், கிடைப்பதை பகிர்ந்தே உண்ணுவோம், அப்படி ஒரு மாநாடுப் போல நாம் சேர்ந்துப் போனால் அந்த ராஜா நம்மை நெருங்க மாட்டான், அவனுக்கு பயம் வந்து புதரில் பதுங்கிக் கிடப்பான்,
இதுதான் நமது முதல்கட்டம், அதன்பிறகு
நிச்சயமாக ஒரு மாற்றம் வரும்,
ஒற்றுமையே நமது வலிமை,
இதை எல்லோரும் ஏற்போம் என்றது யானை,



இதைக்கேட்ட அனைத்து விலங்குகளும் ஒற்றுமை ஓங்குக என கோரஸாக குரல் கொடுத்தனர்.

**நாகை ஆசைத்தம்பி, கோவை**

## ஊழ்வினை எதிர்த்து வெல்.!

நல்வினை செய்தால்..
நலம்வரு மென்பார்.
அல்வினை யாற்ற..
அது துன்பம் என்பார்!
வாழ்வெனில் தொடரும்
வல்வினை என்பார்.!
ஊழ்வினை வந்து
உருத்திடும் என்பார்!

முன்வினை பகையாம்
பின்வினை அறியார்..
தன்வினை தன்னைச் சுடும்
என்றுரைப்பார்!
பெண்வினை என்றார்
பிறப்பிலும் பேதமோ?
எண்ணிலா மூடர்கள்
இதை விதி யென்றார்!
கண்ணிலா மாந்தர்
யானையை அறியார்..
மண்ணிலே வினையை
மனுநீதி வகுத்தார்.!
எண்ணியேப் பார்த்தால்
இவையெல்லாம் பொய்யே.!
இன்னமும் விதியை
நம்புவோர் உளரே.!

கைவினை யாற்ற..
கடுமையாய் உழைக்க
பொய்வினை அகலும்!
புதுயுகம் பிறக்கும்..!
செய்வினை என்பர்..
சிந்தனை செய்யார்.!
உய்வினை பெறவே..
உழைபபினை தருவோம்.!

**வே.கல்யாண்குமார.**

1. சிலரை புரிந்து
கொள்ளாமல் வெறுக்கிறோம்
சிலரை புரிந்து கொண்டதால்
வெறுக்கிறோம்

2. மனைவி பேசிக்கிட்டோ
அல்லது திட்டிக்கிட்டோ
இருக்கிறவரை தான்
உறவு நீடிக்கும் அவள்
அமைதியாகிவிட்டால்
வாழ்க்கை
வெறுமையாகிவிடும்

3. தேவை என்று
முடிவெடுத்து விட்டால்
எது தேவையில்லை
என்பது
தெளிவாகிவிடும்

4. ஓட்டை படகில்
உள்ள ஓட்டையையும்
அடைத்து விட்டு அதில்
உள்ளே இருக்கும் நீரையும்
வெளியேற்றிவிட்டு கரை சேர
போராடும் பயணம் தான்
நடுத்தர வாழ்க்கை




5. வாக்கு எந்திரத்தில்
தான்
நோட்டா என்றால்
வாக்காளர்களுக்கும்
நோட்டா

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

# நூல் விமர்சனம்

நூலின் பெயர்: என்னருமை தோழி...!
நூல் ஆசிரியர்: காலச்சக்கரம் நரசிம்மா
விலை : ₹190
வெளியீடு: புஸ்தகா
தொடர்புக்கு: 7418555884



ஆசிரியர் காலச்சக்கரம் நரசிம்மா

டி.ஏ. நரசிம்மன் என்கிற காலச்சக்கரம் நரசிம்மா கடந்த முப்பத்தி இந்து வருடங்களாக பத்திரிக்கையாளராக திகழ்கிறார். இவர் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழில் தனது பணியை துவக்கியவர் தற்போது, தி ஹிந்து ஆங்கில நாளிதழின் நிர்வாக ஆசிரியராக இருக்கிறார். சுமார் 15 நாவல்களை எழுதி இருக்கும் இவரது முதல் நாவல் காலச்சக்கரம் வெளியிடப்பட்டு பரபரப்பாக விற்பனையாக, இவரது பெயர் காலச்சக்கரம் நரசிம்மாவாக மாறியது. இவரது ரங்கராட்டினம் நாவலை படித்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவரை அழைத்து பேசி பாராட்டினார். பிரபல திரைப்பட இயக்குனரும் நகைச்சுவை வசனகர்த்தா சித்ராலயா கோபு, மற்றும் எழுத்தாளர் கமலா சடகோபனின் மகன் ஆவார்.

என்னருமை தோழி..!

மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுடன் நல்ல நட்பு பாராட்டியவரும், மனம்விட்டுப் பேசிச் சிரித்துப் பழகக்கூடிய வெகு சிலரில் ஒருவராகவும் இருந்த டி.ஏ. நரசிம்மன் அவர்களின் மனதில் நிலைத்த நினைவுகள் இந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இரும்புப் பெண்மணி என வர்ணிக்கப்படும் ஜெயலலிதாவுடனான அவருடைய நேரடி சந்திப்புகள். இதுவரை இந்த உலகம் கண்டிராத ஒரு ஜெயலலிதாவை உங்களுக்கு அனுபவபூர்வமாக அறிமுகப்படுத்தும் என்பது நிச்சயம்.

Pustaka
www.pustaka.co.in
+91 7418555884
விலை: ₹190.00
ISBN: 978-93-5695-731-2

*முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பற்றி எழுத அவரிடம் நேரடி அனுமதி பெற்றவர் என் இனிய நண்பர் திரு.காலச்சக்ரம் நரசிம்மா...*

*அவர் இதை எழுதி வெளியான நேரம் வாசிக்கத்தான் அவரில்லை என்ற தனது ஆதங்கத்தையும் பதிவு செய்துள்ளார். 75 நாட்கள் மருத்துவ வாசத்தில் ஆரம்பிக்கும் தொடர் ஜெயலலிதா அவர்கள் 2008ம் 60 வயதை எட்டியது அந்தக் காலகட்டத்தில் கிரக நிலைகள் சரியில்லாததால் தலைவர் ஒருவர் விமான விபத்தில் உயிரிழப்பார் என அறிந்து விமானப் பயணத்தை தவிர்க்கும்படி செய்தி அனுப்புகிறார்.*

*பிப்ரவரி 22 ம் தேதி அவர் சென்னையிலிருந்து திருச்சிக்கு செல்லவிருந்த விமானம் என்ஜின் கோளாறால் 40 நிமிடங்களில் சென்னை திரும்ப, அடுத்த விமானமும் தாமதம் ஆனதால் திருக்கடையூருக்கு காரில் பயணம் மேற்கொள்கிறார். அதன் பிறகு 2009 செப்டம்பர் 2 ம் தேதி ஹெலிகாப்டர் விபத்தில் ஆந்திர முதல்வர் ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டி காலமாகிறார்.*

*அப்போது அவருக்கு வயது 60. இத்தகவலை ஜெயலலிதா காலசக்கரம் நரசிம்மா விடம் தொலைபேசியில் இரவு நேரம் அழைத்து தகவல் தெரிவித்து வீட்டிற்கு அழைத்து எப்படி இது சாத்தியம் எனக் கேட்கிறார்.*

*அப்போது கிரக நிலைகள் காட்டியதாகச் சொன்ன நரசிம்மா, 2004 சுனாமி ஏற்பட்ட காலத்தில் ஹிந்து அலுவலகப் பணி முடிந்து நள்ளிரவு திரும்பும் போது கடற்கரைக்கு எதிர்த்திசையில் 40 நாய்கள் ஊளையிட்டபடி சென்றதைப் பார்க்கிறார். மறுநாள் செய்தியில் கடற்கரையோரம் இருந்தவர்கள் உயிரிழந்ததை அறிகிறார். நாய்கள் பிழைத்தன. அதன் பின்னர் ஜெயலலிதா அவர்கள் அவ்வப்போது பகிர்ந்து கொண்ட செய்திகளே இங்கே தொகுப்பாக.*

*ஸ்ரீதரின் வெண்ணிற ஆடை படத்திற்கு கதாநாயகி தேடியபோது நடிகர் வி.கோபாலகிருஷ்ணன் தனக்கு தெரிந்த ஒரு ஐயங்கார் பெண் இருப்பதாக சொல்லி ஜெயலலிதாவை அறிமுகம் செய்து வைக்கிறார். முதல் கதாநாயகன் தமிழில் ஸ்ரீகாந்த் என்றாலும் திரையில் முதலில் இவர் ஜோடியாக கன்னடத்தில் நடித்தவர் ஜே.பி.சந்திரபாபு. அதனால் அவருடன் நல்ல நட்பு இவருக்கு. இயற்பெயர் கோமளவல்லி என்றாலும் அவர்கள் வசித்த "ஜெயா", "லலிதா" என்ற இல்லங்களின் பெயர்களையே ஜெயலலிதா என அவர் அம்மா சந்தியா இவருக்கு பெயராக வைத்தார். சந்தியாவின் இயற்பெயர் வேதவல்லி அதையே தன் இல்லத்திற்கு "வேதா நிலையம்" எனப் பெயர் சூட்டினார் ஜெயலலிதா.*

*எழுத்தாளர்கள் சுபா(சுரேஷ்-பாலகிருஷ்ணன்) கல்கி இதழில் திரைப்பட விமர்சனம் செய்யும் போது ஜெயமன்மதன் என புனைபெயர் வைத்துக் கொண்டது நினைவிற்கு வந்தது( இருவரும் தாங்கள் பிறந்த ஜெய, மன்மத வருடத்தை இணைத்து இப்பெயரை வைத்துக் கொண்டதாகக் கூறினர்)*

*வெண்ணிற ஆடை படம் வெளியான சமயம், பள்ளித் தோழிக்கு பிறந்தநாள் பரிசளிக்கச் சென்ற போது ஏற்பட்ட கசப்பான அனுபவம், அப்போது எடுத்த 3 சபதங்கள்,*

*பின்னாளில் பிரபலமான ஒரு இயக்குநர் ஏவிஎம் நிறுவனத்தில் கதையையே இவரிடம் முழுமையாகக் கூறாமல், படத்தில் இவர் தற்கொலை செய்துகொள்ள வேண்டும் எனச் சொன்னது, அதுவே அந்த இயக்குநர் படத்தில் இவர் முதலும் கடைசியுமாக நடித்தது எம். ஜி.ஆர்- எம்ஆர் ராதா, எம்.ஜி.ஆர்- சந்திரபாபு இடையேயான பிரச்சினைகளுக்கு ஆலோசனை சொன்னது இவரது அரசியல் வருகை என பல சுவாரஸ்யமான தகவல்களை கொண்டது இந்நூல்.*

*முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பிறந்தநாளில் இதைப்பற்றி அடியேன் எழுத நேர்ந்ததும் என்ன பொருத்தமோ?*

**ஸ்ரீகாந்த் திருச்சி**



## உண்ணு முன் உழவைப் போற்று.!

கரிசல் மண் காடெல்லாம்..
கதிர் அசைய..
கலப்பையினை தோளேந்தி
உழவன் செல்ல..
வரிசையாக வயல் வெளியில்
கொக்கு அமர.. பரிசமிட்டப்
பாவையர்கள் நாற்று நட்டார்!

ஏரெடுத்து நிலமுழுது .
எருவெடுத்து தூவியவர்..
சீர் மிகுந்த செயல் மறவர்
உழவர்கள் தலை நிமிர்ந்தார்!
போரெடுத்த மாந்தர்களும்
அமைதி வேண்டி..
புதுவயலில் பொங்கலிட்டு ..
வணங்குகின்றார்..!

தட்டிலே சோறிட்டாள்
அன்னை.. தன்மக்கள்
தொட்டதை உண்ணு
முன்.. உழவைப் போற்றி..
தொட்டிலில் இட்டவள் தான்
சொல்லித் தந்தாள்..
வட்டிலிலே புத்தரிசி தந்திட்ட
உழவரை போற்று என்றாள்..

நிலவாலே வானுக்குப்
பெருமை ! சோதி
நித்திலத்தால் கடலுக்குப்
பெருமை.! களவில்லா
கபடில்லா உழவராலே..
காணுகின்ற நிலத்துக்குப்
பெருமை யென்றாள்.!
அளவில்லா அன்புமிகு
உழவர்களை. உண்ணு
முன் நினை என்று அவளே
சொன்னாள்.!

**வே.கல்யாண்குமார்.**

## மறதி

மறதி ஒரு வசதியா..
மறதி ஒரு அவதியா..
மனதுக்குள் கேள்வி
எழுந்ததே.. விடை மட்டும்
மறந்து போனதே.

வாக்குறுதி தந்தவனும்
மறக்கிறான்.. வாங்கிகிட்டு
போட்டவனும் மறக்குறான்..

படித்தவனும் படிச்சதையே
மறக்குறான்.. குடிச்சவனும்
குடும்பத்தை மறக்குறான்..

கடன் வாங்கி மறுநிமிடம்
மறதி.. கடன் கொடுத்தான்
தலையில் துண்டு உறுதி.

ஏழைப்பாழை இரவுவர
பட்டப்பாடு மறந்தான்..
ஏய்ப்பவனை இரவினிலே
குடித்ததனால் மறந்தான்...

நல்லதெல்லாம் மறந்தான்..
நடந்ததெலாம் மறந்தான்..
உள்ளவனோ தனைமறந்து
இல்லாதவனை மறந்தான்..

மறப்போம் மன்னிப்போம்
அரசியலில் சகஜம்.
மறதி ஒன்று இல்லையெனில்
நாளெல்லாம் கலகம்.

மறதியே வாழ்க.. மறதியே
வருக.. துயரங்களை
மறப்போம் மறதியே வாழ்க..
மறதியே தொடர்க
வாழ்நாளைக் கழிப்போம்.

## எலும்புக் கூடாய் மாறினான்.!

போதையின் வலையில்
மனிதன் விழுந்து..
எலும்புக் கூடாக
மாறினான்.!



வாதையை இங்கே..
விலை கொடுத்தே வாங்கி
சாவென்னும் பாடையில்
ஏறினான்.!

பீடியில் தொடங்கி பான்
பராக் என்ற பேயினைத்
தேடி ஓடினான்! சாராயம்
என்ற சாத்தானின் பிடியில்..
சாய்ந்தே கண்களை
மூடினான்!

கஞ்சா பவுடர்.. மயக்க
ஊசியென.. மரணத்தை
அழைத்துறவாடினான்!நெஞ்சே
கருகி.. குடலே வெந்து.
துஞ்சும் நிலையில்
தள்ளாடினான்!

வீட்டுக்கு ஒருவன்.. வீதிக்கு
ஒரு கடை.. நாட்டுக்கும்
உடலுக்கும் கேடென
தெரிந்தே நாடினான்!
ஏட்டுக்குள் இருக்கும் நீதியை
மறந்தே.. காட்டு மனிதனாய்
கணினி உலகத்தில்
ஓடினான்.!

குடிக்காதே என்று கூறிய
ஆன்றோரை.. சிலைகளாய்
மாற்றி வைக்கிறான்!
இடியென.. தீயென
பரவிடும் போதைக்கு
அடிமைகளாகவே
மாறினான்.! எலும்புக்
கூடாகவே மாறினான்.!



**வே.கல்யாண்குமார்.**




## சுமை அல்ல

தீவிர சிகிச்சை பிரிவில்
உற்சாகமாக நுழைந்தார்
அந்த முதியவர். எனக்கு
பக்கத்து கட்டிலில் இருந்த
உருவம் வெறித்துப்
பார்த்தது; அவரை

ஆறு மாதமாக இரத்த
புற்றுநோய்க்கான சிகிச்சை
பெறுகிறதாகச் சொன்னார்.

பூரணன் அவன் அம்மாவின்
முகசாடையில் இருப்பதாகச்
சொன்னார்.

'இந்த வயதில் மகனுக்கு
பணிவிடை செய்வது
வேதனையும், சுமையுமாக
இல்லையா' என்று
கேட்டேன். இரண்டு
வயதிலேயே தாயை
இழந்தவனுக்கு ,
தாயுமாக இருந்து,
தனியொரு பெற்றோனாக
வளர்த்திருந்தார்.

'எனக்கு இதில் என்ன
தொல்லை? பூரணன்
எனக்கு சுமையில்லை.
அவனால் மட்டுமே
நான் நடமாடிக்
கொண்டிருக்கிறேன்.
என் வாழ்வின் உயிர்ப்பே;
அவன்தான். அவன் மீண்டு
வந்தால் போதும். அதைத்
காட்டிலும் வேறு என்ன
சந்தோஷம்; எனக்கு

என் மனைவியின் பேரில்
இருந்த அத்தனை
பிரியத்தையும் பூரணன்
பேரில் வைத்திருக்கிறேன்;
இவன் முகத்தில் நான்
அவளைப் பார்க்கும்
நிறைவை அடைகிறேன்'

அவன் அம்மா அவனுக்கு
'ரகு நந்தன்' என்ற என்
பெயரின் பாதியாக நந்தன்
என்று பெயரிட்டு
இருந்தாள். நான் அவள்
நினைவில் இவனை
'பூரணன்' என்றே
அழைக்கிறேன்

அவள் பெயர் 'சம்பூர்ணம்'
என்று கண்கள் கசிந்தார்.
மனைவி மேல் கொண்ட

காதல்
பூரணமாகத்
தெரிந்தது;
அவர்
பேச்சில்.

**சசிகலா விஸ்வநாதன்**



பொய்சொல்லத்
தோன்றும் தருணங்கள்....

மறக்க நினைக்கும்
வேதனைப் பொழுதுகள்

உறவை மறந்து
பறந்ததுமனிதம்

எண்ணத்தில் எழுந்து
அலையெனப்பொங்கும்
குற்றமும் கொலையும்
பாலியல் கொடுமையும்

பசியும் பட்டினியும்
மக்கள் வாழ்வில் உயர்வு
பெற்றிட தினமும் போராட்டம்
நில்லாமல் ஓடிடும்
இலக்கைத் தேடி
நல்லதும் கெட்டதும்
நடக்கும் உலகில்
நினைவுகள் ஆயிரம்
நெஞ்சில் நிழலாடும்
பொய் சொல்லத்தோன்றும்
தருணங்கள் எழுதுகிறேன்
கவிதையினால்
சொல்லத்தான்
நினைக்கிறேன்

**Tharamadhan**

## நிதர்சனம்

ஆச்சர்யகுறியென
அருகில்சென்று
பார்த்தப்போதுதான்~அது
ஒன்றுமில்லை ஒன்று,,,,என
தெரிந்தது,,,, முகம்
பார்க்காமலே நமக்கு நாமாக
ஒரு மாயபிம்பத்தை கற்பனை
செய்து ரசிக்கிறோம்
பத்ரகாளியாய்
அவதாரம் எடுக்குமென
நினைப்பதெல்லாம்
பட்டாம்பூச்சியாய்கூட
பறக்க மறுக்கிறது,,,
வெறுங்காலில்
வெய்யிலில் நடப்பவனை
பாவமென நினைக்கிறோம்
காலே இல்லாதவனைப்பற்றி
கவலையேதுமில்லாமல்,,,,

வாழ்க்கையில்~நாம்
தீர்மானிப்பதெல்லாம்
நடந்துவிட்டால்
வாழ்வுக்கான தேடல்
வாசல் கதவைக்கூட
தாண்டாது என்பதை
அறிய ஆவல்
காட்டுவதில்லை
பூக்கும் பூக்களெல்லாம்
பூஜைக்கு ஆகுமென்றால்~நீ
பார்க்கும் பாவையரின்
கூந்தல் குருவிக்கூடாய்
ஆகிவிடும் தெரிந்தும்,,,
தெரியாமலும் எல்லோரும்

ஏதோதோ
செய்கிறோம்
நாம்
சிலையாகதான்
நிற்கிறோம்
வாழ்க்கை
நம்மை
தழுவி தென்றலாய்
போய்க்கொண்டே,,,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

காலையில் எழுந்தால்–
ஓடியாடி கடமையில்
கருத்தாக– நடையா?

ஓட்டமா?? சந்தேகம்
தரித்து– உன்னால்

மட்டும் எப்படி சலிப்போ/
கடினமோ– தெரியாமல்

முடிகிறது– ஏனெனில்,
5 நிமிட நடைக்கு

அரைமணி கால்நீட்டி
அமர்வேன்!!!!


தோழியின்
பதிலோ:
நான்
செய்வது–
என்னை

விரும்புபவர்களுக்காக
அல்ல– நான் அவர்களை
விரும்புவதால்!!!!

**பானுஶ்ரீ**
பாண்டிச்சேரி

டிஸ்கி: அனைத்து
இல்லத்தலைவிகளுக்கும்
சமர்ப்பணம்

கிடைத்தலும்
தொலைத்தலும்தான்
இந்த வாழ்க்கை.
வேறொன்றுமில்லையே.
எதற்கும் வருத்துப்படவோ
மகிழ்ச்சியில் மூழ்கவோ
வேண்டியதில்லையென
அவ்வபோது எனக்கே நான்
சொல்லிக்கொள்வதும்
இதுதான்.

அந்தந்தக் கணத்தில்
றெக்கையில் கனம் படியாமல்

வாழ்க்கையை
வாழ்ந்து
பாருங்கள்.
அதுவே
போதுமானது
இந்த எறும்பு
வாழ்க்கைக்கு
என்று புரிய வரும்.

**துங்கன்.**
கோயம்புத்தூர்



பரதம் ஆடும் உன்
விழிகளுக்கு எத்தனையோ
மொழிகள் ஜதி சொல்ல
தவம் கிடக்கும்போது
கண் அசைவுகளிலேயே
மொழிபெயர்ப்பும்செய்து

விளக்க
உரையையும்
செய்துவிடுகிறது
கண்கள்.

**ஜயந்தி சிவக்குமார்,**
திருச்சி.

## பள்ளிக்கூடம்

மாணவ சிற்பங்களை
உருவாக்கும் சிற்பக்கூடம்

அன்பு அறிவு
சிந்தனைகளின் பிறப்பிடம்
அறியாத புரியாதவைகளை
அறியவைத்து புரியவைக்கும்
அறிவுக்கூடம்

ஒளிவடிவகல்வியை
மொழிவடிவஎழுத்துக்களில்
விழிவழியே ஊடுறுவசெய்து
மனதுக்குள் மனனம் செய்து
வினாக்களை எழுப்பி
விடைகளை வெளிப்படுத்தும்
தேர்வுகூடம்

ஜாதி மத பேதமின்றி
சரிநிகர் சமமாக ஒற்றுமை
உணர்வு ஊட்டிவிட்டு
சகோதரத்துவத்தை
ஊக்குவிக்கும்
சமத்துவகூடம்

கல்விக்கண் திறந்திடும்
ஒளிவிளக்கு அறியாமை
இருள்அகற்றும்
அகல்விளக்கு
கல்விக்கடவுளை வழிபாடு
செய்யும் திருத்தலம்

பணிவு, துணிவு, கனிவு,
ஒழுக்கம், பொருமைகளை
கற்றுத்தரும் தியானக்கூடம்

விதையாய்விழும் பாடங்களை
மாணவனுக்குள் வளரவிட்டு
விரிச்சமாக்கி
வெளிப்படுத்தும் ஆலமரம்.

பருவத்தில் பயிர்செய்ய
மாணவர்களை
தயார்செய்யும் விளைநிலம்

இன்ப துன்ப வரவு செலவு
லாப நட்டம் நன்மை தீமை
என்று அறியா மாணவனின்

அறிவுபசிக்கு
பாலுட்டும்
காமதேனு.!!

**கவிஞர் பொன். பனகல் பொன்னையா.**

## மரம்!

அறுசீர் மண்டிலம்.

மரத்தை வளர்த்திட
மழைபெறுவோம்
மாசைக் குறைத்திடும்
மரங்களன்றோ! மரமே
வெளியிடும் உயிர்வளியை
மண்ணின் அரிப்பையே
தடுத்திடுமே! மரத்தால்
மழையது பொழிந்திடுமே
மரத்தை வெட்ட
வேண்டாமே! வரங்கள்
நம்முடை மரங்கள்தான்
வண்ண இயற்கையின்
சொத்தன்றோ!

மரமே இல்லையேல்
நாமில்லை மாண்பு
கொண்டவை மரந்தானே!
மரமே பொருளியல்
துறையன்றோ
மனிதம் பேணுவோம்
மரத்தாலே! மரத்தை அழித்து
நீ வாழாதே மரமே இலவயத்
தாவரமே! மரமே பசுமையின்
ஆதாரம் மறந்தும்
வெட்டினார்சேதாரம்!

**முனைவர் இராம.வேதநாயகம்.**

பதிவேட்டில் என் வருகையை
எப்படிப் பதிவது..

விழி மூடி நீ
நின்றால் ?!

எவ்வளவு
உயரப்பறந்தாலும்
வந்தமர உன்
கிளை
வேண்டியிருக்கிறது எனக்கு!

**ரிஷபன்**



## அவ்வையின் அமுத வாக்கு.!

சுட்டப் பழம் வேண்டுமென்று..
இட்டமுடன் கேட்கயிலே..
அட்டி யின்றி தந்தவனே
திருமுருகா.! உன்னை
அறுபடை வீடெங்கும்
தேடுகின்றேன்.. அவ்வையின்
தமிழினை கேள் முருகா!

நாவற் பழமாக.. நான்
மண்ணில் விழும் வேளை..
ஆவினம் மேய்பவனாய்
அருகில் வந்தாய்! கூவும்
சேவலையும்.. அகவும்
மயிலினையும் கொடியாய்
கரமேந்திக் காட்சித் தந்தாய்.!
உன் அழகியத் திருவடியை
சரணடைந்தேன்..
சரணடைந்தேன்..
சரணடைந்தேன்..
(சுட்டப் பழம்..)

கத்தனை.. கடம்பனை.. கதிர்
வேலவனை.. சிந்தனை செய்
மனமே..
அனு தினமே. ! எந்தனை
ஆண்டவனை
பழனி யாண்டவனை..
வந்தனை செய்வதால் வாழ்வு
வருமே.!
உன் அழகியத் திருவடியை..
சரணடைந்தேன்..
சரணடைந்தேன்..
சரணடைந்தேன்..!
(சுட்டப் பழம்..)

**வே.கல்யாண்குமார்.**



## கண்ணதாசன்.!

எண்ணப் பறவைச் சிறகடித்து
விண்ணில் பறக்குதைய்யா!
கண்ணதாசனே உம்
நினைவே.. காலத்தை
வெல்லுதைய்யா!

முன்னே கவியென்று
நீயிருந்தாய்.. முத்தமிழ்
முகிழ்ந்ததைய்யா..
என்னே தவம் நாம்
செய்தோமோ? என அகம்
குளிர்ந்ததைய்யா
காவிரிப் பெருக்காய்..
பாவிரிக்கடலால்.. தமிழ்நிலம்
நனைந்ததைய்யா.!
நினைவில் எங்கள்
கண்ணதாசன் சொல்
முன்வந்து மொழிந்ததைய்யா!
(எண்ணப்பறவை)

காரைக்குடியில்
குடியிருந்து.. கண்ணனை
நினைத்ததைய்யா!
உன் கற்பனைக் குடிலில்
அற்புதமான பாடல்
பிறந்ததைய்யா.!
சீர்பெறும் தமிழில் சிந்னை
வெள்ளம்.. ஆறாய்ப்
பாய்ந்ததைய்யா.. தமிழ்ச்
செலவமே! கண்ண தாசனே
உன்னை.. வணங்குதல்
கடமை அய்யா.!
(எண்ணப்பறவை..)

**வே.கல்யாண்குமார்.**



## "ஒரு பறவையின் கேள்வி"

காலைப் பனித்துளி
இலை நரம்புகளில்
உதிரத் துளியாய்த்
தொங்கிடும் நேரத்தில்...
உன் கோடாரி ஏனடா
சூரியனுக்கு முன்பாய்
எழுந்தது?

பறவை நான் இம்மரத்தின்
மூச்சிலுதித்த சந்தமடா...

மரத்தோல்
சுருக்கத்தில்தான்
என் தலைமுறைக்கச்சேரியே
நடக்குதடா!

மனிதனே!
உன் கரத்திலிருக்கும்
இரும்பு ஒரு கருவியல்ல
ஒரு தீர்ப்பு.

நீ வெட்டுவது மரத்தையல்ல
நூறு மழைக்கால
நினைவுகளை!

இந்தக் கிளைகள்
வறண்ட கோடையில்
நிழலாய் விளையும்!

உன் குழந்தைக்குத்
தொட்டிலிட கிளை நீட்டிய
தாய் மரம்!

உன் குழந்தை நகைத்திட
இலைகளை ஆட்டிய
தாய்த் தாலாட்டு!

இப்போது அதே கிளைக்கு
குருதியாபிஷேகமா?

கோடாரி தரும்
ஒவ்வொரு வெட்டும்
ஒரு கூட்டின் மரணம்!
கோடாரி உண்டாக்கும்
ஒவ்வொரு பிளவும்
ஒரு குஞ்சின் அந்திமம்!

நீ சொல்லுவாய்
"மரம் வெட்டுதல்
வளர்ச்சிக்கென்று"

நான் கேட்கிறேன்
"வெறுமை என்பதுன்
"வளர்ச்சியா?"

நீ சொல்லுவாய்
"மரக்கட்டை தேவை."என்று!
நான் கேட்கிறேன்
"அத்தேவையின் அளவு
எது?"

ஒரு விருட்சம் வீழும் போது
மண்ணில் மட்டும் விழாது
விண்ணிலுமோர்
பிளவுண்டாகும்!

நிழல் கிழியும் காற்று திசை
மாறும் பறவையின்
வரைபடம் அழியும்!

மனிதனே,
நீ வீடு கட்டுகிறாய்
நான் வீடிழக்கிறேன்!

உன் நகர உருவாக்கத்தில்
காடுகள் கரைகின்றன!

பின்னாளில் குழந்தைகள்
வானம் பார்த்து கேட்பார்கள்
"பறவைகள் எங்கே?"

அப்போது
மனித மௌனம் பதிலாகும்!

கோடாரியை விடுத்து
மரத்தின் துடிப்பைத்
தொட்டு பார்... அதன்
துடிப்பை நீயுணர்ந்தால்
இரும்பு கோடாரி இளகும்!

நான் வெறும்
பறவை அல்ல.

உன்
சுவாசத்தின்
நிழல்!
உன் நாளைய
வாக்குறுதி!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



கண்களை காணாமல்
திரும்பாமலே பேசு–ஏனெனில்
திருந்தாமல் இன்னும்,
இன்னுமென்று
காதலித்து விட போகிறேன்!

கண்களை மூடாதே
கொஞ்சம் திற
காதலித்து கொள்கிறேன்!

கஷ்டமான பொழுதில் கூட
வாழ கற்றுக்கொள்
எந்த ஒரு நிலையும்
கடந்து வா நிச்சயம் ஒருநாள்
எல்லாம் பழகி போகும்!

இப்படி இருந்தால் இதயம்
காதலிக்காமல்
என்ன செய்யும்?!

நீ இயற்கையை ரசிக்கிறாய்
நான் உன்னை ரசிக்கிறேன்
மெய் மறந்து!

கோயிலில் எல்லாம்
எனக்காக காத்திருக்காதே
கடவுள் யாரென எனக்கு
மறந்து விட போகிறது!

இத்தனை வருட தனிமை
எனை எதுவும் செய்யவில்லை
நீ வந்த பின்பு கிடைத்த
வெறுமை தான்
எனை பாடாய் படுத்துகிறது!

அவளை போல
அகிலத்தில் அப்படி
யாரையும் பிடித்ததில்லை
பிடித்த அவள் மட்டும் தான்
அனு தினமும்
காயப்படுத்துகிறாள்!

நுரை பொங்க தரும்
பில்டர் காபியின்
நறுமணத்தை விட
மலரின் மகரந்த
வாசனையை விட
திரவியங்களின்
மயக்கும் மணத்தை விட
அவள் வியர்ப்பின்
அருகாமையை தான்
காதல் கொள்ளும் மனசு
அணைத்து கொள்ள
ஆசைப்படுகிறது!

நிறை குடம் கூத்தாடுகிறேன்
உன்னை பார்த்ததிலிருந்து!

என் இதழ்கள் பதிய
வேண்டிய கன்னத்தில் உன்
கரங்களையே பத்திர பதிவு
ஏனடி செய்கிறாய்?
எனதுரிமையை பறிக்க
உனக்கு யார் உத்தரவு
போட்டது!

வாழ்க்கையில்
கவலைகளும்–
கஷ்டங்களும் அது
இஷ்டத்துக்கு
வந்து போனாலும்,
பார்ப்பவர்கள்
பொறாமைப்படும் படி
போராட்டங்களுடன்
போராடி உயர்பவனே மனிதன்
யாரிடம் தோற்றாலும்
உன்னிடம் மட்டும் தோற்று
போகாதே!

மழலையை
விரும்பாதவளிடத்தில்
கண்ணாடி வளையல்கள்
சத்தம் கேட்க ஆசைப்பட்டது
என் தவறு தான் பிறக்கும்
போதே சாபத்துடனே
கடவுள் படைத்து விட்டான்
என்பதை ஏனோ
மறந்து விட்டேன்!

நவ நாகரீக கலாச்சாரத்தில்
காதல் எல்லாம் காணாமல்
போய் பல வருடங்களாகி
விட்டது ஏனோ
இப்போதெல்லாம்
காதல் என்ற போர்வையில்
இரவு வேட்டையாட
சில ஆந்தைகள் மட்டும்
உலவி கொண்டிருக்கின்றன!

ஒவ்வொரு மனிதனும்
ஒவ்வொரு முகமூடியை
அணிந்து கொண்டு தான்
திரிகிறான்!

அவன் தற்போது காதலித்து
கொண்டிருக்கிறான்
நிச்சயம் ஒரு நாள்
அவள் அவன் காதலுக்கு
சங்கு ஊதுவாள் ஏனோ
அந்த நாளை மட்டும்
இன்னும் அவள் ஐ–போன்
நோட் பேடில்
குறிக்கப்படாமலே
வைத்திருக்கிறாள்
அந்த 2K காதலி!

எல்லோர் பொறுமைக்கும்
ஒரு எல்லை உண்டு
சாது மிரண்டால் காடு
கொள்ளாது நீயே ஒத்து
கொள்ளும் வரை
எதுவும் தோல்வி ஆகாது
உயிர் உள்ள வரை போராடு!

உண்மையான காதல் என்பது
பூக்கள் எங்கிருந்தாலும்
காயப்படுத்தாமல்
பேரன்பு செய்வதே!

பூக்களை இரும்பு கரங்களால்
சிறைப்படுத்த முடியுமே தவிர
மகரந்தங்களை காதலோடு
அனுபவிக்க முடியாது!

காதலை யாசகம் கேட்பதை
போன்ற பரிதாபங்கள்
இப்பிரபஞ்சத்தில்
வேறொன்றுமில்லை!



மரிக்கும் வரை உன்னை
கைவிடும் எண்ணம்
இந்த ஜென்மம் வரை
இல்லை!

**லி.நௌஷாத் கான்**



## உழவனின் வேர்வை!

நேரிசை வெண்பா!

உழவனின் வேர்வையிலே
உன்னதநெல் முத்தே

அழகான நெற்கட்டே
ஆங்கே... உழைப்பதன்

காட்டாக ஏற்பட்ட
கண்ணழகே நல்லதோர்

பாட்டாகப்பாடுவோம் பார்!

உழவனின் வேர்வையே
ஓர்ந்த மணிகள்

பழகிடும் நெற்கட்டு
பாங்காய்.. வழங்கிடும்

நல்லுணவை நல்லுழவ
னாலேதான் வாழ்த்தினை

நல்லுழவனுக்கே நனி!

## அறிவியல் அறிவோம்!

நேரிசை வெண்பா!

அறிவியல் மேதை
அழகான ராமன்
சிறப்பு விளைவைச்
செழிப்பாய் அறிவித்த
நாளே அறிவியல்
நாளாகும் என்றுமே
ஆளுமை யோடே அறி!

அறிவியல் நன்மையை
அன்பாகக் காட்டிச்

சிறப்புறும் நாளே
செழிப்பாம்..அறிவியல்
நாளாகும் நோபலாம்
நற்பரிசைப் பெற்றநல்

ஆளுமை ராமனே ஆம்!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.


Happy Birthday
P.REVATHI


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424


சிவா விஷ்ணு
திருமண தகவல் மையம்
அனைத்து இனத்தவர்களுக்கும்
முதல் மணம் • மறுமணம்
பொருத்தமான ஜாதகங்கள் அனுப்பப்படும்
மணமகன் • மணமகள் தேவைப்படும் அனைவருக்கும்
நம்பகமான மற்றும் விரைவான சேவை
✓ அனைத்து இனத்தவர்களுக்கும் பதிவு
✓ ஜாதக பொருத்தம் பார்த்து அனுப்பப்படும்
✓ முதல் திருமணம் & மறுமணம் வசதி
✓ உடனடி தொடர்பு & சிறந்த பொருத்தம்
தொடர்புக்கு: 9150989424


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required for construction work in Ambattur
Contact:
8428872887


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for
Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com


BUSINESS NEWS
DAILY ePAPER
DAILY ePAPER
SPORTS
TRAVEL GUIDE
EBOOK LIBRARY
TECH TRENDS
START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009
HEALTH & FITNESS
ENTERTAINMENT
TECH NEWS
TECH TRENDS
FOOD RECIPES


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake, Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate, Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ராசி
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com




**WANTED**

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

**7540003588**




























**Get Free Jobs Alert on Your WhatsApp**


Register Yourself on our

**8122664699**

WhatsApp Your Name, Age & Address on Above Number

Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs













FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
We Build Perfection
we simplify shipping for your business
IATA
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009



MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்



# பல்சுவை களஞ்சியம்




## தோல் அரிப்பு, சொறி போன்றவற்றுக்கு மருந்தாகும் கற்பூரவள்ளி இலைகள்

கற்பூரவள்ளி இலையானது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் மிகுந்த பலனளிக்கக் கூடியது.

கற்பூரவள்ளி இலையின் சாறை எடுத்து தேன் கலந்து அருந்தி வந்தால் சளி மற்றும் இருமல் தொல்லையிலிருந்து விடுபடலாம்.

தோல் அரிப்பு, சொறி போன்றவற்றிற்கு கற்பூரவள்ளி இலைகளை சிறிது பறித்து, நன்கு கசக்கி அந்த இலைகளின் துளிகளை பாதிக்கப்பட்ட தோல் பகுதிகளில் விட்டு வந்தால் விரைவில் குணமாகும்.

கற்பூரவள்ளி செடிகளின் இலைகளை நன்றாக கசக்கி பிழிந்து, அந்த சாறை குடித்தால் மூக்கடைப்பு மற்றும் சைனஸ் தொந்தரவுகள் நீங்கும். அந்த இலை சொட்டுகளை தொண்டையில் படுமாறு அருந்த தொண்டைக்கட்டு, வறட்டு இருமல், சளி தொந்தரவுகள் ஆகியவை நீங்கும்.



கற்பூரவள்ளி இலையையும், துளசி இலையையும் சம அளவு எடுத்து சுத்தம் செய்து லேசாக வதக்கி சாறு எடுத்து தினமும் காலை வேளையில் கொடுத்து வந்தால் மார்புச்சளி குணமடையும்.

கற்பூரவள்ளி செடியின் இலை சாற்றின் சில துளிகளை உள்ளுக்கு அருந்தினால் அஜீரண கோளாறுகள் நீங்கும். நெஞ்செரிச்சல் குணமாகும். கற்பூரவள்ளி செடிகளின் இலைகள் சிறுநீரை அதிகம் பெருக்கும் தன்மை கொண்டது.

இது சிறுநீரகங்களில் அதிகளவில் சேரும் உப்புகளை கரைத்து சிறுநீரகங்களின் நலனை காக்கிறது.

தினமும் கற்பூரவள்ளி இலையினை சாப்பிட்டு வந்தால் நம்முடைய உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து, உயர் ரத்த அழுத்தத்தை குறைக்கவும் உதவும். கற்பூரவள்ளி இலை வாந்தி, குமட்டல் போன்ற பிரச்சனைகளுக்கும் மருந்தாக பயன்படுகிறது.

## பனங்கற்கண்டு மருத்துவ பயன்கள்

2 டேபிள் ஸ்பூன் வெங்காய ஜூஸ் மற்றும் 1 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து வாரத்திற்கு ஒரு முறை சாப்பிட்டால் சிறுநீரகக் கற்கள் பிரச்சினை சரியாகும்.

நம் முன்னோர்கள் இந்த பனங்கற்கண்டை சளி மற்றும் இருமலுக்கு பயன்படுத்தினர். மேலும் இது தொண்டைக் கரகரப்பு, சளியை வெளியேற்றுதல் மற்றும் இருமல் குறைதல் போன்றவற்றை செய்கிறது. இதற்கு இதை நீங்கள் வாயில் போட்டு அந்த உமிழ் நீரை முழுங்கினால் போதும்.

உங்கள் வாய் துர்நாற்றம் வீசுகிறதா? கொஞ்சம் சீரகம் மற்றும் பனங்கற்கண்டை வாயில் போட்டு மென்று தின்றால் போதும் உங்கள் வாய் துர்நாற்றம் காணாமல் போகும்.





உங்களுக்கு எப்பொழுதும் சோர்வாக இருப்பது மாதிரி தோன்றுகிறதா? அதற்கு 1/2 டேபிள் ஸ்பூன் பசு மாட்டு நெய்யுடன் சிறிது பனங்கற்கண்டு மற்றும் சிறிது நிலக்கடலை சேர்த்து சாப்பிட்டால் போதும் மிகவும் சுறுசுறுப்பாக மாறிவிடுவீர்கள்.

தீராத சளி பிரச்சினை இருந்தால் அதற்கு 2 பாதாம் பருப்பு, 1 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு, 1/2 டேபிள் ஸ்பூன் மிளகுத் தூள் பொடி சேர்த்து மிக்ஸியில் போட்டு பொடி பண்ணி பாலுடன் கலந்து குடித்தால் போதும் உங்கள் சளி பிரச்சினை காணாமல் போகும்.

தொண்டைக் கட்டிக் கொண்டு பேச முடியாமல் கஷ்டப்படுகிறீர்களா? 1/2 டேபிள் ஸ்பூன் மிளகுத்தூள், 1/2 டேபிள் ஸ்பூன் நெய் மற்றும் 1/2 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட்டால் தொண்டை வலி குணமாகும்.

சிறிது பனங்கற்கண்டு, பாதாம் பருப்பு மற்றும் சீரகம் சேர்த்து இரவில் படுப்பதற்கு முன் சாப்பிட்டு வந்தால் உங்கள் நினைவாற்றல் அதிகரிக்கும். மேலும் கண்பார்வை அதிகரிக்கும்.

உங்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க இந்த பனங்கற்கண்டை பாதாம் மற்றும் மிளகுத் தூளுடன் சேர்த்து வாரத்திற்கு 2 முறை சாப்பிட்டால் போதும் உங்களை எந்த நோயும் அண்டாது.



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

# மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன? | வளையல் |
| வானத்தில் பறக்கும் பறவை இது, ஊரையே சுமக்கும் பறவை இது அது என்ன? | விமானம் |
| ஒட்டியவன் ஒருத்தன், பிரித்தவன் இன்னொருவன். அது என்ன? | கடிதம் |
| உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்? | எறும்பு |
| நான் சூரியனைக் கடந்து சென்றால் கூட எனக்கு நிழல் ஏற்படாது. நான் யார்? | தென்றல் |



# ஜோக்ஸ்

குருவே! நாணயத்தை சுண்டி விடறேன். பூ விழுந்தா நீங்க நினைச்சது நடக்கும்.
ஓ! தல விழுந்தா?
அப்டி நடக்க வாய்ப்பே இல்ல தலை ரசிகன்கிட்டேயே தலை விழுவார்ங்கறியா?
=================
டாக்டர், கர்ப்பிணிப்பெண் காலைல எந்திரிச்சதும் யார் முகத்துல விழிக்கறாங்களோ அவன் சாயல்ல பேபி பிறக்குமா?
அப்டி பார்த்தா பால்காரன் சாயல்ல தான் எல்லா குழந்தையும் இருக்கும்

============
மிஸ்! உங்க கல்யாண ஆல்பத்துல 1000 க்கும் மேல செல்ஃபி ஃபோட்டோஸ் இருக்கே?
அவங்க எல்லாம் என் முன்னாள் பாய் ஃபிரண்ட்ஸ்,
================
அத்தான்! 9000 ரூபா குடுங்க. ஹேர் ஸ்ட்ரெய்ட்டனிங் பண்ணனும்.
போன மாசம் தானே கர்லிங் ஹேர் க்கு 15,000 வாங்குனே?பேசாம 2 சவுரி வாங்கிக்க
=================
டாக்டர் !டென்சன் ஆகாம இருக்கனும்னா என்ன பண்ணனும்?
9 வது சன் பிறந்ததும் கு க பண்ணிடனும்
============
பார்டர்ல ஏதாவது பிரச்சனைன்னா உதவி செய்வீங்களா?





அந்த 100 சேலையை பிரிக்கக்கூட மாட்டோம்.
பார்டர் எப்டி இருந்தா என்ன?
=================
சாமியார்க்கு ஆங்கிலத்தில் என்ன?
GOD WHO
==============
மாப்ளை! அத்தையும் ,2 பொண்ணுங்களும் பஸ் ஸ்டாப் ல நிக்கறாங்க்ளாம். நீங்க பிக்கப் பண்ணி கூட்டிட்டு வர்றீங்களா?
ம்.கூட்டிட்டு வந்து பிக்கப் பண்ணிக்கறேன்

============
டியர், எங்க வீட்ல ரொம்ப ஸ்ட்ரிக்ட்டு , வெளீல எல்லாம் அனுப்ப மாட்டாங்க
அப்டியா? எங்க வீட்ல விடுவாங்க. நான் உங்க வீட்டுக்கு வந்துடவா?
================
சமையல் குறிப்பாளினி சமந்தா = பலாப்பழத்தை காயா இருக்கும்போதே எடுத்து......
ஏம்மா சுத்தி வளைக்கறீங்க?
பலாக்காய்னு சொன்னா புரியாதா?

==============
எதுக்கு சார் அடிக்கடி "1000 RT " னு ட்வீட்டறீங்க?
1000 RT ட்வீட் நிறைய போட்டிருக்கேன், இதெல்லாம் நமக்கு சர்வசாதாரணம்னு சொல்ல
==============
முதல்வர் ,மக்கள் முதல்வர் என்ன வித்யாசம்?
முதல்வர் னா டம்மியா இருக்கனும்.
மக்கள் முதல்வர்னா ஜெயிலுக்குப்போய்ட்டு வந்த மம்மியா இருக்கனும்
===================
குருவே! ஐம்புலன்களையும் அடக்க என்ன வழி?
சொல்றேன்.
குருதட்சணையா ஸ்ரீ திவ்யா ,தீப்தி பிட்டை வாட்சப்பில் அனுப்பு!
===================
இதோ அதோ னு பாக்கப் போக படம் வர்றத்துக்குள்ள பலபேர் செத்திடுவாங்க போல?
படம் வந்ததும் நீங்க!



# ஜோதிடம் அறிவோம்



## ஆழ்வார்களை சேர்த்து வைத்த உலகளந்த பெருமாள்



ஆதி திருவரங்கத்துக்கு ஆன்மீக யாத்திரை செல்பவர்கள் அவசியம் திருகோவிலூர் கோவிலுக்கும் செல்ல வேண்டும். கோவில்களில் சிறந்தது திருக்கோவிலூர் என்று சொல்லும்படி சொல்லலொண்ணா சிறப்புகள் பெற்ற தலம் இது. மாபலியை வெல்ல வாமனர் திருவிக்கிரமனாக மூவுலகும் ஈரடியால் தாவியளந்த தலம்.

மூலவர்: திருவிக்ரம பெருமாள் வலக்கையில் சங்கும், இடக்கையில் சக்கரமும் தாங்கி தனது வலக்காலை உயரத்தூக்கி விண்ணை அளந்தபடி கிழக்கு. நோக்கி நிற்கிறார். உற்சவ மூர்த்திக்கு ஆயனர் என்றும் கோபாலன் என்றும் பெயர். தாயார்: பூங்கோல் நாச்சியார்.

தல தீர்த்தங்கள்: பெண்ணையாறு, கிருஷ்ண தீர்த்தம், சக்கர தீர்த்தம்,

விமானம்: ஸ்ரீகர விமானம். கிருஷ்ணரின் நித்திய சாந்நித்தியம் பெற்ற பஞ்ச கிருஷ்ணாரண்ய சேத்திரங்களில் இதுவும் ஒன்று. இத்தலத்து பெருமாளை பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்வாரும் ஸ்ரீமணவாள மாமுனிகளும் மங்களா சாசனம் செய்துள்ளனர். பேயார், பொய்கையார், பூதத்தார் என்னும் முதலாழ்வார்கள் மூவரும் ஒருவரை ஒருவர் அறியாமல் தனித்தனியே பல தலங்களுக்கும் சென்று இறைவனை பாடி பணிந்து வந்தனர். பெருமாள் அவர்களை ஒன்று சேர்த்து வைக்க நினைத்தார். தற்செயலாக ஆழ்வார்கள் மூவரும் இவ்வூருக்கு வர நேரிட்டது. நல்ல இருட்டு நேரம். மழை வேறு. முதலில் வந்த ஆழ்வார் ஒரு வீட்டில் தங்க இடம் கேட்டார். ஒற்றை அறை கொண்ட அவ்வீட்டின் முன்புறம் ஒரு தாழ்வாரம் இருந்தது. மிக குறுகலான இடம். ஒருவர் படுக்கலாம். இருவர் இருக்கலாம். மூவர் வந்து விட்டால்...? மூன்று பேரும் நிற்கத்தான் வேண்டும்.

வீட்டுக்குடையவன் முதலில் வந்தவருக்கு இடம் கொடுத்தான். அவர் படுக்கப்போகும் சமயம் இரண்டாமவர் வந்தார். நாராயணா நாராயணா என்றழைத்துக் கொண்டு...! இருவரும் அமர்ந்த சற்று நேரத்திற்கெல்லாம் மூன்றாமவர் வந்துவிட்டார். மூவரும் எழுந்து நின்றனர். தாராளமாக நிற்கலாம். இருட்டு வேளையில் இவர்களுக்கிடையே இன்னொருவரும் புகுந்துகொண்டு நெருக்கத் தொடங்கி விட்டார்.

ஆழ்வார்கள் திகைத்தனர். யார் அது? யார் அது? பெருமாள் பிராட்டியுடன் காட்சியளித்தார். ஆழ்வார்கள் மூவரும் மெய்மறந்து ஆளுக்கொரு அந்தாதி பாடி அரங்கனை பணிந்தனர். ஒருவரை ஒருவர் புரிந்துகொன்டு ஒன்றாக சிறிதுகாலம் தலயாத்திரை செய்தனர். இப்படி ஆழ்வார்களை ஒன்று சேர்த்து வைத்த பெருமாள் இவரே.

ஸ்ரீவேதாந்த தேசிகன் தேகாளீஸ்துதியை இந்த கோவிலில்தான் இயற்றினார். எம்பெருமானார், ஜீயர் பரம்பரைக்குட்பட்ட தலம் இது. இக்கோவிலினுள்ளேயே துர்க்கையம்மன் சந்நிதி ஒன்று உள்ளது. இது தேவேந்திரமாக கருதப்படவில்லை. இத்தலத்திற்கு விழுப்புரத்தில் இருந்து அடிக்கடி பஸ்கள் செல்கின்றன. கடலூரில் இருந்தும், புதுச்சேரியில் இருந்தும் கூட பஸ்கள் செல்கின்றன. வேலூர் மார்க்கமாக செல்லும் திருச்சி- சித்தூர் பஸ்களும் இத்தலத்தின் வழியாக செல்கின்றன. விழுப்புரம், காட்பாடி ரெயில் பாதையில் உள்ள திருக்கோவிலூர் ரெயில் நிலையத்தில் இறங்கியும் இரண்டு மைல் தொலைவிலுள்ள ஊரை சென்றடையலாம். சகல வசதிகளும் உள்ள ஊர்.

## தோஷம் நீக்கும் மச்ச அவதார பெருமாள்

ஜோதிடர்கள் வேதத்தை மறைஎன்றும் கூறுவார்கள். எனவேதான் வேதத்திற்கும், மீன ராசிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கால புருஷ ராசியில் பன்னிரெண்டாமிடமாகிய மறைவு ஸ்தானத்தை குறிக்கும் மீன லக்ன ராசிகாரர்கள் வேதத்திலோ அல்லது வேதத்தின் கண்கள் என போற்றப்படும் ஜோதிடத்திலோ சிறந்து விளங்குவார்கள்.

மீனராசியின் ராசிஅதிபதி குரு பகவான் ஆவார். இது கால புருஷனின் அங்க அமைப்பில் இரண்டு பாதங்களையும் குறிக்கும் நான்காவது உபய ராசியாகும். பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரத்தின் 4-ம் பாதங்களும் மீன ராசிக்குரியவையாகும். சம ராசியான இது பகலில் வலுப்பெற்றதாகும். எந்த கிரகத்தாலும் மீன ராசியில் பிறந்தவர்கள் பாதிப்படைவதில்லை. அதிர்ஷ்ட காற்று எப்பொழுதும் இவர்கள் பக்கம் வீசிக் கொண்டே தானிருக்கும். குரு பகவான் மீன லக்னத்தில் பிறந்தவர்களுக்கு லக்னாதிபதி குரு பகவானே பத்தாம் அதிபதியாகவும் இருப்பது சிறப்பாகும். 10-ம் அதிபதி குரு



பகவான் ஆட்சி உச்சம்பெற்று பலமாக அமைந்துவிட்டால் செல்வம், செல்வாக்கு, சமுதாயத்தில் கவுரவமான பதவியினை அடையும் யோகம் உண்டாகும். அது மட்டுமின்றி மற்றவர்களுக்கு ஆலோசனை கூறுவதில் வல்லவராகவும் வழி நடத்துவதில் கைதேர்ந்தவர்களாகவும் இருப்பார்கள்.

பேச்சால், வாக்கால் சம்பாதிக்கும் யோகம், ஆசிரியர் பணி, கல்வி நிறுவனங்களில் பணிபுரியக்கூடிய வாய்ப்பு, வங்கிப் பணி போன்றவை சிறப்பாக அமையும். 10-ல் குரு, புதன் சேர்க்கை பெற்றாலும் மேற்கூறிய பலன்களே உண்டாகும். மீனராசி லக்னம் குருவின் ஆதிக்கம் பெற்ற ராசியாகும்.

வேதம் ஓதும் ஆந்தணர்கள் சாஸ்திர பண்டிதர்கள், வேதியர்கள், அர்சகர்கள், ஆசிரியர்கள் ஜோதிடர்கள் இவர்களுக்கெல்லாம் காரக கிரகம் குரு பகவான் ஆகும்.

மீன் சந்திரனின் ஆதிக்கம் பெற்ற நீர்வாழ் உயிரினமாகும். அத்தகைய மீன ராசியில் சந்திரன் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் தினமே மச்ச அவதார மூர்த்தியான மத்ஸ்ய ஜெயந்தியாகும். அந்த காலக்கட்டம் மீன்களின் இனபெருக்க காலம் என்பது குறிப்பிடத்தக்கது. வேத நாராயண பெருமாள் இந்த மத்ஸ்ய ஜெயந்தி வேதம் நாளில் ஓதும் வேதியர்கள், அந்தணர்கள், ஜோதிடர்கள், ஆசிரியர்கள் மற்றும் மீனவர்கள் மீனை உண்பவர்கள் அனைவரும் ஆதி திருவரங்கத்தில் உள்ள ரங்கநாத பெருமாளை வணங்க சாபங்களும், தோஷங்களும் நீங்கி உயர்வு ஏற்படும்.

## பூசமும் சிவ வழிபாடும்



சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்கள் ஏராளம். அவர் அதிகமான திருவிளையாடல்கள் நிகழ்த்தியது மாசி மாதத்தில்தான். எனவே மாசி மாதம் முழுவதுமே சிவ வழிபாட்டுக்கு உரிய மாதம் என்று போற்றுகிறார்கள் பக்தர்கள். பூச நட்சத்திர நாளன்று சிவ வழிபாட்டை மேற்கொள்வதன் மூலமாக பிறவிப் பிணியை நீக்க முடியும் என்கின்றனர் ஆன்மீக பெரியவர்கள்.

எனவே மாசி பூச நட்சத்திர நாளன்று நதியில் நீராட வேண்டும். நீராடி விட்டு அந்த நதிக்கரையில் இருக்கக்கூடிய சிவாலயத்திற்கு செல்ல வேண்டும். அங்கு இருக்கும் சிவபெருமானை முழு மனதுடன் சரணாகதி அடைய வேண்டும். பிறகு கோவிலை 19 முறை வலம் வர வேண்டும்.

தொடர்ந்து 5 பூச நட்சத்திர நாட்களுக்கு வழிபாடு மேற்கொண்டு வருபவர்களுடைய கர்ம வினைகள் அனைத்தும் நீங்கும். மறுபிறவி என்பது இருக்காது. நற்கதி பேரு கிடைக்கும். அதனால்தான் சித்தர்கள் பலரும் பூச நட்சத்திரத்தை தேர்வு செய்து ஜீவசமாதி அடைந்திருக்கிறார்கள். வள்ளலார் தைப்பூச நாளை தேர்ந்தெடுத்து தான் ஜோதியில் ஐக்கியமானார்.

## நீண்ட ஆயுள் தரும் ஆயுஷ் ஹோமம்



ஆயுஷ் ஹோமம் நீண்ட ஆயுள், நலம் மற்றும் ஆரோக்கியம் பெற ஆயுர் தேவதையை வேண்டி செய்யப்படும் ஒரு சிறப்பு வேத சடங்காகும். இது பொதுவாக பிறந்தநாள், திருமண விழாக்கள் மற்றும் குழந்தைகளுக்கு முதல் பிறந்தநாளில் நடத்தப்படுகிறது. இந்த ஹோமம் செய்வதன் மூலம் தீராத நோய்கள் குணமடைவதாகவும், தீய சக்திகளிடமிருந்து பாதுகாப்பு கிடைப்பதாகவும் நம்பப்படுகிறது.

ஆயுஷ் ஹோமத்தின் முக்கிய சிறப்பம்சங்கள்: ஆயுள் மற்றும் ஆரோக்கியம்: ஆயுஸ் ஹோமம் நீண்ட ஆயுளை அருளவும், ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் நடத்தப்படும் முக்கிய ஹோமமாகும்.

பரிகாரம்: ஆயுஷ் ஹோமம் தீராத நோய்கள் மற்றும் உடல்நலப் பிரச்சினைகளை குணப்படுத்த உதவுகிறது. கால நேரம்: குழந்தைக்கு முதல் பிறந்தநாள் (பிறந்த நட்சத்திரத்தில்) அன்று செய்வது சிறப்பானது. மேலும், ஒவ்வொருவரின் பிறந்தநாளின் போதும், ஒவ்வொரு ஆண்டும் இந்த ஹோமத்தை செய்யலாம்.

மங்கள கரமான வழிபாடு: இது ஆயுர் தேவதையை வேண்டி, நீண்ட ஆயுளும், செல்வமும், ஆரோக்கியமும் கிடைக்க பிரார்த்திக்கப்படும் ஒரு சிறப்பு வழிபாடாகும்.

சுபம்: இந்த ஹோமம் செய்வதன் மூலம் தேவையற்ற பயங்கள் நீங்கி, மன தைரியம் மற்றும் நீண்ட வாழ்நாள் கிடைக்கும் என்பது ஐதீகம்.

ஆயுஷ் ஹோமம் என்பது ஒருவரின் ஆயுளை நீட்டிக்கவும், ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் வழிவகுக்கும் மிகச்சிறந்த பரிகாரமாக கருதப்படுகிறது.

## அதிர்ஷ்டகரமான நாள் காரிய வெற்றி தரும் மாசி பூசம் வழிபாடு

பொதுவாக, ஒவ்வொரு மாதத்திலும் வரும் திதி, நட்சத்திரம், நாள் மட்டும்தான் சிறப்பு பெறும். ஆனால், மாசி மாதத்தில் வரும் அனைத்து நாட்களுமே ஒவ்வொரு வகையிலும் சிறப்பினைக் கொண்டுள்ளது. இந்த மாதத்தில் வரும் அனைத்து விரத நாட்களும் சிறப்பான பலன்களை தரக் கூடியதாகும். அனைத்து தெய்வங்களையும் வழிபட ஏற்ற மாதமாகவும் மாசி மாதம் கருதப்படுகிறது.

மாசி மாதத்தில் கிரகப்பிரவேசம் அல்லது வீடு மாறிக் குடியேறினால் வாழ்வில் வசந்தம் வீசும் என்பதும் ஐதீகம். முருகப் பெருமானை தகப்பன் சுவாமி என அழைக்கிறோம். அப்படி முருகப் பெருமான், தனது தந்தை சிவபெருமானுக்கு பிரணவ மந்திரத்தின் பொருளை உபதேசம் செய்தது மாசி மாத பூசம் நட்சத்திர நாளில் தான்.

அதனால் தான் மாசி மாதத்தில் மந்திர உபதேசம் பெறுவது, உயர்கல்வி தொடங்குதல் போன்றவை செய்யப்படுகின்றன. இதன் மூலம் அந்தத் துறைகளில், எடுத்துக்கொண்ட கல்வியில் மிகப்பெரிய உச்சம் தொடலாம் என்பது நம்பிக்கை. தை மாதம் வரும் பூச நட்சத்திரம் மிகவும் தெய்வ அருள் பெற்ற நட்சத்திர நாளாகும். அன்று தைப்பூசம் கொண்டாடப்படுகிறது. அதே போல மாசி பூசம் முருகனின் துணைவி தெய்வானைக்குரியது. அம்மையிடம்



வரம் கேட்டால் அப்பனும் சேர்ந்து தருவார் அல்லவா. அந்த வகையில் மாசி பூசமும் தெய்வ வழிபாட்டுக்கு உகந்த நாள்.

மாசி பூசம் நாளான நாளை அருகில் இருக்கும் பெருமாள் கோவிலுக்குச் சென்று பெருமாள் மற்றும் லட்சுமி தேவிக்கு துளசி மாலை சாற்றி வழிபடுவதால் சனிபகவானால் ஏற்படும் பாதிப்புகள் நீங்கி விரும்பிய பலன்களை உண்டாக்கும். பூச நட்சத்திரத்திற்குரிய தல விருட்சமாக அரச மரம் இருக்கிறது. அரசமரம் தலவிருட்சமாக இருக்கும் கோவிலுக்கு சென்று அரசமரத்தையும் அங்குள்ள இறைவனையும் வழிபடுவதால் வாழ்வில் மிகுந்த அதிர்ஷ்டங்களையும், யோகங்களையும் ஏற்படுத்தும்.

இந்த ஆண்டு மாசி மாத பூசம் நாளை (சனிக்கிழமை) காலை 9 மணி 34 நிமிடம் 58 நொடிகளில் தொடங்குகிறது. நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணி 34 நிமிடம் 18 நொடிகளில் நிறைவடைகிறது. பூசம் சனியின் ஆதிக்க நட்சத்திரம் என்பதால், திருநள்ளாறு போன்ற சனி தலங்களில் வழிபாடு செய்வது நல்லது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள விளங்குளம் அட்சய புரீஸ்வரர் கோவில் பூச நட்சத்திரக்காரர்கள் தங்கள் தோஷங்கள் நீங்க வழிபட வேண்டிய முக்கிய தலம் ஆகும். பூச நட்சத்திரத்தின் அதிதேவதையான குரு பகவானை வழிபடுவது குரு தோஷங்களை நீக்கும்.

பூசம் என்பதன் வடிவங்கள் மகுடி, புற்று, அம்பு கூடை, முருகனின் வேல், மயில்தோகை கொத்து, பசுவின் மடி. கோமாதா. ஆகவே மேற்கண்ட வடிவம் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்க கூடிய தெய்வம் அல்லது மகான் அல்லது அந்த ரூபங்களையே நாம் வழிபாடு செய்வதும் தினமும் பார்த்து தியானம் செய்து வருவதும் நமக்கு நல்ல வழிகாட்டுதலை, நல்ல சிந்தனையும், யோசிக்கும் திறனையும், ஆற்றலையும் நமக்கு கொடுக்கும்.

மாசி பூசம் நட்சத்திர நாளான நாளை புட்லூரில் இருக்கும் பூங்காவனத்தம்மன், சங்கரன் கோவிலில் இருக்கும் கோமதியம்மன், தஞ்சை புன்னைநல்லூர் மாரியம்மன், மலேசியா பத்துமலை முருகன் கோவில், அறுபடை வீடு முருகன் கோவில்கள், திருஆவினன்குடி குழந்தை வேலாயுதசுவாமி வழிபடுவது சிறப்பாகும். மாசி பூச வழிபாடு மிகச்சிறந்த நேர்மறை எண்ணங்களை கொடுத்து உங்களுக்கு வாழ்வில் வெற்றியை பெற உதவும்.


# ஆதிதிருவரங்க கோவில் வரலாறு

கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டத்தில் தென் பெண்ணை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது ஆதிதிருவரங்கம். இக்கோவில் முதல்யுகமாகிய கிருதாயுகத்தில் அமைக்கப்பட்டதாக தல வரலாறு கூறுகிறது.

முதல்யுகம் மற்றும் முதல் அவதாரம் என பல சிறப்பம்சங்களை கொண்டுள்ளதால் இது ஆதி(முதல்) திருவரங்கம் என வழங்கப்படுகிறது. இக்கோவில் மூன்று முக்கிய பாக்கியங்களை பக்தர்களுக்கு வழங்குகிறது. அவை முறையே வேலை, திருமணம் மற்றும் புத்திரபாக்கியம்.

இங்குள்ள பெருமாள் சயனக்கோலத்தில் காட்சியளிக்கிறார். இதனை போகசயனம் எனக் கூறுகின்றனர். போகம் என்றால் மகிழ்ச்சி (சந்தோசம்) எனப் பொருள். அவரின் இந்த திருஉருவம் தமிழ்நாட்டில் உள்ள சயனக்கோலப் பெருமாள்களில் பெரியது என கூறப்படுகிறது.

அவர் ஐந்து தலைக் கொண்ட ஆதிசேஷனின் மீது படுத்துள்ளார். அவரின் தலையை ஸ்ரீதேவி மடியில் கிடத்தியுள்ளார். அவரின் கால்களில் ஒன்றை பூதேவி பிடித்துள்ளார். மற்றொரு கால் ஆதிசேஷனின் வால் மீது வைத்துள்ளார். அவரின் தோல்பட்டையை கருடபகவான் தாங்கியிருக்கிறார். அவரின் இடது கை விரல்கள் 4 வேதங்களை குறிக்கின்றன. அவரின் வயிற்றிற்கு மேலாக பிரம்மன் காட்சியளிக்கின்றார். இந்த நான்கு வேதங்களை பிரம்மாவிற்கு எடுத்துரைப்பதாக வருணிக்கப்படுகிறது.



வேதங்களை உபதேசிப்பதால் இந்த காட்சியைக் கண்டால் உத்யோகப் பிராப்தம் கிடைக்கும் என நம்பப்படுகிறது. மேலும் தம்பதிசமயந்தராக பெருமாள் காட்சியளிப்பதாலும் சந்திரனுக்கு சாபவிமோசனம் கொடுத்து அவர் மனைவியுடன் சேர்ந்ததால் திருமண யோகம் கிடைக்கும் எனவும், கிருதாயுகத்தில் சுரதகீர்த்தி என்னும் தொண்டை மன்னன், நாரதரின் ஆலோசனைப்படி இங்கு தன் மனைவியுடன் வந்து வணங்கியதால் நான்கு ஆண்பிள்ளைகள் பெற்றதாக வரலாறு கூறுகிறது.

இதனால் புத்திரப்பாக்கியம் கிடைக்கும் எனவும் நம்பப்படுகிறது. இக்கோவில் கிருஷ்ணருக்கு விருப்பமான தலமாக விளங்குகின்றது. இங்கு கிருஷ்ணர் கொடி மரம் அருகில் உயர்ந்த இடத்தில் தனிசன்னதியில் காட்சி அளிக்கின்றார். ஒரு கையில் வெண்ணையும் மற்றொரு கையில் உரியோடும் தோன்றுகிறார். பஞ்ச கிருஷ்ணாரண்ய ஷேத்திரத்தில், நடு நாடு என்று சொல்லப்பட்ட பகுதியில் ஆதிதிருவரங்கம் உள்ளது.

கிருஷ்ணர் பெயரினால் விளங்கும் காட்டில் அமைந்துள்ளதால் 'கிருஷ்ணாரண்யம்' என்றும் பெயர் பெற்றது. தமிழ் இலக்கணம் இலக்கிய முறைப்படி காடும், காட்டைச் சார்ந்த பகுதியில் இத்திருத்தலம் உள்ளதால் இந்நிலம் முல்லை நிலம் எனப்படும். காட்டை சார்ந்த பகுதியில் முழு முதற்கடவுள் 'கிருஷ்ணர்' இருப்பதனால், இத்திருத்தலத்தில் கிருஷ்ணருக்கு ஒரு தனி சன்னதி உண்டு, இது பலி பீடத்திற்கு பின்புறம் மேல் மாடியில் அமைந்துள்ளது. பக்தர்கள் பலி பீடத்தில் இருந்தே கிருஷ்ணரை சேவித்துக் கொள்கிறார்கள். இச்சன்னதியில் பாலகிருஷ்ணர் ஒரு கையில் வெண்ணையும் மற்றொரு கையில் உரியோடும், ஆண் உருவோடு காட்சித் தருகின்றார்.

தென்பெண்ணை ஆற்றின் தென்கரையோரம் மேட்டுப்பாங்கான பரப்பில் ஆலயம் அமைந்துள்ளது. இதன் தோற்றமும் இதை உராய்ந்தாற்போல வடக்கிலும், கிழக்கிலும் நீர் வழிந்தோடும் பெண்ணை ஆற்றின் அழகும், மனதைக் கவர்ந்த கண் கொள்ளாக் காட்சியாய் இன்பம் அளிக்கிறது.

## மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மாசி மண்டலத்திருவிழா



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மாசி மண்டலத்திருவிழா நடைபெற்றது. மாலை-சுவாமி, அம்பாள் வெள்ளி சிம்மாசனம் விருந்து உண்டு போகைக்கு நாயேன் சடலத்தை வெம் கழுகும், பருந்தும் சுழலு முன்னே வருவாய் - மணப் பந்தலிலே திருந்தும் கரம் பற்றி நிற்பார் திரு முகச் செவ்வி எல்லாம் அருந்தும் கயல் விழியாய்! மதுராபுரி அம்பிகையே! -குலசேகர பாண்டியன் அருளிய மதுராபுரி அம்பிகை மாலை சொக்கே நின் தாளே துணை

## காட்பாடி ஸ்ரீவரதராஜ பெருமாள் கோவிலில் ஸ்ரீ தவனம் உற்சவம் கோலாகலம்!



**வேலூர், மார்ச் 01:**

வேலூர் மாவட்டம், பழைய காட்பாடியில் பெருமாள் கோயில் வீதியில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவில் அமைந்துள்ளது. இந்த ஸ்ரீவரதராஜ பெருமாள் கோவிலில் 28 2.2026 அன்று மாலை 6:30 மணிக்கு தொடங்கி, இரவு 8 மணி வரை ஸ்ரீதவனம் உற்சவம் கோலாகலமாக நடைபெற்றது.

இந்த ஸ்ரீதவனம் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீதேவி, பூதேவி சமேதரராக ஸ்ரீவரதராஜ பெருமாள் மலர்களாலும், துளசி மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டு அர்த்த மண்டபத்தில் (உற்சவர்) எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். பக்தர்கள் ஒருவர் பின் ஒருவராக நீண்ட வரிசையில் நின்று விசிறியால் ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீவரதராஜருக்கு விசிறி வீசி சேவகம் செய்தனர்.

இதையடுத்து இந்த தவனம் பூஜையில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. இந்த ஸ்ரீ தவனம் உற்சவம் முதன்முதலாக ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவிலில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இதையும் ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில் அறங்காவலர் குழு தலைவர் ஜி. மனோகரன் வெகு விமரிசையாக செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஸ்ரீ தவனம் உற்சவம் 1ம் தேதி மற்றும் 2ம் தேதி ஆகிய இரண்டு நாட்கள் இடைவிடாது தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு நடைபெறுகிறது. பக்தர்கள் தவறாது கலந்து கொண்டு இறையருள் பெறுமாறு அறங்காவலர் குழு தலைவர் ஜி. மனோகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அருள்மிகு ஸ்ரீசந்திர சூடேஸ்வரர் திருக்கோயில் தேர் திருவிழா, நந்தி வாகன அலங்காரத்தில்



ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம் அருள்மிகு மரகதாம்பாள் உடனுறை ஸ்ரீசந்திர சூடேஸ்வரர் திருக்கோயிலில் தேர் திருவிழா இன்றைய அலங்காரத்தில் நந்தி வாகனத்தில் திருவீதி உலா நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## ரோஜா முத்தையா நூலகம் களம் இலக்கிய அமைப்பு இணைந்து நடத்திய " தமிழ் அறிவு வளாகம் வரலாற்றில் ஒரு சதுர அடி- திருச்சிராப்பள்ளி சந்திப்பு"




**திருச்சி, மார்ச் 01:**

ரோஜா முத்தையா நூலகம் களம் இலக்கிய அமைப்பு இணைந்து நடத்திய " தமிழ் அறிவு வளாகம் வரலாற்றில் ஒரு சதுர அடி- திருச்சிராப்பள்ளி சந்திப்பு" மத்திய பேருந்து நிலையம் அருகில் கலையரங்கம் திருமண மண்டபத்தில் நேற்று (28.02.2026) நடைபெற்றது.

திருமிகு. ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப(ப.நி) தனது நோக்கவுரையில் தமிழ் அறிவு வளாகம் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற 3 புள்ளிகளின் இணைப்பாகச் செயல்படும் என்றார்.

முன்னதாக திருமிகு. சுந்தர் கணேசன் தனது நோக்கவுரையில் ரோஜாமுத்தையாநூலகப்பயணம் ஒரு லட்சம் ஆவணங்களுடன் தொடங்கி ஐந்தரை லட்சமாகப் பெருகியுள்ளது பற்றியும் நூல்கள் சேகரம் மற்றும் இதரப் பணிகள் குறித்தும் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவு வளாகம் அமைய ₹120 கோடி ரூபாய் மதிப்பிலான இடம் அளித்ததையும் காணொலி படங்களுடன் எடுத்துரைத்தார்.

சதுர அடிக்கு ₹5000 என தமிழ் மக்கள் பங்களிப் போடு இக்கட்டடம் அமையவுள்ளதாகக் கூறினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமிகு. வே.சரவணன் இ.ஆ.ப பங்கேற்றார். களம் அமைப்பின் திரு. அமர்நாத் நன்றி கூற நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

### மாணவர்களுக்கு டாக்டர் பட்டத்தை வழங்கினார் ஆளுநர்




**சென்னை, மார்ச் 01:**

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் 15-வது பட்டமளிப்பு விழா தரமணியில் இன்று நடைபெற்றது. விழாவிற்கு ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமை தாங்கினார்.

சென்னை ஐகோர்ட் நீதிபதி மணிந்திர மோகன் ஸ்ரீவஸ்தவா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். விழாவில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக இணைவேந்தரும் அமைச்சருமான துரைமுருகன் பங்கேற்கவில்லை.

கடந்த 2 மாதமாக தொடர்ந்து நடைபெற்று வரும் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன் கலந்து கொள்ளாமல் புறக்கணித்த வந்த நிலையில் இன்றைய விழாவில் அமைச்சர் துரைமுருகனும் புறக்கணித்திருப்பது பரபரப்பாக பேசப்படுகிறது.

இந்த பட்டமளிப்பு விழாவில் 38 பேர் ஆராய்ச்சி படிப்புக்கான முனைவர் பட்டம் பெற்றனர். 86 பேருக்கு நேரில் பட்டங்களை ஆளுநர் வழங்கினார். 16,571 பேருக்கு அந்தந்த கல்லூரிகளில் பட்டங்கள் வழங்கப்படுகிறது.

விழாவில் பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் குழு தலைவர் நீதிபதி பாரதிதாசன், உறுப்பினர்கள் சார்ஜ் அலெக்சாண்டர், ஓம். பிரகாஷ் மற்றும் பதிவாளர் கவுரி ரமேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## விலை வீழ்ச்சி எதிரொலி: செடியிலேயே பறிக்காமல் விடப்படும் தக்காளிகள்



**பொள்ளாச்சி, மார்ச் 01:**

பொள்ளாச்சி சுற்று வட்டார கிராம பகுதிகளில் காய்கறி சாகுபடியில் விவசாயிகள் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் வடக்கிபாளையம், புரவிபாளையம், டி.நல்லிக் கவுண்டன் பாளையம், ஜமீன் காளியா புரம், பெரும்பதி, கோவிந்தனூர், மாப்பிள்ளை கவுண்டன்புதூர், சூலக்கல், நெகமம், கோமங்கலம், தேவனூர்புதூர் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் தக்காளி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஆண்டில் வடகிழக்கு பருவமழையையொட்டி பல்வேறு கிராமங்களில் தக்காளி சாகுபடி அதிகளவில் இருந்தது. அதன் விளைச்சல் கடந்த மாதம் இறுதியில் இருந்து அதிகமாக இருந்ததால் அறுவடைக்கு தயாரானது. இதன் காரணமாக கடந்த 3 வாரத்துக்கும் மேலாக சந்தைகளுக்கு தக்காளி வரத்து அதிகமாகி குறைந்த விலைக்கு விற்பனையானது.

அதிலும் கடந்த ஒரு வாரமாக மார்க்கெட்டில் தக்காளி விலை இறக்கத்துடன் இருப்பதுடன், அதற்கு உரிய விலை கிடைக்காமல் போகிறது. கடந்த சில நாட்களாக மார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ.10 முதல் அதிகபட்சமாக ரூ.12க்கு ஏலம் போனது.

இதனால் விவசாயிகள் பலர் கிராமங்களில் சாகுபடி செய்துள்ள தக்காளிகளை பறிக்காமல் அப்படியே செடியிலேயே விட்டு விட்டனர்.

முத்தூர், ஆர்.பொன்னாபுரம், தாளக்கரை, வடக்கிபாளையம், சூலக்கல் உள்ளிட்ட இடங்களில் செடிகளில் தக்காளி பழுத்த நிலையில் கொத்துக் கொத்தாக தொங்குகின்றன. விலை வீழ்ச்சியால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மேலும் தக்காளிக்கு உரிய விலை இல்லாமல் போனதால் பல கிராமங்களில் தக்காளியை செடியில் இருந்து பறிக்காமல் அப்படியே விட்டு விடுவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். இதனால் விவசாயிகளும் கவலை அடைந்துள்ளனர்.

## மல்லை சத்யா தலைமையிலான திராவிட வெற்றி கழகம் தி.மு.க.வுக்கு ஆதரவு



**சென்னை, மார்ச் 01:**

திராவிட வெற்றிக்கழக பொதுக்குழு கூட்டம் சென்னை எழும்பூரில் இன்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி திராவிட வெற்றிக் கழகத்தின் தலைவராக மலை சத்யா, பொதுச் செயலாளராக கராத்தே பழனிசாமி, பொருளாளராக வாசுகி பெரியார் தாசன், துணைப் பொதுச் செயலாளராக வக்கீல் ஆனந்தராஜ், ஆரணி அரசு பிரபாகரன், பாண்டியராஜன், கோவை ஆனந்த், மாநில செயலாளர்கள் பார்த்திபன், அரியலூர் மாணிக்கவாசு, சங்கரன்கோவில் ஆறுமுகசாமி, பாலசுப்பிரமணியம், கோடை திரவியம், மதுரை பரமேஸ்வரன், குரோம்பேட்டை முஜிபுர் ரகுமான், ஆட்சி மன்ற குழு உறுப்பினராக செல்வ பாண்டியன், வல்லம் கோபி, காஞ்சி வளையாபதி, கவுரி குமார், வக்கீல் சசிகுமார், பாஸ்கர், மணிகண்டன் ராமச்சந்திரன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

தி.மு.க. ஆட்சி தொடர்வதற்கு உறுதுணையாக நிற்க வேண்டும். சட்டமன்ற பொது தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு திராவிட வெற்றி கழகம் ஆதரவை தெரிவித்துக் கொள்வது.

மேலும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்க கேட்டுக்கொள்வது என்பது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சென்னை விமான நிலையத்திலிருந்து துபை, தோஹா, அபு தாபி, பஹ்ரைன் செல்லும் விமானங்கள் ரத்து!

சென்னை விமான நிலையத்திலிருந்து துபை, தோஹா, அபு தாபி, பஹ்ரைன் செல்லும் விமானங்கள் நேற்று (பிப். 28) ரத்து செய்யப்பட்டன. அமெரிக்கா, இஸ்ரேல்- ஈரான் இடையேயான ராணுவ தாக்குதல்கள் தொடங்கியதையடுத்து மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அசாதாரண சூழல் நிலவுகிறது.

குறிப்பாக, அமெரிக்க படைத் தளங்களைக் குறிவைத்து அரேபிய வளைகுடாவில் அபு தாபி, துபை, தோஹா, ரியாத் ஆகிய நகரங்களில் வான் வழி தாக்குதல்களை ஈரான் நடத்தியதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில், மத்திய கிழக்கு நாடுகளுக்கு விமான சேவை நிறுத்தப்பட்டுள்ளது. ஏர் இந்தியா, இண்டிகோ உள்பட முக்கிய விமான சேவைகள் அனைத்தும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இயக்கப்படவில்லை. சனிக்கிழமையும் (பிப். 28) ஞயிற்றுக்கிழமையும் (மார்ச். 1) எதிஹாட் மற்றும் அமிரேட்ஸ் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் சென்னை சர்வதேச விமான நிலையத்திலிருந்து பயணிகளுக்கு வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விமான சேவை குறித்த அண்மைத் தகவல்களை அந்தந்த விமான நிறுவனங்களின் இணைய வலைதளங்களிலும் சமூக ஊடகப் பக்கங்களிலும் பார்த்து பயணிகள் தெரிந்துகொண்டு அதற்கேற்ப தங்கள் பயணத் திட்டத்தை மாற்றிக்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## ரவுசு மணி

வரையறைக்குள் இருக்கும் எந்த ஒரு உறவும்.... வலியை நிச்சயம் தரவே தராது...



V. முத்து ராமகிருஷ்ணன்

## தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை இன்னும் 10 நாட்களில் முதலமைச்சரிடம் வழங்கப்படும்

### கனிமொழி எம்.பி.



**சென்னை, மார்ச் 01:**

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை இன்னும் 10 நாட்களில் முதலமைச்சரிடம் வழங்கப்படும்: கனிமொழி எம்.பி.

மற்றவர்களுக்கு பதில் சொல்லக்கூடிய வகையில் தேர்தல் அறிக்கை தயாரிக்க வேண்டிய அவசியம் தி.மு.க.விற்கு கிடையாது.

யார் தேர்தல் அறிக்கை தயாரித்து வெளியிட்டாலும் தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையைதான் மக்கள் நம்புவார்கள்.

சென்னை விமான நிலையத்தில் தி.மு.க. எம்.பி. கனிமொழி நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை இன்னும் 10 நாட்களில் முழுமை பெற்று முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் வழங்கப்படும்.

காங்கிரஸ் கட்சி இன்று தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த அழைத்திருக்கிறோம். நிச்சயமாக விரைவில் இறுதி செய்யப்படும். திராவிடக் கருத்துக்களை முன்னெடுத்து செல்லும் ஒரே தலைவர் மு.க. ஸ்டாலின் என்ற நம்பிக்கையாலும் தி.மு.க.வின் மீது உள்ள நம்பிக்கையாலும் முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தன்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டு உள்ளார். இதன் மூலம் யார் உண்மையான திராவிட இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார், திராவிட மாடல் ஆட்சியை தரக்கூடியவர்கள் யார் என தெளிவாக மக்களுக்கு தெரிந்து விட்டது.

மற்றவர்களுக்கு பதில் சொல்லக்கூடிய வகையில் தேர்தல் அறிக்கை தயாரிக்க வேண்டிய அவசியம் தி.மு.க.விற்கு கிடையாது. யார் தேர்தல் அறிக்கை தயாரித்து வெளியிட்டாலும் தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையைதான் மக்கள் நம்புவார்கள். மக்கள் எதை எதிர்பார்க்கிறார்களோ அதை தேர்தல் அறிக்கையாக தி.மு.க. வெளியிடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## பெண் தாசில்தாரை காதலித்து திருமணம் செய்த துணி வியாபாரி ஆணவக்கொலை



**கோனசீமா, மார்ச் 01:**

ஆந்திர மாநிலம் அம்பேத்கார் கோனசீமா மாவட்டம் வேம்பள்ளியை சேர்ந்தவர் சூரியபிர காஷ் (வயது 41). உள்ளூரில் துணி வியாபாரம் செய்து வருகிறார்.

மேடபாடு கிராமத்தைச் சேர்ந்தவர் சந்தியா. ராயவரத்தில் துணை தாசில்தாராக பணியாற்றி வருகிறார். இருவரும் ஒரே பள்ளியில் படித்தனர். வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்த அவர்கள் காதலித்து வந்தனர்.

இந்த காதலுக்கு சந்தியா குடும்பத்தினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இதற்கிடையே நேற்று முன்தினம் இருவரும் வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்தனர். இந்த திருமணத்தில் நண்பர்கள் மட்டுமே கலந்துகொண்டனர். இதனை அறிந்த சந்தியாவின் சகோதரர்கள் ஆத்திரம் அடைந்தனர்.

திருமணம் முடிந்ததும் சந்தியாவை அழைத்துக்கொண்டு சூரியபிரகாஷ் வேம்பள்ளியில் உள்ள தனது வீட்டுக்கு சென்றார். இதனை அறிந்த சந்தியாவின் சகோதரர்கள் சந்திரபால், கிரிபாபு ஆகியோர் நள்ளிரவு சூரியபிரகாஷ் வீட்டுக்கு சென்று அவரை தாக்கினார்கள்.

பின்னர் இருவரும் சேர்ந்து பாறாங்கல்லை தூக்கி சூரியபிரகாசின் தலையில் போட்டனர். இதில் தலை நசுங்கி அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர்.

காலையில் மணக்கோலத்தில் இருந்த கணவன், பிணமாக கிடந்ததை கண்டு சந்தியா அலறித் துடித்தார். துணி வியாபாரி கொலை செய்யப்பட்டதை அறிந்ததும் பொதுமக்கள் திரண்டுவந்து, சந்தியாவின் சகோதரர்களை பிடித்து தர்ம அடி கொடுத்தனர். பின்னர் அவர்களை போலீசில் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து போலீசார் வழக்குப்பதிவு செய்து சந்திரபால், கிரிபாபு ஆகியோரை கைது செய்தனர். காதல் திருமணம் செய்த துணி வியாபாரி கொடூரமாக ஆணவக்கொலை செய்யப்பட்ட சம்பவம் ஆந்திராவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சுற்றுலா: மகாபலிபுரத்தில் நீங்கள் அவசியம் பார்க்க வேண்டிய இடங்கள் என்னென்ன?

சென்னைக்கு தெற்கு 60 கிலோ மீட்டர் தொலைவில் வங்காள விரிகுடா கடற்கரையில் அமைந்துள்ளதுமகாபலிபுரம். பல்லவ மன்னர்களின் கலைத் திறனுக்கு சான்றாக விளங்கி வருகிறது. இது முற்காலத்தில் திருக்கடல் மல்லை என அழைக்கப்பட்டது. ஏழாம் நூற்றாண்டின் பல்லவ மன்னன் முதலாம் நரசிம்ம வர்மன் மாமல்லன் என அழைக்கப்பட்டவன். எனவே இந்த ஊர் மாமல்லபுரம் என அழைக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் இது மகாபலிபுரம் என மருவி அழைக்கப்பட்டது.

இங்கு கிரானைட் கற்களால் கட்டப்பட்ட கடற்கரை கோவில் ஐந்து தனித்தனி பாறைகளில் செதுக்கப் பட்டுள்ள பஞ்சரதங்கள் உள்ளன. அர்ஜுனன் தவசு கோவில் ஒரே பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. திறந்தவெளி சிற்பமாகும் வராக குகை மகிஷாசுரமர்த்தினி குகை இவை புகழ்பெற்றவை 1984 இல் உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட இடமாகும். இந்த இடங்களுக்கு அதிக அளவில் சுற்றுலாப்பயணிகள் வருகை தருகிறார்கள். புராண கதைகள் காவியப் போர்கள் பேய்கள் கடவுள்கள் விலங்குகள் அனைத்து உருவங்களும் சுவர்களில் கண்ணைக் கவரும் விதத்தில் வரையப்பட்டுள்ளது. பல்லவ மன்னர்கள் ஜைன மதத்தை பின்பற்றி வந்தனர். ஆனால் மகேந்திர பல்லவன் வைணவத்தை பின்பற்றியதால் சிவன் விஷ்ணு ஆலயங்கள் கட்டப்பட்டது. இங்குள்ள காதல் சிற்பங்கள் தாஜ்மஹாலை நினைவுபடுத்துகிறது. சூரிய ஒளியில் இந்த இடங்கள் அற்புதமாக காட்சியளிக்கிறது

குகை கோவில்கள்

மாமல்லபுரத்தில் ஒன்பது குகை கோவில்கள் உள்ளன. இந்து புராணப்படியும் உண்மை






சம்பவங்கள நிறைந்துள்ளது. இந்தக் குகை கோவில்களில் ஓய்வெடுக்கும் வசதியும் உள்ளது. கிருஷ்ணன் குகை சிற்பங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளது விஷ்ணு உறங்குவதைப் போல உள்ள சிலை பார்க்க மிகவும் அழகாக உள்ளது. இவை மகிஷாசுரமர்த்தினி குகையில் உள்ளது. இங்கு துர்கா தேவி சிலை எருமை மாட்டின் தலையுடன் ஆக்ரோஷமாக காட்சியளிக்கிறார்

இவை அனைத்தும் திராவிட கலையை பெருமைப் படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. கடற்கரை கோவில் பிரம்மிக்கத்தக்க வகையில் கட்டப்பட்டுள்ளது. மகாபலிபுரம் யாத்திரிகர்களை வரவேற்கும் விதத்தில் இருந்தாலும் ஓய்வெடுக்க சிறந்த இடமாகும் கண்கவர் கடற்கரைகள் மனதை கொள்ளை கொள்கின்றன.

அர்ஜுனன் தவம்

இதைக் கண்டால் பிரமிப்பாக இருக்கும். திறந்த வெளியில் 29 மீட்டர் நீளம் 13 மீட்டர் உயரத்தில் உள்ள பாறையில் அமைந்துள்ளது. புனித கங்கை வானத்திலிருந்து பூமிக்கு இறங்கிய கதையை விவரிக்கிறது சிறந்த பாறை சிற்பமாகும்.

கிருஷ்ணரின் வெண்ணெய் பந்து

பிரம்மாண்டமான கிரனைட் கற்களால் உருவாக்கப்பட்ட பாறை ஆகும். ஆறு மீட்டர் உயரம் ஐந்து மீட்டர் அகலம் 250 டன் எடை கொண்டது. இந்த வட்ட பாறை உலக அதிசயமாக காணப்படுகிறது. 1908 ஆம் ஆண்டில் சென்னை கவர்னராக இருந்த ஆர்தர் என்பவர் இந்த வெண்ணைப்பந்து கல்லை ஏழு யானைகளைக் கொண்டு இழுக்க முயற்சி செய்தார். அவரால் முடியவில்லை.

அருங்காட்சியகம்

இது புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. உள்ளே சென்று சுற்றி பார்க்க நுழைவு கட்டணம் பெறவேண்டும். பழைய பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கலங்கரை விளக்கத்தில் உள்ள பழங்கால பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன. கடல்சார் கல்விக்கு மிகவும் பயனுள்ளதாக இந்த அருங்காட்சியகம் உள்ளது.

கலங்கரை விளக்கம்

ஐந்து ரதம் செல்லும் வழியில் உள்ளது. மலை மீது அழகாக அமைந்துள்ளது.

இதன் அருகில்மகிஷாசுரமர்த்தினி மண்டபம் உள்ளது. எதிர்ப்புறம் ரங்கநாதர் சயன காட்சி தத்ரூபமாக செதுக்கப்பட்டுள்ளது. மகிஷாசுரமர்த்தினி மகிஷாசுரர்கள் போரிடும் காட்சியும் அருமையாக செதுக்கப்பட்டுள்ளது.

ஐந்து ரதம்

மாமல்லபுரம் எல்லை முடிவில் இந்த ஐந்து ரதம் உள்ளது பேருந்து நிலையத்திலிருந்து தொலைவில் இருப்பதால் ஆட்டோ மூலம் செல்லலாம். இதற்கு பார்வையிட தனியாக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சிங்கம் யானை சிலைகள் நம்மை வரவேற்கின்றன. மகாபாரதத்தில் உள்ள பஞ்சபாண்டவர்கள் தர்மன் அர்ஜுனன் பீமன் சகாதேவன் நகுலன் ஆகிய பெயர்களில் ஐந்து ரதங்கள் சிறப்பான வேலைப்பாடுடன் அமைந்துள்ளது.

கடற்கரை கோவில்

பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. பல இயற்கை பேரிடர்களை தாங்கி தலை நிமிர்ந்து நிற்கிறது இதைச் சுற்றி பார்க்க நுழைவு கட்டணம் உண்டு பச்சை புல்வெளிகள் அழகாக உள்ளன.

இங்கு மிகவும் தொன்மையான சிவன் கோவில் உள்ளது. கடற்கரைக்குச் சென்று கடலின் அழகை ரசிக்கலாம். .

.எண்ணற்ற சுற்றுலா பயணிகளும் வெளிநாட்டு பயணிகளும் அதிக அளவில் வருகை தருகிறார்கள். கட்டிடக்கலைக்கும் சிற்பக் கலைக்கும் பெயர் பெற்று விளங்குகிறது. அனைவரும் அவசியம் பார்க்க வேண்டிய இடமாகும்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## ரயில்வேயில் 22,195 இடங்கள் : 10ம் வகுப்பு/ ஐடிஐ படித்தவர்களுக்கு வாய்ப்பு

பணி: குரூப் சி லெவல்- 22,195 இடங்கள்.

காலியிடங்கள் ஏற்பட்டுள்ள துறைகள்:

i) எலக்ட்ரிக்கல்:

அசிஸ்டென்ட் டிஆர்டி, அசிஸ்டென்ட் ஆபரேஷன்ஸ், அசிஸ்டென்ட் டிஎல் மற்றும் ஏசி, அசிஸ்டென்ட் லோகோ ஷெட், அசிஸ்டென்ட் ஆபரேஷன்ஸ்,

ii) எஸ் அண்ட் டி: அசிஸ்டென்ட்

iii) டிராபிக்: பாயின்ட்ஸ்மேன்- பி.

iv) இன்ஜினியரிங்:

அசிஸ்டென்ட் டிராக் மிஷின், டிராக் மெயின்டெனர்-iv, அசிஸ்டென்ட் பிரிட்ஜ், அசிஸ்டென்ட் பி. வே.

v) மெக்கானிக்கல்: அசிஸ்டென்ட் கேரேஜ் மற்றும் வேகன் சம்பளம்: ரூ.18,000.

வயது: 1.1.2026 தேதியின்படி பொதுப்பிரிவினர்கள் 18 முதல் 33க்குள் இருக்க வேண்டும். எஸ்சி/எஸ்டி/ ஒபிசியினருக்கு ரயில்வே விதிமுறைப்படி தளர்வு வழங்கப்படும்.

தகுதி: 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது ஏதாவதொரு டிரேடில் ஐடிஐ படிப்பை முடித்து அப்ரன்டிஸ் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் எழுத்துத் தேர்வு, உடற்தகுதித் திறன் தேர்வு, மருத்துவ தகுதி தேர்வு, சான்றிதழ் சரிபார்த்தல் ஆகியவற்றின் அடிப்படையில் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர். எழுத்துத் தேர்வில் கணிதம், ரீசனிங், பொது அறிவியல், பொது அறிவு ஆகிய பிரிவுகளிலிருந்து கேள்விகள் கேட்கப்படும். 10ம் வகுப்பு தரத்தில் கேள்விகள் கேட்கப்படும். எழுத்துத் தேர்வுக்கான விரிவான பாடத்திட்டம், மதிப்பெண்கள் விவரம் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. எழுத்துத் தேர்வில் வெற்றி பெறுகிறவர்களுக்கு உடற்தகுதித் திறன் தேர்வு நடத்தப்படும். எழுத்துத் தேர்வில் கலந்து கொள்ளும் எஸ்சி/எஸ்டி பிரிவினருக்கு 2ம் வகுப்பு ரயில் கட்டணம் வழங்கப்படும்.

கட்டணம்: எஸ்சி/எஸ்டி/பெண்கள்/முன்னாள் ராணுவத்தினர்/பெண்களுக்கு/திருநங்கைகளுக்கு ரூ.20/-. இதர பிரிவினருக்கு ரூ.500/-. இதை ஆன்லைனில் செலுத்த வேண்டும்.

www.rrbchennai.gov.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 02.03.2026.

# மார்ச் மாதம் (2026) வார ராசிபலன்

## 01.3.2026 முதல் 07.3.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். சாமர்த்தியமான பேச்சின் மூலம் எல்லா அனுகூலமும் கிடைக்க பெறும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் திட்டமிட்டு செயல்படுத்துவது வளர்ச்சிக்கு உதவும். வாடிக்கையாளர்களிடம் சாதூரியமாக பேச வேண்டி இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு துணிச்சல் அதிகரிக்கும். எதை பற்றியும் கவலைப்படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது அவசரப்படாமல் இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் தன்மையாக பேசுவது நல்லது. பெண்களுக்கு வேலை செய்யும் இடங்களில் தேவையற்ற பிரச்சனைகள் ஏற்படலாம். கலைத்துறையினருக்கு வீண் அலைச்சல், காரிய தாமதம் போன்றவை ஏற்படலாம். புதிய முயற்சிகளை தள்ளி போடுவதும் நல்லது. காரிய அனுகூலம் ஏற்படும்..

### மிதுனம்

இந்த வாரம் எல்லாவிதமான முன்னேற்றத்தையும் தரும். வாகனங்களால் லாபம் உண்டாகும். பண வரத்து அதிகரிக்கும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். புதிய நண்பர்களின் நட்பு கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். புதிய தொழில் அல்லது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு செயல் திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். திருமணம் தொடர்பான விஷயங்களில் முன்னேற்றம் காணப்படும். குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் மகிழ்ச்சி நிலவும். பெண்களுக்கு மனக் குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும். கலைத்துறையினருக்கு பண வரத்து எதிர்பார்த்தபடி திருப்திகரமாக இருக்கும்.

காரிய வெற்றிக்கு தேவையான உதவி கள் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு இடமாற்றம், பதவி இறக்கம் ஆகியவற்றை சந்திக்க வேண்டி இருக்கும். .

### ரிஷபம்

இந்த வாரம் சுபச் செலவுகள் உண்டாகலாம். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் தொடர்பான கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும் போது எச்சரிக்கை தேவை.

குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது. வாழ்க்கை துணையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகள் மூலம் மன கவலை ஏற்படலாம். பெண்களுக்கு மற்றவர்களுக்கு உதவி செய்ய போய் தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரலாம். கலைத்துறையினருக்கு லாபகரமாக நடக்கும். வாக்கு வன்மையால் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்க பெறுவீர்கள்.

தடைபட்ட காரியங்கள் நல்லபடியாக நடக்கும். பண வரத்து திருப்திகரமாக இருக்கும்.. புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். அரசியல்வதிகள் எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

### கடகம்

இந்த வாரம் மனதில் இருந்த குழப்பம் நீங்கி திருப்தி நிலவும். பண வரவு எதிர்பார்த்தபடி வந்து சேரும். பயணங்கள் செல்ல நேரிடலாம். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாட்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். சரக்குகளை பாதுகாப்பாக வைப்பது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். எந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயல்படுவார்கள். கணவன், மனைவிக்கு இடையே இருந்த மன வருத்தம் நீங்கும். பெண்களுக்கு சாமர்த்தியமான பேச்சின் மூலம் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள்.

கலைத் துறையினருக்கு கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். புதிய ஆர்டர்களுக்கான முயற்சிகள் சாதகமான பலன் தரும். வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். .

### சிம்மம்

இந்த வாரம் தடைபட்டு வந்த காரியங்கள் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். பணம் சம்பாதிக்கும் திறமையை அதிகமாகும். உடல் நலம் சீரடையும். மற்றவர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும். ஆர்டர்கள் பெறுவதில் இருந்த சிக்கல்கள் தீரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். மற்றவர்கள் மூலம் உதவி கிடைக்கும். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகளால் கவுரவம் அந்தஸ்து உயரும். துக்கமும், துன்பமும் நீங்கும். பெண்களுக்கு காரியங்களில் இருந்த தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். கலைத் துறையினருக்கு நிம்மதியும் சந்தோஷமும் அதிகரிக்கும். தேவையான பொருள்களை வாங்குவீர்கள். அரசியல்வாதிகளுக்கு மனஸ்தாபம் நீங்கும். நண்பர்களிடையே சுமூக உறவு இருக்க விட்டு கொடுத்து செல்வது நல்லது..

### கன்னி

இந்த வாரம் நிம்மதியும், சுகமும் அதிகமாகும்.பண வரத்துதிருப்திகரமாக இருக்கும். பலவகையிலும் பிறர் உதவி கிடைக்க பெறுவீர்கள். புத்தி சாதூரியம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். புதிய ஆர்டர்கள் பெறவும், வாடிக்கையாளர்களை திருப்தி செய்யவும் அலைய வேண்டி இருக்கும்.உத்தியோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற்கும் போது மிகவும் கவனமாக இருப்பது நல்லது.

வீண் பழி ஏற்படாமல் தடுக்கப்படும். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பெண்களுக்கு மற்றவர்கள் உதவி கிடைப்பதன் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். கலைத் துறையினருக்கு தேவையான உதவிகள் கிடைக்கும்.

சொத்து மனை சம்பந்தமான காரியங்களில் தடை, தாமதம் ஏற்படலாம். அரசியல்வாதிகளுக்கு வழக்கு விவகாரங்கள் வரலாம். வெளிநாட்டு பயண வாய்ப்புகள் வரலாம். சிலர் வெளியூர் பயணம் செல்வார்கள். . மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண அனுபவ பூர்வமான அறிவு கைகொடுக்கும்.

### துலாம்

இந்த வாரம் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் குறித்த காலத்தில் வெற்றி பெறும். உடல் நலம் சீராகும். மனம் ஒருநிலைப்படும். பண வரத்தை தரும். கவுரவம், அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் மற்றவர்கள் மூலம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மந்தமான போக்கு காணப்பட்டாலும் பண வரத்து குறைவு இருக்காது. தொழில் கூட்டாளிகளுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது. கூடுதல் உழைப்பு இருக்கும். குடும்பத்தில் இருந்த வீண் குழப்பம் நீங்கும். வாழ்க்கை துணையின் பேச்சை கேட்டு நடப்பது நன்மை தரும். பெண்களுக்கு கவுரவம் அந்தஸ்து உயரும். கலைத்துறையினருக்கு மனதில் தெம்பு உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் சாதகமான பலன் தரும்.

பண வரத்து அதிகரிக்கும். அரசியல்வாதிகள் வாக்கு வாதத்தை தவிர்ப்பது நல்லது. மேலிடத்திற்கு நீங்கள் சொல்வதை கேட்டு நடக்கவில்லையே என்ற எண்ணம் ஏற்பட்டு நீங்கும்.

### விருச்சிகம்

இந்த வாரம் மனோதைரியம் அதிகரிக்கும். எல்லா காரியங்களும் சாதகமாக நடந்து முடியும். எல்லா இடங்களிலும் மரியாதையும், கவுரவமும் அதிகரிக்கும். எல்லா தரப்பினரிடம் இருந்தும் ஆதரவு கிடைக்கும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் தலை நிமிர்ந்து நடப்பார்கள். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். போட்டிகள் குறையும். தொழில் தொடர்பான தகராறுகள் நீங்கும். கடன் பிரச்சனை தீரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகத் திறமை வெளிப்படும். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுப காரிய நிகழ்ச்சிகள் நடக்கும். திருமணம் தொடர்பான பேச்சு வார்த்தை சாதகமான பலன் தரும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் இருந்த தகராறுகள் நீங்கும். பெண்களுக்கு நீங்கள் செய்யும் காரியங்களுக்கு எல்லா தரப்பினரிடம் இருந்தும் ஆதரவு கிடைக்கும்.

கலைத் துறையினருக்கு நீங்கள் மற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் தயங்க மாட்டீர்கள். பேச்சுத் திறமை அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு வீண் அலைச்சல் வேலைப் பளு இருக்கும். பேச்சு திறமையால் காரியங்களை சாதகமாக செய்து முடிப்பீர்கள். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான பிரச்சனைகள் நீங்கும். திறமை வெளிப்படும்.

### தனுசு

இந்த வாரம் எதிர்ப்புகள் நீங்கும். சூரியன் சஞ்சாரத்தால் பகைகள் விலகும். அடுத்தவர்களால் இருந்த பிரச்சனைகள் சரியாகும். பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். எல்லா வசதிகளும் கிடைக்கும். தர்ம சிந்தனை அதிகரிக்கும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். தொழில் வியாபாரம் சிறப்படையும். புதிய ஆர்டர்கள் கிடைக்க பெறுவீர்கள். வியாபார வளர்ச்சிக்கு இருந்த தடைகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும்.

அரசாங்கம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டாகும்.நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். சக பணியாளர்கள் மூலம் உதவியும் கிடைக்க பெறுவீர்கள். குடும்பத்தில் உற்சாகம் இருக்கும். மற்றவர்கள் உங்களை அனுசரித்து செல்வார்கள். பேச்சின் இனிமை சாதூரியத்தால் எளிதில் காரியங்கள் கைகூடும். பெண்களுக்கு எதிர்காலத்துக்கு உதவக் கூடிய விஷயங்களில் ஆர்வம் உண்டாகும். கலைத்துறையினருக்கு வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது.

### மகரம்

இந்த வாரம் மன குழப்பம் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கவுரவம் அந்தஸ்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி அவற்றை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். வியாபாரம் தொடர்பான பயணங்கள் லாபம் தருவதாக இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகள் கொடுத்த வேலைகளை கவனமாக செய்து முடித்து பாராட்டு பெறுவார்கள். செயல் திறமை அதிகரிக்கும். குடும்பத்தில் சுகமும், நிம்மதியும் இருக்கும். குடும்பத்திற்கு அதிகப்படியான வருமானமும் கிடைக்கும். உறவினர் வருகை இருக்கும். யாரிடம் பேசும் போதும் நிதானமாக பேசுவது நன்மை தரும். பெண்களுக்கு திட்டமிட்டு செயல்படுவது வெற்றிக்கு உதவும்.

கலைத் துறையினருக்கு உயர்நிலையில் உள்ளவர்களுடன் மன வருத்தம் ஏற்படும் படியான சூழ்நிலை வரும். வாகனங்கள் மூலம் செலவு உண்டாகலாம். அரசியல்வாதிகளின் திறமையான செயல்பாட்டால் பாராட்டு கிடைக்கும். விரும்பத்தகாத வாக்கு வாதங்கள் ஏற்படலாம்.

### கும்பம்

இந்த வாரம் பண வரத்து அதிகரிக்கும். சுபச் செலவும் கூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். துணிச்சல் உண்டாகும். எதை பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கி விடுவீர்கள். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ்நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்க பெறுவீர்கள். சரக்குகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள். சக ஊழியர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும். சகோதரர்கள் மூலம் உதவி கிடைக்கும். உறவினர்கள் வருகை இருக்கும். பெண்களுக்கு துணிச்சலுடன் ஈடுபட்டு காரிய வெற்றி காண்பீர்கள். கலைத் துறையினருக்கு நெருக்கமானவர்களுடன் இனிமையாகப் பேசி பொழுதை கழிப்பீர்கள். தொழில் சிறப்பான முன்னேற்றம் பெறும். மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். அரசியல்வாதிகள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு பெறுவார்கள்.

### மீனம்

இந்த வாரம் வீண் மன குழப்பம் ஏற்பட்டு நீங்கும். திடீர் கோபம் ஏற்படும். தேவையற்ற வீண் செலவுகளும் உண்டாகும். ஆன்மிக எண்ணம் ஏற்படும். விருப்பமான நபரை சந்திப்பதன் மூலம் மனதுக்கு மகிழ்ச்சி ஏற்படலாம். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் வியாபாரத்தில் கூடுதல் லாபம் பெற முடியும். உத்தியோகத்தில் இருப்பவ ர்களுக்கு கூடுதல் பணிச் சுமையும், வீண் அலைச்சலும் உண்டாகும். மேல் அதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரிடலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் சில்லறை சண்டைகள் உண்டாகலாம். மன வருத்தம் ஏற்படும் நிலை உருவாகலாம். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கும் சந்திப்பு உண்டாகும். கலைத் துறையினருக்கு பாராட்டுகள் வரும்.

வெளிநாடு பயணங்களும் இனிதே அமையும். நண்பர்களிடையே உறவு நிலை சிறக்க விட்டுக் கொடுத்தல் அவசியமாகிறது. அரசியல்வாதிகளுக்கு நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்சனைகள் விலகும்.

# இந்திய நிறுவனங்கள் முதலீட்டை அதிகரிக்க வேண்டும்: பிரதமர் மோடி அழைப்பு

**புதுடெல்லி, மார்ச் 1:**

மத்திய அரசின் 2026-27 பட்ஜெட் அறிவிப்புகளை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி, முதலீடுகள் மற்றும் புத்தாக்கத்தை அதிகரிக்க வேண்டும் என்று இந்திய நிறுவனங்களுக்கு பிரதமா நரேந்திர மோடி வெள்ளிக்கிழமை அழைப்பு விடுத்தாா.



உலகளாவிய போட்டிக்கு ஏற்ப வளர்ச்சியை அடுத்தகட்டத்தை நோக்கி தனியார் துறையினா இயக்க வேண்டிய நேரமிது என்றும் அவா் குறிப்பிட்டாா.

'வளர்ந்த பாரதத்துக்கான தொழில்நுட்பம், சீர்திருத்தங்கள் மற்றும் நிதி' என்ற தலைப்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழிக் கருத்தரங்கில் பிரதமா் மோடி பேசியதாவது:

11 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.2 லட்சம் கோடியாக இருந்த பொது மூலதனச் செலவினம், இப்போது ரூ.12 லட்சம் கோடிக்கும் மேல் அதிகரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் அடுத்தடுத்த பட்ஜெட்களில் பொது மூலதனச் செலவினங்கள் அதிகரிப்பு மற்றும் உறுதியான கொள்கைசாா செயல்பாடுகளால் பொருளாதார வளர்ச்சிக்கு வலுவான அடித்தளம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

2026-27 பட்ஜெட்டில் வெளியிடப்பட்ட பெரும் அறிவிப்புகள், தனியாா் துறையினா புதிய வீரியத்துடன் முதலீட்டை அதிகரிப்பதற்கான சமிக்ஞையாகும். எனவே, புதிய முதலீடுகள் மற்றும் புத்தாக்கங்களுடன் இந்திய நிறுவனங்கள் முன்வர வேண்டும். நிதிசாா் அமைப்புகளும், பகுப்பாய்வாளாகளும் நடைமுறை சாா்ந்த தீா்வுகள் மற்றும் சந்தை நம்பிக்கையை மேம்படுத்துவதில் உதவ வேண்டும். நாட்டின் வளா்ச்சி வியூகம்: உள்கட்டமைப்பு மற்றும் புத்தாக்கத்தில் விரிவான நிதிசாா் பங்களிப்பு தேவை. திட்ட ஒப்புதல் வழிமுறைகள் வலுப்படுத்தப்பட்டு, மதிப்பீட்டின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும்.

நாட்டின் வளா்ச்சி வியூகமானது, கடந்த 10 ஆண்டுகளில் சாதனை அளவிலான மூலதனச் செலவினங்களின் மீது நங்கூரமிடப்பட்டுள்ளது. தனியாா் முதலீட்டை ஈா்க்கும் நோக்கில், நெடுஞ்சாலைகள், ரயில்வே, துறைமுகங்கள், விமான நிலையங்கள், எண்ம உள்கட்டமைப்பு, எரிசக்தி கட்டமைப்பு சாா்ந்த செலவினங்கள் பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளன. எனினும், தனியாா் துறையினா் இன்னும் துணிச்சலான முதலீடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சீா்திருத்த எக்ஸ்பிரஸ்: கடந்த 10 ஆண்டுகளில் நம்பிக்கையுடன் கூடிய சீா்திருத்தங்களால் நாட்டின் எழுச்சி உந்தப்பட்டுள்ளது. தொழில் புரிவதை எளிதாக்க நிலையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழில்நுட்பத்தால் வழிநடத்தப்படும் நிா்வாகத்தின் மூலம் அமைப்புகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

# க்ரைம் கார்னர்

## தாம்பரம் காவல் ஆணையரகத்தில் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு டன் கஞ்சா அழிப்பு

**செங்கல்பட்டு, மார்ச் 1:**

தாம்பரம் காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட தாம்பரம், மறைமலைநகர், கூடுவாஞ்சேரி, கிளாம்பாக்கம், குன்றத்தூர், சிங்கபெருமாள்கோவில் உள்ளிட்ட பல்வேறு காவல் நிலையங்களில் சுமார் 198 வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஒரு டன் கஞ்சா மற்றும் போதைப்பொருட்களை அழிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி சிங்க பெருமாள்கோவில் அடுத்துள்ள தென்மேல்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்தில், தாம்பரம் கூடுதல் ஆணையர் ஜெயலட்சுமி தலைமையில் துணை ஆணையர் பவன்குமார் ரெட்டி மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு குழுவினர் முன்னிலையில் இந்த கஞ்சா மூட்டைகள் நேற்று நவீன உலைகளில் எரித்து அழிக்கப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது முக்கிய காவல் அதிகாரிகள் மற்றும் போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசார் உடனிருந்தனர்.

## பல கோடி ரூபாய் சொத்து ஆவணத்துக்காக கொடைக்கானலில் தொழிலதிபர் கொலை - 9 பேர் கைது

**தெலங்கானா, மார்ச் 1:**

தெலங்கானா மாநிலம் ஹைதராபாத்தைச் சேர்ந்தவர் சூர்யநாராயணன் (73). நடிகை விஷ்ணுபிரியாவின் தந்தையும், தொழிலதிபருமான இவருக்கு சொந்தமான தங்கும் விடுதி, கொடைக்கானலில் உள்ளது.

பிப்.21-ம் தேதி விடுதியில் தங்கியிருந்த இளைஞர்கள் சிலர், பணியாளர்களை ஒரு அறையிலும், சூர்யநாராயணனை ஒரு அறையிலும் கயிற்றால் கட்டிப் போட்டனர்.

மேலும், சூர்யநாராயணனின் வாய், மூக்கை டேப்பால் சுற்றி மூச்சுவிட முடியாதபடி செய்து கொலை செய்தனர். பின்னர், அந்த விடுதியில் இருந்த முக்கிய ஆவணங்கள், நகை, பணம் மற்றும் சிசிடிவி ஹார்ட் டிஸ்க் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு தப்பிசென்றனர். இந்நிலையில் கயிற்றால் கட்டப்பட்டிருந்த ஒரு பணியாளர் அதிலிருந்து விடுவித்து கொண்டு போலீஸாருக்கு தகவல் தெரிவித்தார். அங்கு வந்த கொடைக்கானல் போலீஸார் சூர்யநாராயணனின் உடலை மீட்டு, அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அவரது மகளும், நடிகை யுமான விஷ்ணுபிரியா அளித்த புகாரின் பேரில், போலீஸார் வழக்குப்பதிவு செய்து குற்றவாளிகளை சிறப்பு தனிப்படை அமைத்து தேடினர். இதில் சோளிங்கர் பகுதியை சேர்ந்த ஷியாம் (31), அரக்கோணம் பகுதியைச் சேர்ந்த கோகுல்நாத் (26), ரஞ்சித்(32), திருவள்ளுவரை சேர்ந்த கிருஷ்ண பிரசாத் (25), அட்சய நடராஜ் (26), கார்த்தி (26), சென்னை சாலிகிராமத்தை சேர்ந்த கிரண் (36), அவரது தாயார் கிரிஜா (53), விடுதி பணியாளர் ஆறுமுகம் (54) ஆகியோரை கைது செய்தனர்.

## பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் பணி நீக்க நடவடிக்கைக்கு உள்ளான எஸ்எஸ்ஐ தருமபுரியில் சடலமாக மீட்பு

**தருமபுரி, மார்ச் 1:**

தருமபுரியை அடுத்த வெண்ணாம்பட்டி மாந்தோப்பு பகுதியில் வசித்து வந்தவர் சகாதேவன் (58). இவர் தருமபுரி மாவட்டம் ஏரியூர் அருகே மணியக்காரன் கொட்டாய் பகுதியைச் சேர்ந்தவர். தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்தார். 2 ஆண்டுகளுக்கு முன்பு ஏரியூர் ஒன்றியத்தில் உள்ள ஒரு சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை செய்த விவகாரம் தொடர்பாக கைது செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து, துறை ரீதியான நடவடிக்கை மூலம் அவர் காவல்துறை பணியில் இருந்து நீக்கப்பட்டார். இந்நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்துக்கு செல்வதாக குடும்பத்தாரிடம் கூறிவிட்டு சென்ற சகாதேவன் நேற்று காலை தருமபுரி ரயில் நிலையம் அருகே உள்ள தேக்குமரத் தோப்பில் ஒரு மரத்தில் புடவையில் தூக்கிட்ட நிலையில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார். தகவல் அறிந்த தருமபுரி நகர காவல் நிலைய போலீஸார் சகாதேவனின் உடலை மீட்டு தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைத்தனர். தன் உயிரிழப்புக்கு யாரும் காரணமில்லை என்றும், குணமாகாத வயிற்று வலி காரணமாக தற்கொலை செய்துகொள்வதாகவும் குறிப்பிட்டு சகாதேவன் கடிதம் எழுதி வைத்துள்ளதாக போலீஸார் தரப்பில் கூறப்படுகிறது.

# விளையாட்டு செய்திகள்

## ரஞ்சி கோப்பையை வென்று வரலாறு படைத்தது ஜம்மு காஷ்மீர் கிரிக்கெட் அணி!

**ஹூப்ளி, மார்ச் 1:**

ரஞ்சி கோப்பை கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக பட்டம் வென்று சாதனை படைத்துள்ளது ஜம்மு காஷ்மீர் கிரிக்கெட் அணி. இதற்கு முன்பு மூன்று முறை காலிறுதி வரை அந்த அணி முன்னேறி இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த முறை கோப்பையை வென்று அசத்தியுள்ளது.

அதுவும் நடப்பு ரஞ்சி கோப்பை தொடரில் எட்டு முறை பட்டம் வென்ற கர்நாடகா அணியை இறுதிப் போட்டியில் ஜம்மு காஷ்மீர் அணி எதிர்கொண்டது குறிப்பிடத்தக்கது. ஹூப்ளியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் 584 ரன்கள் சேர்த்தது ஜம்மு காஷ்மீர் அணி. தொடர்ந்து விளையாடிய கர்நாடகா 293 ரன்கள் எடுத்தது. தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட் இழப்புக்கு 342 ரன்கள் சேர்த்தது ஜம்மு காஷ்மீர்.

முதல் இன்னிங்ஸில் பெற்ற 291 ரன்கள் முன்னிலை காரணமாக ஜம்மு காஷ்மீர் அணி சாம்பியன் பட்டம் வென்றது. இந்த வெற்றி இந்தியா முழுவதும் தொழில்முறை கிரிக்கெட் வளர்ச்சியை சுட்டும் வகையில் அமைந்துள்ளது. இதுவரை 19 அணிகள் இந்த கோப்பையை வென்றுள்ளன. விதர்பா, மத்திய பிரதேச அணியின் வரிசையில் இப்போது ஜம்மு காஷ்மீரும் இணைந்துள்ளது.

இறுதி ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் ஜம்மு காஷ்மீரின் ஷுபம் பண்டிர் 121 ரன்கள் சேர்த்திருந்தார். அவர் ஆட்ட நாயகன் விருதை வென்றவர். இந்த சீசனில் அதிக விக்கெட்டுகளை கைப்பற்றிய அகிப் நபி, தொடர் நாயகன் விருதை வென்றார். அவர் மொத்தம் 60 விக்கெட்டுகளை இந்த சீசனில் கைப்பற்றி இருந்தார்.

## ஜம்மு-காஷ்மீர் அணிக்கு சச்சின் தெண்டுல்கர் வாழ்த்து

**மும்பை, மார்ச் 1:**

ரஞ்சி டிராபி 2025-2026 சீசனில் ஜம்மு-காஷ்மீர் அணி தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. கர்நாடகாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் முதல் இன்னிங்சில் முன்னிலை பெற்றதன் மூலம் சாம்பியன் பட்டம் வென்று வரலாற்று சாதனைப் படைத்துள்ளது. வரலாற்று சாதனைப் படைத்துள்ள ஜம்மு-காஷ்மீர் அணிக்கு சச்சின் தெண்டுல்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் கூறியிருப்பதாவது;

காஷ்மீர் பேட்கள் (WILLOWS) ஏராளமான சாம்பியன்களின் கிட்ஸ்-களின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. ஏராளமான சாம்பியன்களை உருவாக்க காரணமாக இருந்த காஷ்மீர், தற்போது அவர்களாகவே சாம்பியனாகியிருப்பது அழகாக உள்ளது. இந்த சீசன் நிலைத்தன்மை, மீள்தன்மை மற்றும் சீசன் முழுவதும் சிறந்து விளங்கும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் அந்த அணிக்கு கட்டமைக்கப்பட்டது. பந்து வீச்சில் நபியின் தாக்கம் தனித்தன்யைமாக இருந்தது. அணி, பயிற்சியாளர்கள் மற்றும் சப்போர்ட் ஸ்டாஃப்களுக்கு ஒரு வரலாற்று தருணம். இது போன்ற பயணங்கள் உள்நாட்டு கிரிக்கெட்டின் அழகை வரையறுக்கின்றன."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தெலங்கானாவில் 2 ஆண்டில் 591 மாவோயிஸ்ட்கள் சரண்: அமைதியாக சாதித்த பெண் ஐபிஎஸ் அதிகாரி

**ஹைதராபாத், மார்ச் 1:**

தெலங்கானா மற்றும் ஆந்திராவில் கடந்த 2 ஆண்டுகளில் 591 மாவோயிஸ்ட்கள் சரண் அடைந்ததில் பெண் ஐபிஎஸ் அதிகாரி சுமதி முக்கிய பங்காற்றியுள்ளார்.



மாவோயிஸ்ட்களை ஒழிக்க மத்திய அரசு கெடு விதித்து தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. சரணடையும் தீவிரவாதிகளுக்கு மறுவாழ்வு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி தெலங்கானாவில் சிறப்பு உளவுப் பிரிவு ஐ.ஜி சுமதி, மாவோயிஸ்ட் கமாண்டர்கள் மற்றும் உறுப்பினர்களிடம் தற்போதுள்ள நிலைமையை பக்குவமாக எடுத்துக் கூறி அவர்கள் சரணடைந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பும்படி அறிவுரை கூறினார். இவரது தொலைநோக்கு மற்றும் பேச்சுவார்த்தை மாவோயிஸ்ட்களை சரணடைய சம்மதிக்க வைத்தது.

சுமதியின் தொடர் முயற்சியின் காரணமாக, கடந்த 2 ஆண்டுகளில் மாவோயிஸ்ட் கமாண்டர்கள் உட்பட 591 மாவோயிஸ்ட்கள் சரணடைந்துள்ளனர்.

மாவோயிஸ்ட் அமைப்பின் கமாண்டராக இருந்த திப்பிரி திருப்பதி என்ற தேவுஜிக்கு போலீஸாரிடம் சரணடையும் திட்டம் எதுவும் இல்லை. அவரிடம் பேச்சுவார்த்தை நடத்தி சரணடைய சம்மதிக்க வைத்தார் ஐ.ஜி.சுமதி. இதையடுத்து தேவுஜி மற்றும் அவரது கூட்டாளிகள் மால்லா ராஜி ரெட்டி மற்றும் இரண்டு மூத்த உறுப்பினர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைந்தனர்.

# பிரசந்த் ஹெலிகாப்டரில் பறந்த குடியரசுத் தலைவர்

**ஜெய்ப்பூர், மார்ச் 1:**

கடந்த 2023 மற்றும் 2025-ம் ஆண்டுகளில் முறையே சுகோய் 30 மற்றும் ரபேல் போர் விமானங்களில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பயணம் செய்தது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.



இந்நிலையில், ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரில் உள்ள விமானப் படைத் தளத்தை நேற்று வந்தடைந்த முர்மு உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட பிரசந்த் ஹெலிகாப்டரில் குரூப் கேப்டன் நயான் சாந்திலால் பஹுவாவுடன் பயணம் மேற்கொண்டார்.

சுமார் 25 நிமிட பயணத்தின்போது காடிசர் ஏரி மற்றும் ஜெய்சால்மர் கோட்டை மீது ஹெலிகாப்டரில் பறந்து சென்று பீரங்கி இருந்த இலக்கை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த பயணம் குறித்து பார்வையாளர் புத்தக குறிப்பில் திரவுபதி முர்மு எழுதும்போது, "பிரசந்தில் பறந்து சென்றது எனக்கு சிறந்த அனுபவத்தை அளித்தது. இந்தப் பயணம் நாட்டின் பாதுகாப்பு திறன் மீது ஒரு புதிய பெருமையை ஏற்படுத்தியுள்ளது. இதற்காக இந்திய விமானப் படை மற்றும் ஜெய்சால்மர் விமானப் படை தளத்தின் குழுவுக்கு வாழ்த்துகள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# வாட்ஸ் அப் வெப் புதிய கட்டுப்பாடு; மார்ச் 1 முதல் அமல்

**புதுடெல்லி, மார்ச் 1:**

இந்தியாவில் வாட்ஸ் அப் வெப் பயன்படுத்த புதிய கட்டுப்பாடுகள் மார்ச் 1 முதல் அமலுக்கு வர உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக் கருதி, வாட்ஸ்அப் வெப் பயன்படுத்துவோர் ஒவ்வொரு 6 மணிநேரத்திற்கும் ஒருமுறை தானாகவே லாக்-அவுட் செய்யப்படுவார்கள் எனவும், பயனர்கள் மீண்டும் க்யூஆர் கோடு மூலம் லாக்-இன் செய்ய வேண்டியிருக்கும் என தெரிவிக்கபட்டுள்ளது. இது மார்ச் 1 முதல் அமலுக்கு வர உள்ளதாக மத்திய மந்திரி ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்

தொலைத்தொடர்புத் துறையின் புதிய 'சிம் பைண்டிங்' விதிகளின்படி, பதிவு செய்யப்பட்ட சிம் கார்டு மொபைலில் இருந்தால் மட்டுமே வாட்ஸ்அப் செயல்படும் எனவும் சிம் கார்டு அகற்றப்பட்டாலோ அல்லது செயலிழந்தாலோ வாட்ஸ்அப் சேவை உடனடியாகத் துண்டிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மத்திய மந்திரி ஜோதிராதித்ய சிந்தியா, 'ஆன்லைன் மோசடிகளைத் தடுக்க 6 மணிநேர லாக்-அவுட் விதி அவசியமானது. வணிக வசதிகளை விட நாட்டின் பாதுகாப்பே முக்கியம். நாளைக்குள் அனைத்து நிறுவனங்களும் இதைச் செயல்படுத்த வேண்டும்' என்று கூறியுள்ளார்.

# எஸ்-400 ஏவுகணை செயல்படும் வீடியோ: இந்திய விமானப்படை வெளியிட்டது

**புதுடெல்லி, மார்ச் 1:**

ராஜஸ்தானில் நேற்று நடைபெற்ற 'வாயுசக்தி' போர் பயிற்சியின் முன்னோட்டமாக இந்த வீடியோ காட்சி விமானப்படை சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. எதிரி நாட்டு விமானங்களை ரேடார் மூலம் கண்டறிந்து, எஸ்-400 ஏவுகணையைச் செலுத்தி அழிக்கும் காட்சிகள் இந்த வீடியோவில் இடம்பெற்றுள்ளன. எதிரிகள் எட்டாத தூரத்தில் இருக்கலாம், ஆனால் எங்கள் பார்வையில் இருந்து தப்ப முடியாது என்ற சக்தி வாய்ந்த வாசகத்துடன் இந்த வீடியோ பகிரப்பட்டுள்ளது.



மேலும் நீண்ட தூரத்தில் இருக்கும் இலக்கையும் துல்லியமாகத் தாக்கும் எஸ்-400 ஏவுகணை என்ற தகவலுடன் வீடியோ வெளியாகியுள்ளது. இந்த வீடியோவில், வானில் இருக்கும் இலக்கை முதலில் எஸ்-400 ரேடார் அமைப்பு கண்டறிகிறது. பின்னர் எஸ்-400 ஏவுகணை செலுத்தப்பட்டதும், அது துல்லியமாக இலக்கைத் தாக்கி அழிக்கிறது. இது வரை பதிவு செய்யப்பட்ட மிக நீண்ட தூர இடைமறிப்பு அழிப்பு ஏவுகணை இது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025-ம் ஆண்டு இந்திய விமானப் படை, ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலை நடத்திய போது இந்த எஸ்-400 வகை ஏவுகணைகள்தான் பயன்படுத்தப்பட்டன என்றும் விமானப் படை கூறியுள்ளது.

எஸ்-400 ஏவுகணை அமைப்புகளை இந்திய ராணுவம் சுதர்சன சக்ரா என்று அழைத்து வருகிறது. இதை ரஷ்யாவின் அல்மாஸ்-அன்டே நிறுவனம் தயாரித்துள்ளது. 2018-ல் ஐந்து எஸ்-400 வகை தாக்குதல் ஏவுகணை அமைப்புகளை ரஷ்யாவிடமிருந்து வாங்கியது. 2021-ல் முதல் அவை இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

சுமார் 600 கிலோமீட்டர் தூரமுள்ள இலக்குகளையும் இந்த ஏவுகணைகள் துல்லியமாகத் தாக்கி அழிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# வணிகச் செய்திகள்

## ஒரே நாளில் 2-வது முறையாக அதிகரித்த தங்கம் விலை.!

**சென்னை, மார்ச் 1:**

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப நாள்தோறும் தங்கம் விலையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக, தங்கம், வெள்ளி மீது சர்வதேச முதலீட்டாளர்கள் அதிகளவில் முதலீடு செய்து வருகின்றனர். இதனால் இந்தியாவில் தங்கம் விலை உயர்ந்தவாறு இருக்கிறது.

இதனிடையே சென்னையில், தங்கம் விலை சவரனுக்கு ரூ.160 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,19,200-க்கு விற்பனை செய்யப்பட்டது. கிராமுக்கு ரூ.20 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,900-க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிலையில், தங்கம் விலை நேற்று காலை அதிரடியாக உயர்ந்தது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.2,400 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1, 21, 600-க்கு விற்பனை செய்யப்பட்டது. கிராமுக்கு ரூ.300 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.15, 200-க்கு விற்பனை செய்யப்பட்டது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ. 5 உயர்ந்து ரூ.300-க்கும், ஒரு கிலோ ரூ.3,00,000 விற்பனை செய்யப்படுகிறது. இந்த நிலையில், தங்கம் விலை நேற்று பிற்பகலில் 2-வது முறையாக அதிரடியாக அதிகரித்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.2,800 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,24,400-க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.350 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.15,550-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது.

# மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை: 10 மாதங்களில் ரூ.9.81 லட்சம் கோடியாக அதிகரிப்பு

**புதுடெல்லி, மார்ச் 1:**

மத்திய தலைமை கணக்குத் தணிக்கை அதிகாரி (சிஜிஏ) வெள்ளிக்கிழமை வெளியிட்ட புள்ளிவிவரங்களின்படி, நாட்டின் நிதி நிலை குறித்த முக்கியத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



வரவும், செலவினமும்: ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான நடப்பு நிதியாண்டின் முதல் 10 மாதங்களில் மத்திய அரசின் மொத்த வரவு ரூ.27.08 லட்சம் கோடியை எட்டியுள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட வருடாந்திர இலக்கில் 79.5 சதவீதமாகும்.

இதே காலகட்டத்தில் அரசின் மொத்த செலவினம் ரூ.36.9 லட்சம் கோடியாக உள்ளது; இது முழு ஆண்டுக்கான மதிப்பீட்டில் 74.3 சதவீதமாகும். வரி வசூல் உள்ளிட்ட வருவாய் வரவுகள் மூலம் அரசுக்கு ரூ.26.51 லட்சம் கோடி கிடைத்துள்ளது. இது ஆண்டு இலக்கில் 79.3 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. அரசின் வருவாய் பற்றாக்குறை ரூ.1.96 லட்சம் கோடியாக பதிவாகியுள்ளது. இது ஆண்டு இலக்கில் 37.3 சதவீதமாக மட்டுமே உள்ளது.

வரி வசூல் வருவாய்: மத்திய அரசின் நிகர வரி வசூல் மிகவும் வலுவாக உள்ளது. ஜனவரி இறுதி வரை ரூ.21 லட்சம் கோடி வரி வசூலாகியுள்ளது. இது ஆண்டு இலக்கில் 78.3 சதவீதமாகும். கடந்த டிசம்பர் வரை இந்த வரி வசூல் 68.3 சதவீதமாக மட்டுமே இருந்தது குறிப்பிடத்தக்கது. எனினும், முந்தைய 2024-25 நிதியாண்டின் இதே காலத்தில் வரி வசூல் இலக்கில் 88.1 சதவீதம் எட்டப்பட்டிருந்தது.

ஈவுத்தொகை வருவாய்: அரசுக்குக் கிடைக்கும் லாபப்பங்கு மற்றும் ஈவுத்தொகை (டிவிடெண்ட்) வருவாய் ஜனவரி இறுதி வரை ரூ.3.5 லட்சம் கோடியாக உள்ளது. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 93 சதவீதமாகும். முந்தைய ஆண்டு இதே காலத்தில் இது 99 சதவீதத்தை எட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

மூலதனச் செலவு அதிகரிப்பு: உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கான மூலதனச் செலவினங்களை மத்திய அரசு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

ஏப்ரல் - ஜனவரி காலக்கட்டத்தில் ரூ.8.42 லட்சம் கோடி செலவிடப்பட்டுள்ளது.

இது ஆண்டு இலக்கில் 76.9 சதவீதமாகும். இது கடந்த டிசம்பர் மாதம் வரை ரூ.7.87 லட்சம் கோடியாக (70.3%) மட்டுமே இருந்தது.

ஜனவரி மாத நிலவரம்...: முந்தைய 2024-25 நிதியாண்டின் இதே ஜனவரி மாதத்தில் நிதிப் பற்றாக்குறை ரூ.2.6 லட்சம் கோடியாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இது ரூ.1.3 லட்சம் கோடியாகக் குறைந்துள்ளது. இது அரசின் நிதி மேலாண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

## பிரதமர் மோடியை ஹிட்லருடன் ஒப்பிட்ட பேராசிரியர் பணியிடைநீக்கம்

**புதுடெல்லி, மார்ச் 1:**

முதலாமாண்டு படிக்கும் விக்யாத் பஜாஜ் கடந்த அக்டோபரில் உரி பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடியாக நடத்தப்பட்ட ராணுவத் தாக்குதல் குறித்த கட்டுரை எழுதியபோது அந்தப் பேராசிரியருடன் பிரச்னை தொடங்கியுள்ளது. அந்தக் கட்டுரை எழுதியதற்காக தனது மகனை, பேராசிரியர் வகுப்பறையில் மோசமாக நடத்தியதாக விஷவ் பஜாஜ் குற்றஞ்சாட்டியுள்ளார். அதைத் தொடர்ந்து, அரசியல் பாடம் எடுக்கும்போது பிரதமர் மோடியை ஹிட்லருடன் ஒப்பிட்டு அந்தப் பேராசிரியர் பேசியுள்ளார். மேலும், தேசப்பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகளையும் அவர் அவமதிக்கும் வகையில் வகுப்பறையில் மாணவர்களிடம் கருத்துக் கூறியுள்ளார். அதே நேரத்தில் தன் மகன் தொடர்ந்து இந்திய அரசு, பிரதமர் மற்றும் ராணுவத்தைப் புகழ்ந்து பேசவதால், அங்கு பேராசிரியர்கள் சிலர் இணைந்து அவரை வேண்டுமென்று குறிவைத்து அவமதித்து வந்துள்ளனர். இதனால், தன் மகன் மிகவும் மனஅழுத்தத்துக்கு உள்ளாகி மன ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார் என்று மனித உரிமை ஆணையத்தில் விஷ்வவ் பாலாஜி அளித்த புகாரில் கூறப்பட்டுள்ளது.

## சட்டம் இயற்ற நாடாளுமன்றத்துக்கு முழு அதிகாரம்: உச்சநீதிமன்றம்

**புதுடெல்லி, மார்ச் 1:**

தடை விதிக்கப்பட்ட இந்திய தண்டனைச் சட்டத்தின் (ஐபிசி) பிரிவு 124ஏ-க்கு (தேசத் துரோகம்) மாற்றாக பிஎன்எஸ் 152-ஐ மத்திய அரசு மறைமுகமாக அறிமுகப்படுத்தியுள்ளதாக உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதி ஜயமால்ய பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு வெள்ளிக்கிழமை விசாரித்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ஒருவர் வாதிடுகையில், 'கடந்த 2022, மே மாதம் உச்சநீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் அமர்வு ஐபிசி பிரிவு 124ஏ-க்கு தடை விதித்தது. மேலும், இந்தச் சட்டப்பிரிவை மத்திய அரசு மறுபரிசீலனை செய்யும் வரை இதில் காவல் துறையினர் எவ்வித புதிய முதல் தகவல் அறிக்கைகளையும் (எஃப்ஐஆர்) பதிவு செய்யக் கூடாது என மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு உத்தர விட்டது. இதையடுத்து, தேசத் துரோக சட்டத்தை மறுபரிசீலனை செய்வதாக உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு உறுதிமொழியளித்தது. ஆனால் இந்திய இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பிஎன்எஸ் பிரிவு 152 வழிவகை செய்கிறது. இதன்மூலம் உச்சநீதிமன்றத்தில் தாங்கள் அளித்த உறுதிமொழியை மீறி மீண்டும் தேசத் துரோக சட்டத்தை பிஎன்எஸ் வாயிலாக மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதை ஏற்றுக்கொள்ளக் கூடாது' என்றார். இதைத் தொடர்ந்து நீதிபதிகள் அமர்வு, 'ஒரு சட்டத்தை இயற்ற நாடாளுமன்றத்துக்கு முழு அதிகாரம் உள்ளது; உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு உறுதிமொழி அளிப்பது நாடாளுமன்ற சட்ட இயற்றும் நடைமுறையைக் கட்டுப்படுத்தாது' எனக் கூறி இந்த மனுக்கள் மீதான விசாரணையை ஹோலி பண்டிகைக்குப் பின் ஒத்திவைத்தது.

## ரூ.1000 கோடி மோசடி: தலைமறைவு பொருளாதார குற்றவாளி துபையில் கைது

**புதுடெல்லி, மார்ச் 1:**

பொதுமக்களிடம் ரூ.1,000 கோடி மோசடி செய்த உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த தலைமறைவு பொருளாதார குற்றவாளி ரஷீத் நசீம், துபையில் கைது செய்யப்பட்டார்.



உத்தர பிரதேசத்தில் 'ஷைன் சிட்டி' குழுமம் என்ற பெயரில் மனை வணிகம் உள்ளிட்ட தொழில்களை நடத்தி வந்த ரஷீத் நசீம், நிலத்தில் முதலீடு, அதிக வட்டி என்ற பெயரில் பொதுமக்களிடம் இருந்து ரூ.800 கோடி முதல் ரூ.1,000 கோடி வரை வசூலித்துவிட்டு, அதைத் திருப்பிச் செலுத்தாமல் வெளிநாட்டுக்குத் தப்பி ஓடினார்.

முதலில் நேபாளத்துக்குச் சென்ற நசீம், அங்கிருந்து துபை சென்று தலைமறைவானார்.

அவர் மீது உத்தர பிரதேசத்தில் மட்டும் 554 மோசடி வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. லக்னௌ பணமோசடி தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்று வந்தன. கடந்த ஆண்டு ஏப்ரலில் அவர் தலைமறைவு பொருளாதார குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். டிசம்பரில் நசீம் மற்றும் அவரது குழுமத்துக்குச் சொந்தமான ரூ.127.98 கோடி மதிப்பிலான நிலத்தை நீதிமன்றம் முடக்கியது. அமலாக்கத் துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகள் நசீம் மீது பல்வேறு வழக்குகளைப் பதிவு செய்து அவரை தீவிரமாகத் தேடி வந்தன.

ஐக்கிய அரபு அமீரகத்தில் பதுங்கி இருந்த அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தியாவில் அவர் மீதான வழக்குகள், கைது ஆணை உள்ளிட்ட விவரங்கள் அந்நாட்டு அரசுக்கு கடந்த ஜனவரியில் அனுப்பி வைக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் துபையில் பதுங்கியிருந்த அவரை ஐக்கிய அரபு அமீரக காவல் துறையினர் கைது செய்தனர். அவர் விரைவில் விசாரணைக்காக இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவார் என்று தெரிகிறது.

## நடிகர் திலீப் விடுவிக்கப்பட்டதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அரசு மேல்முறையீடு

**திருவனந்தபுரம், மார்ச் 1:**

மேல்முறையீட்டு மனுவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: நடிகை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் நடிகர் திலீப் மற்றும் சார்லி தாமஸ், சனில் குமார், சரத் ஆகிய 4 பேர் விடுவிக்கப்பட்டிருப்பது சட்ட விரோதமானது. மேலும் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட 6 பேருக்கு இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 376 டி-யின்கீழ் வாழ்நாள் சிறைத் தண்டனை வழங்கியிருக்க வேண்டும்.



ஆனால் நடிகை கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட இந்த வழக்கில் குறைந்தபட்ச தண்டனையான 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் அபராதத்தை மட்டுமே எர்ணாகுளம் முதன்மை அமர்வு நீதிமன்றம் விதித்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

பாதிக்கப்பட்ட நடிகையை கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்ததுடன் அதை படம்பிடித்து பிறருக்கு பகிர்ந்து கொடூர குற்றச் செயல்களில் குற்றவாளிகள் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, குற்றத்தின் தன்மை மற்றும் சூழலை கருத்தில்கொண்டு இந்த வழக்கில் இருந்து நடிகர் திலீப் உள்பட 4 பேர் விடுவிக்கப்பட்டதை ரத்து செய்ய வேண்டும். குற்றவாளிகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட தண்டனை மற்றும் அபராதத்தை மேலும் அதிகரிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கேரள அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு மீது உயர்நீதிமன்றத்தில் அடுத்த வாரம் விசாரணை நடைபெறவுள்ளது.

கடந்த 2017, பிப்ரவரி 17-ஆம் தேதி நடிகை பயணித்த காரில் அத்துமீறி நுழைந்த ஒரு கும்பல், அவரைக் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்ததுடன் அதை செல்போனில் படம்பிடித்தது. கேரளத்தையே உலுக்கிய இந்தச் சம்பவம் நடந்த சில நாள்களிலேயே முக்கியக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். வழக்கின் நீதிமன்ற விசாரணை 2020, ஜனவரியில் தொடங்கியது. சம்பவம் நிகழ்ந்து 8 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஆண்டு நவ. 25-ஆம் தேதி விசாரணை முடிவடைந்த நிலையில் டிசம்பரில் தீர்ப்பு வழங்கப்பட்டது

## சபரிமலை தங்கக் கொடிமர முறைகேடு வழக்கு: நடிகர்கள் மோகன்லால், திலீப்பிடம் வாக்குமூலம் பதிவு

**திருவனந்தபுரம், மார்ச் 1:**

சபரிமலை ஐயப்பன் கோயிலில் துவாரபாலகர் சிலைகள் மற்றும் கருவறைக் கதவுகளின் தங்கக் கவசங்களில் தங்கம் மாயமானதாக சிறப்பு புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) விசாரணை மேற்கொண்டுவரும் நிலையில், கடந்த 2017-இல் புதிய தங்கக் கொடிமரம் நிறுவப்பட்டதில் முறைகேடு நடந்ததாகக் கூறப்படும் விவகாரமும் பூதாகரமாகி வருகிறது.

உயர்நீதிமன்றம், மாநில ஊழல் தடுப்புப் பிரிவினர் முதல் கட்ட விசாரணை மேற்கொள்ள கடந்த பிப். 9-ஆம் தேதி உத்தரவிட்டது. ஒரு மாதத்துக்குள் விசாரணையை நிறைவு செய்து, அறிக்கை தாக்கல் செய்யவும் உத்தரவிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து, நன்கொடையாளர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யும் நடவடிக்கையை ஊழல் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். மொத்தம் 27 நன்கொடையாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் மத்திய அமைச்சர் சுரேஷ் கோபி, திரைப்பட இயக்குநர் ஷாஜி கைலாஷ், நடிகர்-எழுத்தாளர் ரெஞ்சி பணிக்கர், தயாரிப்பாளர் சுரேஷ் குமார் உள்ளிட்டோரிடம் ஏற்கெனவே வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, திருவனந்தபுரத்தில் நடிகர் மோகன்லாலிடமும், கொச்சியில் நடிகர் திலீப்பிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதுவரை 22 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. மேலும் நன்கொடையாளர்கள் யாரேனும் உள்ளனரா என்பதைக் கண்டறியும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறினர்.

## இந்தியா வந்தார் கனடா பிரதமர் மார்க் கார்னி: மார்ச் 2-இல் பிரதமர் மோடியுடன் பேச்சு.

**புதுடெல்லி, மார்ச் 1:**

4 நாட்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு வந்துள்ளார் மார்க் கார்னி. மகாராஷ்டிர மாநிலம், மும்பையை வந்தடைந்ததும் அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'உலக அளவில் வேகமாக வளரும் பெரும் பொருளாதாரம் இந்தியா. மும்பையில் இந்திய தொழில் துறையினருடன் கலந்துரையாடி, கனடா தொழில் துறையினர் மற்றும் பணியாளர்களுக்கான புதிய வாய்ப்புகளைத் திறக்கும் கூட்டுறவை ஏற்படுத்தவுள்ளேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

மார்ச் 2-இல் பிரதமருடன் சந்திப்பு: ஞாயிற்றுக்கிழமை தில்லிக்கு செல்லும் கார்னி, பிரதமர் மோடியுடன் திங்கள்கிழமை இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, முக்கியக் கனிமங்கள், வேளாண்மை, கல்வி, ஆராய்ச்சி, புத்தாக்கம், மக்கள் ரீதியிலான தொடர்புகள் உள்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை மேற்கொள்ளவுள்ளனர். வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரையும் கார்னி சந்தித்துப் பேசவுள்ளார். இந்தியா-கனடா உறவுகள் சீரடைந்துவரும் தருணத்தில், அந்நாட்டு பிரதமரின் இந்தியப் பயணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## 218 தரமற்ற - போலி மருந்துகள்: ஆய்வில் கண்டுபிடிப்பு

**திருவனந்தபுரம், மார்ச் 1:**

மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் விற்பனையகங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 215 மருந்துகள் தரமற்றவையாகவும், 3 மருந்துகள் போலியாகவும் இருந்ததைக் கண்டறிந்துள்ளதாக மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

அவற்றை உற்பத்தி செய்த நிறுவனங்களிடம் அதுகுறித்து விளக்கம் கேட்கப்பட்டுள்ளதாகவும், அதன்பேரில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த மாதத்தில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்து மாதிரிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அவற்றில் காய்ச்சல், சளித் தொற்று, கிருமித் தொற்று, ஜீரண மண்டல பாதிப்பு உள்ளிட்ட பாதிப்புகளுக்கு பயன்படுத்தப்படும் 215 மருந்துகள் தரமற்றவையாகவும், 3 மருந்துகள் போலியானதாகவும் இருந்தது கண்டறியப்பட்டது. இதையடுத்து அதன் விவரங்கள் மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

## அதிகளவில் குப்பை சேரும் கேதார்நாத் கோயில்: சுற்றுச்சூழல் மோசமடைவதாக புகார்




**புதுடெல்லி, மார்ச் 1:**

உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள பிரசித்தி பெற்ற புண்ணியத்தலங்களாக கேதார்நாத், பத்ரிநாத், கங்கோத்ரி, யமுனோத்ரி ஆகியவை உள்ளன. இவை சார்தாம் என்று அழைக்கப்படுகின்றன. இந்துக்கள் இந்த சார்தாம் கோயில்களுக்கு புனிதச் சுற்றுலா சென்று வருவதை புண்ணியமாகக் கருதுகின்றனர். குறிப்பாக கேதார்நாத் கோயிலுக்கு அதிக அளவில் பக்தர்கள் வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக இந்தக் கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் இந்தக் கோயிலைச் சுற்றியும், மலைப்பகுதிகளிலும் அதிக அளவில் குப்பை சேர்வதாக ஒரு ஆய்வில் தெரியவந்துள்ளது. 2025-ம் ஆண்டில் மட்டும் இங்கு 21.4 மெட்ரிக் டன் குப்பை சேர்ந்துள்ளதாக அந்த ஆய்வு தெரிவிக்கிறது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 22 சதவீதம் அதிகமாகும். அதிக அளவில் இங்கு குப்பை சேர்வதால் இப்பகுதியின் சுற்றுச்சூழல் மோசமாகும் நிலை ஏற்படுவதாக அந்த ஆய்வு தெரிவிக்கிறது. இந்நிலையில் ரூ.3.13 கோடி மதிப்பிலான திடக்கழிவை பதப்படுத்தி வெளியேற்றும் கருவிகளை வாங்குவதற்காக திட்டமும் இன்னும் நிலுவையில் உள்ளதாக கேதார்நாத் கோயில் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## 79 நாடுகளுக்கு 99 முறை பயணங்கள்! 19 நாடாளுமன்றங்களில் உரை! பிரதமர் மோடி சாதனை!

**புதுடெல்லி, மார்ச் 1:**

பிரதமர் நரேந்திர மோடி 2014 ஆம் ஆண்டு பிரதமராக பதவியேற்றத்தில் இருந்து பிப்ரவரி 2026 வரை 79 நாடுகளுக்கு 99 முறை பயணங்கள் மேற்கொண்டு 19 வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றி சாதனை படைத்துள்ளார். இது இந்தியாவின் நிர்வாகத் தலைவருக்கான சாதனை என பாஜக பாராட்டியிருப்பதுடன் இந்த சாதனையை "இந்தியாவின் வளர்ந்து வரும் உலகளாவிய அந்தஸ்து, ராஜதந்திர நம்பகத்தன்மை, தலைமைத்துவம் மற்றும் தார்மீக அதிகாரத்தின் பிரதிபலிப்பு" என்று கூறியுள்ளது.



இந்திய பிரதமர்களில் அதிகயளவில் வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றியவர்களில், குறிப்பாக அனைத்து காங்கிரஸ் பிரதமர்களையும் விட மோடி அதிகமாக உரையாற்றியுள்ளார்.

"பிரதமர் மோடி வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் பேசும்போது, உலகமே அவரது பேச்சை கேட்கிறது. அவர் அமெரிக்க காங்கிரஸின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றியதிலிருந்து இஸ்ரேலின் நெசெட் வரை," என்று இதுவரை 19 வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றி உள்ளார் என்று பாஜக 'எக்ஸ்' பக்கத்தில் பதிவிட்டுள்ளது. இந்த சாதனையை அது "இந்தியாவின் வளர்ந்து வரும் உலகளாவிய அந்தஸ்து, ராஜதந்திர நம்பகத்தன்மை, தலைமைத்துவம் மற்றும் தார்மீக அதிகாரத்தின் பிரதிபலிப்பு" என்றும் அந்தந்த நாடுகளுக்கிடையேயான வர்த்தகம் மற்றும் நட்புறவைவும் வலுப்படுத்தியுள்ளார்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் ஏழு வெளி நாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றியுள்ளார், இந்திரா காந்தி நான்கு மற்றும் ஜவஹர்லால் நேரு மூன்று நாடாளுமன்றங்களில் உரையாற்றியுள்ளார் . முன்னாள் பிரதமர்கள் ராஜீவ் காந்தி மற்றும் அடல் பிஹாரி வாஜ்பாய் ஆகியோர் தலா இரண்டு வெளிநாட்டு நாடாளுமன்றங்களில் உரையாற்றியுள்ளனர்.

2014 ஆம் ஆண்டு, பதவியேற்ற சிறிது நேரத்திலேயே, மோடி ஆஸ்திரேலியா, பிஜி, நேபாளம் மற்றும் பூட்டான் நாடாளுமன்றங்களில் உரையாற்றினார். அடுத்த ஆண்டு, மார்ச் மாதம் மொரிஷியஸ் தேசிய சட்டப்பேரவையிலும், இலங்கை நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார். அதே ஆண்டில், மங்கோலியா நாடாளுமன்றத்தில் பெரிதும் பாராட்டப்பட்ட உரையை ஆற்றினார், பின்னர் நவம்பரில் இங்கிலாந்து நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார். டிசம்பர் 2015 இல் ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். ஜூன் 2016 இல் அமெரிக்க காங்கிரஸின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றியபோது அனைத்து உரைகளுக்கும் தாயாக இருந்தார். 2018 இல் அவர் உகாண்டா நாடாளுமன்றத்திலும், 2019 இல், மாலத்தீவு நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார். 2023 இல் மீண்டும் அமெரிக்க காங்கிரஸின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றினார்.

அமெரிக்க காங்கிரஸில் ஆற்றிய இரண்டாவது உரையில், "ஜனநாயகம் என்பது விவாதத்தையும் உரையாடலையும் வரவேற்கும் கருத்து. ஜனநாயகம் என்பது சிந்தனைக்கும் வெளிப்பாட்டிற்கும் சிறகுகளைத் தரும் கலாசாரம். பழங்காலத்திலிருந்தே இத்தகைய மதிப்புகளைக் கொண்டிருப்பது இந்தியாவுக்கு ஆசீர்வாதம். ஜனநாயக உணர்வின் பரிணாம வளர்ச்சியில், இந்தியா ஜனநாயகத்தின் தாய்."

2024 ஆம் ஆண்டு கயானா நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். ஜூலை 2025 இல் கானா நாடாளுமன்றத்தில் உரையாற்றினார், அதைத் தொடர்ந்து அதே மாதத்தில் டிரினிடாட் மற்றும் டொபாகோ நாடாளுமன்றத்திலும் நமீபியா நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார். அந்த ஆண்டின் பிற்பகுதியில், அவர் எத்தியோப்பியா நாடாளுமன்றத்திலும் உரையாற்றினார்.

பிப்ரவரி 2026 நிலவரப்படி, மோடி 79 நாடுகளுக்கு 99 முறை சர்வதேச பயணங்களை மேற்கொண்டு 19 நாடாளுமன்றங்களில் உரையாற்றி மோடி சாதனை படைத்துள்ளார்.

## மத்திய கிழக்கில் உள்ள இந்தியர்களைப் பாதுகாக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க ராகுல் வலியுறுத்தல்



**புதுடெல்லி, மார்ச் 1:**

மத்திய கிழக்கில் வாழும் இந்தியர்களைப் பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க, இஸ்ரேல்- ஈரான் இடையேயான ராணுவ தாக்குதல்கள் தொடங்கியதையடுத்து மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அசாதாரண சூழல் நிலவுகிறது. குறிப்பாக, இஸ்ரேலிலும் ஈரானிலும் அதன் அண்டை நாடுகளிலும் மக்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது. இந்த நிலையில், அப்பகுதிகளிலுள்ள இந்திய குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய அரசை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து, அவர் தமது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'அமெரிக்க-இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கும் இடையேயான தாக்குதல்கள் அதிகரிப்பது மிகுந்த வருத்தமளிக்கிறது. இந்நிலையில், மத்திய கிழக்கில் உள்ள ஒவ்வொரு இந்திய குடிமக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதே நமது தலையாயக் கடமையாகும். அதற்குத் தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை உடனடியாகமேற்கொள்ளுமாறு இந்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஈரானில் பள்ளி மீது தாக்குதல்: 40 மாணவிகள் பலி

**ஹோர்மோஸ்கான், மார்ச் 1:**

ஈரானில் பள்ளி மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 40 மாணவிகள் பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் உள்ள ஹோர்மோஸ்கான் மாகாணத்தில் உள்ள மினாப் நகரில் பெண்கள் தொடக்கப்பள்ளி மீது இஸ்ரேல் – அமெரிக்கா சனிக்கிழமை வான்வழித் தாக்குதல் நடத்தியது. இந்த சம்பவத்தில் 40 மாணவிகள் பலியானதாக அந்நாட்டு அரசு நடத்தும் செய்தி நிறுவனமான 'இர்னா' தெரிவித்துள்ளது. மேலும் 45 பேர் காயமடைந்துள்ளனர். மினாப் நகரில் ஈரானின் புரட்சிகர காவல் படையின் தளம் அமைந்துள்ளது. இந்தத் தாக்குதல் நடவடிக்கை குறித்து அமெரிக்காவோ அல்லது இஸ்ரேலோ இதுவரை எந்தவொரு தகவலையும் வெளியிடவில்லை. ஈரானின் தலைநகர் தெஹ்ரானின் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இணைந்து சனிக்கிழமை வான்வழித் தாக்குதல்களை நடத்தின. இதற்கு பதிலடியாக மத்திய கிழக்கில் அமைந்துள்ள பஹ்ரைன், குவைத், கத்தார், சௌதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபி உள்ளிட்ட நாடுகளிலுள்ள அமெரிக்க தளங்களைக் குறிவைத்து ஈரானும் தாக்குதல் நடத்தியுள்ளது.

## பாக். போர் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய ஆப்கானிஸ்தான்! விமானி சிறைப்பிடிப்பு!

**காபுல், மார்ச் 1:**

பாகிஸ்தானின் போர் விமானம் ஆப்கானிஸ்தானில் சுட்டு வீழ்த்தப்பட்டு அதன் விமானி உயிருடன் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் காபுல், கந்தாஹர் உள்ளிட்ட நகரங்களைக் குறிவைத்து கடந்த வெள்ளிக்கிழமை (பிப். 27) பாகிஸ்தான் ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதனால், இருநாடுகளுக்கும் இடையில் மோதல்கள் வெடித்துள்ளன. இந்த நிலையில், ராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட பாகிஸ்தானின் போர் விமானம் ஒன்று ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் சனிக்கிழமை அன்று தெரிவித்துள்ளனர்.இதுகுறித்து, கிழக்கு ஆப்கானிஸ்தான் ராணுவத்தின் செய்தித்தொடர்பாளர் வஹிதுல்லா முஹம்மதி கூறுகையில், சுட்டு வீழ்த்தப்பட்ட பாகிஸ்தான் போர் விமானத்தின் விமானி உயிருடன் சிறைப்பிடிக்கப்பட்டதை உறுதி செய்துள்ளார். இருப்பினும், இந்தச் சம்பவம் குறித்து பாகிஸ்தான் ராணுவம் தரப்பிலிருந்து எந்தவொரு கருத்தும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

# ஈரான் - அமெரிக்கா இடையில் மத்தியஸ்தம் செய்யத் தயார்! - இந்தோனேசியா அறிவிப்பு!

**தெஹ்ரான், மார்ச் 1:**

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையில் போர்நிறுத்தம் கொண்டுவர மத்தியஸ்தம் செய்வதற்குத் தயார் என இந்தோனேசிய அதிபர் பிரபாவோ சுபியாண்டோ அறிவித்துள்ளார்.

ஈரானின் தலைநகர் தெஹ்ரானின் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இணைந்து சனிக்கிழமை (பிப். 28) காலை வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இதையடுத்து, மத்திய கிழக்கில் அமைந்துள்ள பஹ்ரைன், குவைத், கத்தார், சௌதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபி உள்ளிட்ட நாடுகளிலுள்ள அமெரிக்க தளங்களைக் குறிவைத்து ஈரான் பாலிஸ்டிக் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது.



இதற்கு, மத்திய கிழக்கு நாடுகளும் பதிலடி கொடுப்போம் என அறிவித்துள்ளதால், இந்த மோதல் மிகப் பெரியளவிலான போராக உருவாகக் கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த நிலையில், இந்த மோதல்களைக் கைவிட்டு அனைத்து தரப்பினரும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுக்காண வேண்டுமென இந்தோனேசிய அரசு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து, இந்தோனேசியா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டதாவது:

"பாதுகாப்பு நிலையை மீட்டெடுப்பதற்குப் பேச்சுவார்த்தை நடத்த இந்தோனேசிய அரசு தயார்நிலையில் உள்ளது.

இருதரப்பும் ஒப்புக்கொண்டால் மத்தியஸ்தம் செய்வதற்கு இந்தோனேசிய அதிபர் தெஹ்ரான் பயணம் செய்யத் தயாராக இருக்கிறார்" எனக் கூறப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, கடந்த 2025 ஆம் ஆண்டு இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையில் நடைபெற்ற போரில் ஈரானின் முக்கிய ராணுவத் தளபதிகள், அணுசக்தி விஞ்ஞானிகள் உள்பட ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மத்திய கிழக்கு நாடுகளுக்கு விமான சேவை நிறுத்தம்!

**புதுடெல்லி, மார்ச் 1:**

மத்திய கிழக்கு நாடுகளுக்கு விமான சேவை மறு அறிவிப்பு வரும் வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேல்– ஈரான் இடையேயான ராணுவ தாக்குதல்கள் தொடங்கியதையடுத்து இஸ்ரேல் தமது வான்வெளியைப் பொது விமானப் போக்குவரத்துக்குப் பயன்படுத்த தடை விதித்துள்ளது. இதனையடுத்து, மத்திய கிழக்கு நாடுகளுக்கு விமான சேவை நிறுத்தப்பட்டுள்ளது. ஏர் இந்தியா, இண்டிகோ உள்பட முக்கிய விமான சேவைகள் அனைத்தும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இயக்கப்படவில்லை.




துருக்கிஷ் ஏர்லைன்ஸ், கத்தார் ஏர்வேஸ், ஏர் பிரான்ஸ், ஐபீரியா எக்ஸ்பிரஸ், ஜெர்மனியின் லுஃப்தான்ஸா, ஹங்கேரியின் விஸ் ஏர், ஃப்லை துபை, ஓமன் ஏர், டச்சு நாட்டின் கேஎல்எம் உள்பட முக்கிய விமான சேவைகள் பல பாதிக்கப்பட்டுள்ளன.

விமான சேவை குறித்த அண்மைத் தகவல்களை அந்தந்த விமான நிறுவனங்களின் இணைய வலைதளங்களிலும் சமூக ஊடகப் பக்கங்களிலும் பார்த்து பயணிகள் தெரிந்துகொண்டு அதற்கேற்ப தங்கள் பயணத் திட்டத்தை மாற்றிக்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# 'சரணடையுங்கள் அல்லது மரணத்தை எதிர்கொள்ளுங்கள்!' - ஈரானுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை


**வாஷிங்டன், மார்ச் 1:**

ட்ருத் சோஷியல் சமூக வலைதளப் பக்கத்தில் ட்ரம்ப் பகிர்ந்த பதிவில், "ஈரானின் புரட்சிகர இஸ்லாமியப் படையினருக்கும், ஆயுதப் படைகளுக்கும், காவல் துறைக்கும், நான் இன்றிரவு ஓர் எச்சரிக்கையை விடுக்கிறேன். உங்கள் ஆயுதங்களைத் துறந்து சரணடையுங்கள்... உங்கள் மீதான நடவடிக்கைகள் நிறுத்தப்படும். இல்லாவிட்டால், உறுதியாக மரணத்தைஎதிர்கொள்வீர்கள்" என்று எச்சரித்துள்ளார்.

மேலும், இந்தத் தாக்குதல், ஈரான் தனது அணுசக்தி மையங்களில் மீள்கட்டமைப்பு செய்வதை தடுக்கும் வகையில் நிகழ்த்தப்பட்டதாகவும் ட்ரம்ப் விளக்கமளித்துள்ளார்.

முன்னதாக, இஸ்ரேலும் அமெரிக்காவும் கூட்டாக ஈரான் மீது தீவிரத் தாக்குதலை தொடங்கியுள்ளன. இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்கா 'ஆபரேஷன் எபிக் ஃப்யூரி' (OPERATION EPIC FURY) என்று பெயரிடப்பட்டுள்ளது. பதிலடிக்கு 'ஆபரேஷன் ரோர் ஆஃப் தி லயன்' ( OPERATION ROAR OF THE LION ) என்று ஈரான் பெயர் வைத்துள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் - அமெரிக்க ராணுவ கூட்டுத் தாக்குதல் ஈரானின் அரசு கட்டிடங்கள், ராணுவ நிலைகளைக் குறிவைத்து நடத்தப்பட்டுள்ளது. ஈரான் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனியின் அதிகாரபூர்வ அலுவலகத்தையும் குறிவைத்து நடத்தப்பட்டுள்ளது.



ஈரானுடனான பேச்சுவார்த்தையில் அதிருப்தியை ட்ரம்ப் வெளிப்படுத்திய சில நாட்களிலேயே இந்தத் தாக்குதல் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈரான் அணுகுண்டை தயாரிக்க மாட்டேன் என உறுதியளிக்க வேண்டும் என்பதுதான அமெரிக்காவின் நிபந்தனையாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்தத் தாக்குதலை ட்ரம்ப் புகழ்ந்துள்ளார். "அமெரிக்கர்களுக்கான அச்சுறுத்தல்களை துடைத்தெறியும் தாக்குதல் இது. ஈரான் மீள் கட்டமைக்கும் அணு ஆயுதங்களை அழிப்பதே எங்களின் திட்டம். ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்க அமெரிக்க ஒருபோதும் அனுமதிக்காது" என்று கூறியுள்ளார். ஈரான் ராணுவம், காவல் துறைக்கு எச்சரிக்கை விடுத்துள்ள ட்ரம்ப், ஈரான் மக்களுக்கான ஒரு செய்தியையும் கூறியுள்ளார்.

அதில் ட்ரம்ப், "சக்திவாய்ந்த ஈரானிய மக்களே, இன்றிரவு உங்களுக்கு நீங்கள் விரும்பிய சுதந்திரம் கைகளில் கிட்டும். அதுவரை பாதுகாப்பாகஇருங்கள். வீடுகளை விட்டு வெளியே செல்லாதீர்கள். வெளியே ஆபத்துள்ளது. குண்டுகள் எங்கு வேண்டுமானாலும் விழக்கூடும். எல்லாம் முடியட்டும். உங்களுக்கான அரசை நீங்களே உருவாக்குங்கள். அது உங்களிடமே விடப்படும்" என்று ட்ரம்ப் கூறியுள்ளார்.

## ஈரான் ஏவுகணை: டிரம்ப்பின் புகாரை மறுத்த அமெரிக்கா உளவுத்துறை

**வாஷிங்டன், மார்ச் 1:**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப், ஈரான் விரைவில் அமெரிக்காவைத் தாக்கக்கூடிய ஏவுகணைகளைத் தயாரித்து வருவதாகக் கூறியிருந்தார். ஆனால், அவரது இந்தக் கூற்றை அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் ஆதரிக்கவில்லை. இது மிகைப்படுத்தப்பட்ட தகவல் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். ஈரானின் வசதிகள் சேதமடைந்துள்ளதாலும், ஏவுகணைகளைச் சுமந்து செல்லும் வாகனங்களை உருவாக்க வேண்டியிருப்பதாலும், ஈரான் வெகு ரக ஏவுகணைகளை உருவாக்க இன்னும் பல ஆண்டுகள் ஆகும் என்று அவர்கள் விளக்கியுள்ளனர்.

## பாலஸ்தீன சிறுவனைச் சுட்டுக்கொன்ற இஸ்ரேலியப் படைகள்

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரையில் இஸ்ரேலியப் படைகள் நடத்திய ராணுவத் தாக்குதலின் போது, 14 வயது பாலஸ்தீன சிறுவன் சுட்டுக்கொல்லப்பட்டார். முகாமில் நடந்த இந்த நடவடிக்கையின் போது, அந்த சிறுவன் மிக நெருக்கமான தூரத்திலிருந்து சுடப்பட்டதாக பிபிசி (BBC) விசாரணையில் தெரியவந்துள்ளது. சிறுவன் ரத்தம் வெளியேறி உயிரிழக்கும் வரை இஸ்ரேலியப் படைகள் அந்த இடத்திலேயே நின்று வேடிக்கை பார்த்ததாக வீடியோ ஆதாரங்கள் மற்றும் நேரில் பார்த்தவர்களின் சாட்சியங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## இந்தியா-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் மறுசீரமைக்கப்படலாம்: பியூஷ் கோயல்

குறிப்பிட்ட நாடுகளுக்கு எதிராக ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் விதித்த வரிகளை அமெரிக்க உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது. இதன் காரணமாகச் சூழல்கள் மாறினால், அமெரிக்காவுடன் முன்மொழியப்பட்ட வர்த்தக ஒப்பந்தத்தை இந்தியா "மறுசீரமைக்கும்" என்று ஒன்றிய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார். ஒரு வர்த்தக ஒப்பந்தம் என்பது வரிகளைப் பற்றியது மட்டுமல்ல, அதில் பல கூறுகள் உள்ளன என்றும், சூழலுக்கு ஏற்ப அது சமநிலைப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பொலிவியாவில் விமான விபத்து - 15 பேர் உயிரிழப்பு!

பொலிவியாவில் கரன்சி நோட்டுகளை எடுத்துச் சென்ற ராணுவ சரக்கு விமானம் விபத்தில் சிக்கியதில் 15 பேர் உயிரிழந்தனர். 30 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று மாலை 6.15 மணிக்கு (உள்ளூர் நேரப்படி) சாண்டா க்ரஸ் நகரிலிருந்து எல் ஆல்டோ சர்வதேச விமான நிலையத்துக்கு வந்துகொண்டிருந்த C-130 ஹெர்குலீஸ் விமானம் தரையிறங்கும் போது ரன்வேயை விட்டு வழுவி அருகிலிருந்த வாகனங்களை மோதியது. இந்த விபத்தில் சிக்கி 15 பேர் உயிரிழந்துள்ளனர். 30க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் .பின்னர் பொலிவியன் விமானப்படை, விபத்தில் சிக்கியது தங்களது விமானம் என உறுதிப்படுத்தியது. இந்த விமானம் வங்கிக் காசோலைகளை ஏற்றிச் சென்றதாக பாதுகாப்புத்துறை தெரிவித்தது. மேலும் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

## இஸ்ரேல் - ஈரான் போர்: செங்கடலில் கப்பல் போக்குவரத்து மீது ஹௌதிகள் மீண்டும் தாக்குதல்

இஸ்ரேலின் தாக்குதலால் செங்கடலில் கப்பல் போக்குவரத்து மீதான தாக்குதல்களை ஹௌதி கிளர்ச்சியாளர்கள் மீண்டும் தொடங்கியுள்ளனர்.

ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தத் தாக்குதலுக்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது.

இந்த நிலையில், செங்கடல் வழித்தடத்தில் கப்பல் போக்குவரத்துமீதுமீண்டும் ஈரான் ஆதரவுயேமனின் ஹௌதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதலைத் தொடங்கவுள்ளனர்.

முன்னதாக, இஸ்ரேல் - காஸா போரின்போது செங்கடலில் ஹௌதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். தொடர்ந்து, காஸாவுடன் இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொண்டதால், செங்கடலில் தாக்குதலை நிறுத்தியது.

இந்த நிலையில், தற்போது மீண்டும் செங்கடல் வழித்தடத்தில் ஹௌதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதலைத் தொடங்கியுள்ளனர்.

இதனிடையே, போரில் ஈரான் சரணடைய வேண்டும் அல்லது மரணத்தை எதிர்கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் போர்: சர்வதேச அளவில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் - பிரான்ஸ் அதிபர்!

**பாரீஸ், மார்ச் 1:**

அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் இடையேயான தாக்குதல் நடவடிக்கைகள் சர்வதேச அளவில் அமைதிக்குச் சீர்குலைவு விளைவிக்கக்கூடுமென பிரான்ஸ் அதிபர் கவலை தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்கா, இஸ்ரேல்- ஈரான் இடையேயான ராணுவ தாக்குதல்கள் தொடங்கியதையடுத்துமத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அசாதாரணசூழல் நிலவுகிறது. குறிப்பாக, இஸ்ரேலிலும் ஈரானிலும் அதன் அண்டை நாடுகளிலும் மக்கள் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது. இந்த நிலையில், ஈரான் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைக்க பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் வலியுறுத்தியுள்ளார். அவர் தெரிவித்திருப்பதாவது :



'அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கும் இடையேயான போர், சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் கடும் விளைவுகளை அளிக்கிறது. முடிவெடுக்க வேண்டிய இத்தருணத்தில், எங்களது தேச எல்லை, குடிமக்கள் மற்றும் தேச நலன்சார் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான ஒவ்வொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், எங்களது நெருங்கிய கூட்டாளிகளைப் பாதுகாக்கத் தேவையானநடவடிக்கைகளை எடுக்கவும் அவர்கள் வேண்டிக் கேட்டுக்கொண்டால் பிரான்ஸ் தயாராக உள்ளது.

அதிகரிக்கும் தாக்குதல்கள் அனைவருக்குமே ஆபத்தானது. இது நிறுத்தப்பட்ட வேண்டும். தமது அணுசக்தி மற்றும் ஏவுகணைத் திட்டங்களை நிறுத்துவதற்கானமற்றும் அதன் பிராந்திய நிலைத்தன்மையை சீர்குலைக்கும் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான பேச்சுவார்த்தையில் நல்ல நம்பிக்கை வைத்து ஈடுபடுவதைத் தவிர்த்து இப்போது அதற்கு வேறு வழியில்லை என்பதை ஈரானிய தலைமைப் புரிந்துகொள்ள வேண்டும். மத்திய கிழக்கில் உள்ள அனைவரது பாதுகாப்புக்கும் இதுகட்டாயம் அவசியமாகிறது. ஈரானிய மக்களும் தங்களது எதிர்காலத்தை சுதந்திரமாக கட்டமைக்க வேண்டும்.

ஈரானிய தலைமையால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளால் அத்தலைமை தகுதி இழந்துவிட்டது. மக்களுக்கே அதிகாரம் விரைவில் வழங்கப்பட வேண்டும். பிரான்ஸ் தமது சர்வதேச பொறுப்புகளைப் பற்றிய விழிப்புணர்வுடனும், தமது கொள்கைகள் மீதான நம்பிக்கையின்பாலும் உறுதிபூண்டு, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் அவசர ஆலோசனைக் கூட்டத்துக்கு அழைக்கிறது. இது குறித்து எங்களது ஐரோப்பிய கூட்டாளிகளுடனும் மத்திய கிழக்கில் உள்ள தோழமை நாடுகளுடனும் நான் நெருங்கிய தொடர்பில் இருக்கிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.



# ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்கா திடீர் தாக்குதல்

## வளைகுடா நாடுகளின் தமிழர்களுக்கு உதவ கட்டுப்பாட்டு அறை: முதல்வர் அறிவிப்பு



## மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை: ரூ.9.81 லட்சம் கோடியாக அதிகரிப்பு

## இந்திய நிறுவனங்கள் முதலீட்டை அதிகரிக்க வேண்டும்: பிரதமர் மோடி அழைப்பு

## வார ராசிபலன்கள்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 01.03.2026 ஞாயிற்றுக்கிழமை இலவச இ–பேப்பர்